Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஆவணி-25 | 10-09-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -205




## இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில்

# தமிழ் மக்களின் கௌரவமான வாழ்விற்கு

# சர்வதேசம் உத்தரவாதம் அளிக்கவேண்டும்!

## ஐ.நா.அபி.திட்ட பிரதிநிதிகளிடம் புலிகள் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் உள்ளூரில் தமிழ் மக்களின் கௌரவமான வாழ்வுக்கு சர்வதேச சமூகம் செயல்திட்டம் ஒன்றின் மூலம் உத்தரவாதம் அளிக்கவேண்டுமென தமிழீழ அரசில்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஐ.நா அபிவிருத்தித் திட்ட இலங்கைக்கான பிரதிநிதியிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.**

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சிறிலங்காவிற்கான வதிவிடப் பிரதிநிதி மினகல்பேர்மியோவிற்கும். அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.இச்சந்திப்பின் போதே மேற் கண்டவாறுஅரசியல்துறைப் பொறுப்பாளர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் பணி இலங்கை அரசின் கையில் தான் இருக்கிறது. கொடுமையான யுத்தத்தால் பாதிக்கப்பட்ட – சமாதானத்தின் பிரதிபலன்கள் மறுக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளைச் சரியான வழிமுறைகளில் மேற்கொள்வதில் ஐக்கிய

(iv ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவருடன் த.கூட்டமைப்பினர் பேச்சு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய இந்தியத் தூதுவரை கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவராலயத்தில், நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

புதிய இந்தியத் தூதுவராக நிருபமா ராவ் பதவியேற்ற பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரைச் சந்தித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். நேற்றைய சந்திப்புக் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்; இடைக் கால தன்னாட்சி அதிகாரசபை அரசை நடை

(iv ஆம் பக்கம் பார்க்க)

## மீளப் பேச்சுக்கள் ஆரம்பிப்பது குறித்து எமது விருப்பை வெளிப்படுத்தினோம்!

### ஐ.நா.அபிவிருத்தித் திட்ட இலங்கைக்கான பிரதிநிதி

(கிளிநொச்சி)

மீளப் பேச்சுக்களை இயலுமான வரை விரைவாகத் தொடங்குவது பற்றி எமது விருப்பத்தை வெளிப்படுத்தியதோடு, அதற்கு எவ்வாறு உதவிகளை வழங்குவதென்றும் அரசியல்துறைப்பொறுப்பாளருடன் கலந்துரையாடியதாக ஐ.நா அபிவிருத்தித்திட்ட இலங்கைக்கான பிரதிநிதி மினகல் பேர்மியோ கூறியுள்ளார்.

நேற்றைய சந்திப்பின் பின் செய்தியாளர்களுக்குக் கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சமாதான முன்னெடுப்புக்கள் இன்னும் முன்னேற்றப் பாதையை அடையவில்லையெனவும், வடக்குக் கிழக்கு மக்கள் பயன்பெறத்தக்க உதவிகளை வழங்க விடுதலைப்புலிகள் ஒருவழியை கண்டுபிடிப்பார்கள் என்று தாம்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஆலோசனைக்குழு ஒன்றை அமைக்க ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் முயல்கிறதாம்!

(கொழும்பு)

சமாதானம் மற்றும் சமரசப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தேசிய ஆலோசனைக்குழு .ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஈடுபட்டுள்ளது எனச் சனாதிபதி செயலக அதிகாரியான கரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இக்குழு அமைப்பது மிகவும் முக்கியத்துவம் மிக்கது. இது சமாதான முயற்சிகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

அதேவேளை அது வெளிப்படையானதாகவும் அது பற்றி அனைவருக்கும் தெரியப் படுத்தப்படவும் வேண்டும். கடந்த அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்திய விதம் குறித்துக் கடுமையான விமர்சனங்கள் இருக்கின்றன.

இவற்றிற்குத் தீர்வாகவே இந்த தேசிய மட்டத்திலான ஆலோசனைக்குழு உருவாக் கப்படுகிறது.

எப்பொழுதும் முன்னதாகவே அரசாங்கம்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதை நோர்வேத் தரப்பு நிறுத்த வேண்டும்

### -நோர்வேத் தூதரகம் முன் பிக்குகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் இணைந்து நேற்று கொழும்பு மத்தியில் அமைந்துள்ள நோர்வேத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ள னர்.

சிங்களத் தேசிய வாதிகளெனத் தம்மை அடையாளப்படுத்திய இவர்கள் ஸ்கண்டி நேவிய நாடுகள் சமாதான நடவடிக்கையில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டக்காரர்கள் விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஊர்வலமாக ஆரம்பித்து கொழும்பு மத்தியில் அமைந்துள்ள நோர்வேத் தூதரகத்தைச் சென்றடைந்தனர். இவ் ஆர்ப்பாட்டத்தின் போது அவர்கள் நோர்வேக்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிரான சுலோகங்களைத் தாங்கியவாறு "இந் நாடு பௌத்தர்களுக்குச் சொந்தமானது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை கொல்" எனச் சத்தமிட்டவாறு சென்றனர். இவ் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## மா.அமைச்சு அலுவலகத்திற்கு முன்னால் ஜே.வி.பி.இற்கெதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜே.வி.பியினருக்கெதிராக அநுராதபுரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள வடமத்திய மாகாண அமைச்சரின் காரியாலயத்திற்கு முன்பாக பொதுமக்கள் பெருமளவில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஜே.வி.பிஇற்கும், அக்கட்சியின் பிரசாரத்திற்கும் ஆதரவு வழங்கும் ஆசிரியர்களை, அநுராதபுரப் பாடசாலைகளிலிருந்து விலத்திவிடுமாறு ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பாடசாலைப் பிள்ளைகளை ஜே.வி.பியினர் தங்களது அரசியற் பிரசாரத்திற்குப் பாவிக்க முனைவதாகவும், அதற்குச் சில ஆசிரியர்கள் உடந்தையாக இருப்பதாகவும் கூறியே பல பெற்றோர்களும் நலன்விரும்பிகள் மற்றும் பொதுமக்களும் (iv ஆம் பக்கம் பார்க்க)

## இந்.இழுவைப் படகுகள் இரண்டு மன்னார்க் கடலில் தீப்பற்றி எரிந்தன

மன்னார் கடற்பகுதியில் அத்துமீறி மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த இரண்டு இந்திய இழுவை மீன்பிடிப்படகுகள் தீப்பற்றி எரிந்துள்ளன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் மன்னார் குருசுப்பாடுக் கடற்பகுதியில் இடம்பெற்றுள்ளது. அதிகாலை மன்னார் கடற் பரப்பில் 500இற்கும் அதிகமான இந்திய இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபட்டிருந்தன. அவ் வேளை, திடீரென இரு இழுவைப் படகுகள் தீப்பற்றிக் கொண்டன. இதில் ஒரு படகு முற்றாக எரிந்து நீரில் மூழ்கியுள்ளது சம்பவத்தை அடுத்து

(iv ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயத்துடன் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சுன்னாகம் பொலிசாரால் யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் பகுதியிலிருந்தே இச் சடலத்தைப் பொலிசார் கண்டெடுத்ததாகவும் தெரியவருகிறது. (27)

## பிரதமருக்கு ஜே.வி.பி.எச்சரிக்கை

புகையிரத அதிகார சபையை இரத்துச் செய்து மீண்டும் புகையிரதத் திணைக் களமாக்க வேண்டும் .அப்படித் தவறினால் அரசுக்கு எதிராக தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப்படுமென ஜே.வி. பியின் தொழிற்சங்கம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளது.

கடந்த பொதுத்தேர்த

(iv ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய நல்லிணக்க சபை குறித்து சந்திரிகா ரணிலுக்கு விளக்கம்!

சனாதிபதிக்கும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையே நேற்று நடைபெற்ற சந்திப்பில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் அமைக்கப்படவுள்ள தேசிய நல்லிணக்க சபை தொடர்பாக சனாதிபதி ரணிலுக்கு விளக்கியுள்ளார் என சனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இச் சபை கட்சிகள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதனைத் தாம் தனது கட்சியுடன் கலந்தாலோசித்து விட்டு இது (iv ஆம் பக்கம் பார்க்க)

# சின்னமுத்து, ருபெல்லா நோய்களுக்கான தடுப்பூசி போடப்படும் இடங்கள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் குட்பட்ட பகுதிகளில் 16 இற்கும் 21 வயதிற்கும் உட்பட்ட இளைஞர், யுவதிகள் இருபாலாருக்குமான சின்னமுத்து-ருபெல்லா நோய்த் தடுப்புக்கு இன்றும் நாளையும் மருந்துகள் வழங்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் கீழ்க்குறிக்கப் பெற்றுள்ள பிரதேசசங்களிலுள்ள அந்தந்த நிலையங்களில் சின்ன முத்து, ருபெல்லா தடுப்பூசிகள் போடப்படவுள்ளதெனவும், மேற்படி பிரதேசத்தில் வதியும் 16 இற்கும் 21 வயதிற்கும் உட்பட்ட இளைஞர் யுவதிகள் தங்கள் வதிவிடங்களுக்கு அண்மித்த பகுதிகளிலுள்ள நிலையங்களுக்கு தவறாது சமூகம் கொடுத்து தடுப்பூசியினைப் போட்டுக்கொள்ளும் வண்ணம் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி சுஜந்தன் வேண்டியுள்ளார்.

**கரைச்சி மேற்குப்பிரதேசம்**

வன்னேரிக்குளம்-மத்திய மருந்தகம், ஆனைவிழுந்தான்குளம்-அ.த.க.பாடசலை, அக்கராயன் சுற்றயல் கூறு மருத்துவமனை, மணியங்குளம் பாடசாலை இல-02, ஸ்கந்தபுரம்- மலேரியா தடுப்பு இயக்க அலுவலகம்,கண்ணகைபுரம்-கிராம அபிவிருத்திச் சங்கம், கோணாவில்- பொதுநோக்கு மண்டபம், யூனியன்குளம்-சிகிச்சை நிலையம், கனகபுரம்-கனகபுரம் பாடசாலை, உதயநகர்- கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், செல்வாநகர்-பொது மண்டபம், செல்வாநகர்- ஆரம்ப சுகாதார நிலையம், திருநகர்-கிராமசேவையாளர் அலுவலகம்-கணேசபுரம், சிவநகர்- ஆரம்ப சுகாதார நிலையம்,உருத்திரபுரம்-மத்திய மருந்தகமும் மகப்பேற்று மத்துவமனையும்,ஜெயந்திநகர்-கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், ஆனந்தபுரம்-மத்திய கல்லூரி,கிருஸ்ணபுரம்- கிருஸ்ணபுரம் கிராமசேவை அலுவலர் அலுவலகம், மலையாளபுரம்- மலையாளபுரம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபம், மலையாளபுரம்- சிவபாதக் கலையகம், பாரதிபுரம் பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம், அம்பாள்குளம்-ஆரம்பப்பாடசாலை,கிளிநொச்சி நகரம்- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை.

**கரைச்சி கிழக்குப்பிரதேசம்**

இராமநாதபுரம்- சிகிச்சை பராமரிப்பு நிலையம், இராமநாதபுரம் - தென்னிந்திய திருச்சபை, வட்டக்கச்சி-மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும், மாயவனூர், ஆரம்ப சுகாதார நிலையம் ,திருவையாறு -கிராம அலுவலர் அலுவலகம், இரத்தினபுரம்,திருவையாறு- கனகாம்பிகை அம்மன் சனசமூக நிலையம், மருதநகர்-சுடர் முன்பள்ளி, கனகாம்பிகைக்குளம்:- சிகிச்சை நிலையம் கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை சாந்தபுரம்.

**கண்டாவளைப்பிரதேசம்**

பரந்தன்- பரந்தன் இந்துக்கல்லூரி,முரசுமோட்டை- முருகானந்தா வித்தியாலயம்,கண்டாவளை-வைத்தியசாலை,புளியம்பொக்கணை-சிகிச்சை நிலையம்,தர்மபுரம்-ஆரம்ப சுகாதார நிலையம், கல்மடுநகர்-சிகிச்சை நிலயம், பிரமந்தனாறு-சிகிச்சை நிலையம்,புன்னை நீராவி-அ.த.க.புன்னை நீராவி, கண்ணகிநகர்-அ.த.க.கண்ணகிநகர்.

**பளைப்பிரதேசம்**

முகமாலை- சோதனைச் சாவடி, பளை-வைத்தியசாலை, தர்மக்கேணி-அ.த.க.சோரன்பற்று, தர்மக்கேணி-மாசார் பாடசாலை, இயக்கச்சி-இயக்கச்சிப் பாடசாலை.

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 26 - 08 - 1981

வீரச்சாவு 10 - 09 - 2000

## 2ஆம் லெப் குயில்

**தனபாலசிங்கம் சுவர்ணா**
**முள்ளிவாய்க்கால் மேற்கு.**

ஓயாத அலைகள் அரியாலைப்பகுதியில்
நான்காம் ஆண்டில் நனைகிறோம்
நீ இல்லை என்று விட்டால் உன் நினைவுகள்
நீங்கி விடுமோ எம்மை விட்டு
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறிடுமோ எம் கவலைகள்
என்றும் எம் மனதில் நீதானம்மா
எங்கள் தெய்வம்.

இதே நாளில் வீரச்சாவடைந்த லெப். துர்க்கா உட்பட அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

குடும்பத்தினர்

(4690)

# வடக்கு கிழக்கு மாகாணத்தில் க.பொ.த (சா/தர) மாணவர்களுக்கான கணிதபாட விசேட பரீட்சை

எதிர்வரும் 11.09.2004 சனிக்கிழமையன்று வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்குமான விசேட கணிதபாடப் பரீட்சை அந்தந்தப் பாடசாலைகளிலேயே நடாத்தப்படவுள்ளது. இதனைத்தொடர்ந்து மேலும் இரு பரீட்சைகள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. இது மாகாண மட்டத்தில் கணிதபாட அடைவை அதிகரிக்கச் செய்வதன் நோக்குடன்,விசேட செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்றது.

இப்பரீட்சைப் பெறுபேறுகள் அந்தந்த வாரத்திலேயே மதிப்பீடு செய்யப் பட்டு, பாடசாலை மட்டத்திலான பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இப்பெறு பேறுகளின் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்தகைய உருப் படிப்பகுப்பாய்வுகளைப் பாடசாலை மட்டத்தில் மேற்கொண்டு, மாணவர் கணிதபாட அடைவை உயர்த்துவதற்கு சகல அதிபர்களும், கணிதபாட ஆசிரியர்களும், அலுவலர்களும் முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடக்கு,கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(சி.10216)

# 04ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 27 - 12 - 1978

வீரச்சாவு 10 - 09 - 2000

## லெப்.துர்க்கா

**வேதநாயகம் துஸ்யந்தினி**
**(அரசியல்துறை -கிட்டு பீரங்கிப்படையணி)**

ஈன்ற தாயிலும்
ஈழத்தலைவரை – அதிகம்
நேசிக்கிறேன் என்றாய்...
பெரும் மலையளவு பலம்கொண்ட
எம் தலைவரின் பலத்தில்
சிறு மண் துணிக்கைகள் நாம்

அம் மண்துணிக்கைகள் தானும்
குறைந்து விடக் கூடாதென்றாய்...
மாவீரராகி மண்ணுள் உறங்கும்
உம் போன்ற தியாகிகளாற்றான்
தலை நிமிர்ந்து நிற்கிறது
தமிழீழம்.

10.09.2000 அன்று வீரச்சாவடைந்த அனைத்துப் போராளிகளையும், நாட்டுப்பற்றாளர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்

(சி.10349)

முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன்

# புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் பொன் விழாவை முன்னிட்டு தமிழீழ கழகங்களுக்கிடையே நடாத்தும் மாபெரும் விளையாட்டு விழா

## நடாத்தப்படவிருக்கும் விளையாட்டு நிகழ்வுகள்

*01) தமிழீழ கழகங்களிடையேயான போட்டிகள்*
■ ஆண்களுக்கானது
1.உதைபந்தாட்டம். 2.துடுப்பாட்டம் (20 பந்துபரிமாற்றல்கள்) ■ பெண்களுக்கானது 1.வலைப்பந்தாட்டம்

*02) தனிப்பட்டவர்களுக்கு* (ஒருநாள் மைதான நிகழ்வுகள்)
■ வீதி ஓட்டம் (ஆண் 15 கி.மீ, பெண் 6 கி.மீ) ■ 4x100 மீ ஆண்களுக்கு ■ 4x400 மீ ஆண்களுக்கு ■ 4x100 மீ பெண்களுக்கு ■ கலப்பு அஞ்சல் ■ 100 மீ பெண் x100 மீ ஆண் x200 மீ பெண் x 400 மீ ஆண் ■ துவிச்சக்கர வண்டி அஞ்சல் iii 4x800 மீ ஆண் ii 4x 400 மீ பெண்
■ *கயிறு இழுத்தல் (குழுஒன்றில் 7பேர்)*
01.ஆண்களுக்கானது. 02.பெண்களுக்கானது.
■ *உந்துருளி, ஈருளி சைக்கிள் மெதுவான ஓட்டம:-*
01) ஆண்களுக்கானது 02) பெண்களுக்கானது. ■ உழவு இயந்திரப் பெட்டி கொழுவல் ■ தலையணைச் சண்டை ■ முட்டி உடைத் தல் ■ பின்புறமாக ஓடுதல் (50 வயதிற்கு மேல் ஆண், பெண்)

அறிவுறுத்தல்கள்

01) தனிப்பட்டவர்களுக்கான நிகழ்வில் பங்குபற்றும் போட்டியாளர்கள் பாடசாலையில் இருந்தோ, கழகங்களுக்கூடாகவோ போட்டியில் பங்குபற்றலாம்.
02) அஞ்சல் ஓட்டத்தில் பங்குபற்றுபவர்கள் நால்வர் கொண்ட ஒரு குழுவாகப் பங்கு பற்ற வேண்டும். இவர்கள் கழகங்களுக்கூடாகவும் பாடசாலைகளுக்கூடாகவும் தனிப்பட்ட ரீதியிலும் பங்குபற்றலாம். 03) பாடசாலைக் குழுவில் பங்குபற்றுவோர் கழகங்களில் பங்கு பற்ற முடியாது.
04) கழகங்களுக்கிடையேயான போட்டிக்கு விண்ணப்பிக்கும் போது ஒவ்வொரு விளையாட்டிற்கும் ரூபா 500.00 வைப்புப் பணமாகச் செலுத்த வேண்டும். பங்குபற்றாத பட்சத்தில் பணம் மீளளிக்கப்படமாட்டாது. 05) வெளியூர் போட்டியாளர்களிற்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்
06) போட்டிகள் சர்வதேச விளையாட்டு விதிகளுக்கமைய நடைபெறும்

09)விண்ணப்பங்களை நேரடியாக எமது பாடசாலையில் அல்லது இளையோர் விளையாட்டு மையம் கிளிநொச்சியில் ஒப்படைக்கலாம்.
10) விண்ணப்ப முடிவு திகதி 20.09.2004.

(சி.9294)

# தமிழீழ மீட்பு நிதி கடன் மீளல் -2004

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

40. யா/க/1472 திரு. வயிரமுத்து மயில்வாகனம்
41. யா/க/1483 திரு. கதிரிப்பிள்ளை வல்லிபுரம்
42. யா/க/1494 திரு. இராமலிங்கம் சிவானந்தசுந்தரம்
43. யா/க/1499 திரு. மயிலு சங்கரப்பிள்ளை
44. யா/க/1532 திரு. தம்பர் சின்னத்தம்பி
45. யா/க/1562 திருமதி. சின்னத்தங்கம் சிதம்பரப்பிள்ளை
46. யா/க/1582 திரு. தம்பு தங்கராசா
47. யா/க/1584 திரு. இராமலிங்கம் பொன்னுத்துரை
48. யா/க/1594 திரு. கணபதிப்பிள்ளை தியாகராஜா
49. யா/க/1605 திருமதி. கருணாதேவி தெய்வேந்திரநாதன்
50. யா/க/1618 திரு. கதிரிப்பிள்ளை சுப்பிரமணியம்
51. யா/க/1638 திரு. சுப்பர் செல்லையா
52. யா/க/1646 திரு. வேலுப்பிள்ளை தங்கராசா
53. யா/க/1690 திரு.கந்தவனம் இராசதுரை
54. யா/க/1736 திரு. சீனிவாசன் குமாரரத்தினம்
55. யா/க/1774 திருமதி. பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்
56. யா/க/1798 திருமதி. நாமகள் பொன்னையா
57. யா/க/1883 திரு. சிதம்பரப்பிள்ளை முருகேசு
58. யா/க/2119 திருமதி. தேவராணி இராஜேஸ்வரன்
59. யா/க/2120 திரு. சிவக்கொழுந்து இரத்தினராசா
60. யா/க/2142 திருமதி. கமலமுத்து பசுபதி
61. யா/க/2209 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
62. யா/க/2256 திருமதி. தங்கம்மா உருத்திரபாக்கியம்
63. யா/க/2273 திரு. சின்னத்துரை ரகுநாதன்
64. யா/க/2294 திரு. தங்கராசா அருணகிரிராசா
65. யா/க/2377 திருமதி. விஜயராணி நாகராஜா
66. யா/க/2387 திரு.கந்தையா துரைசிங்கம்
67. யா/க/2433 திரு.கந்தையா நவரட்ணம்
68. யா/க/2482 திருமதி. சின்னக்கண்டு அருணாசலம்
69. யா/க/2483 திரு. சின்னையா மயில்வாகனம்
70. யா/க/2528 திருமதி. சறோஜினிதேவி பொன்னுத்துரை
71. யா/க/2662 திருமதி. அம்மிணி சின்னப்பு
72. யா/க/2675 திரு. சங்கரன் கிட்டிணன்
73. யா/க/2702 திரு. இராசகுலஅரியரத்தினம் மகேந்திரா
74. யா/க/2739 திரு. முத்து அருளானந்தம்
75. யா/க/2749 திரு. கனகரத்தினம் லோகநாதன்
76. யா/க/2757 திரு. தம்பு இராஜா
77. யா/க/2813 திரு. கந்தசாமி தம்பிப்பிள்ளை
78. யா/க/2819 திரு. கந்தையா இளையதம்பி
79. யா/க/2832 திரு. முத்து வேலுப்பிள்ளை
80. யா/க/2838 திரு. பொன்னையா வேலாயுதம்
81. யா/க/2881 திரு. கார்த்திகேசு சின்னத்துரை
82. யா/க/2956 திரு. கார்த்திகேசு தனபாலசிங்கம்
83. யா/க/2980 திரு. நீக்கிலாம்பிள்ளை அந்தோனிமுத்து
84. யா/க/2988 திரு. கந்தசாமி பாலேந்திரம்
85. யா/க/2991 திரு. முத்து ஆறுமுகம்
86. யா/க/3026 திரு. மயில்வாகனம் ஜெயவரதராஜா
87. யா/க/3091 திரு. அம்பலவி சண்முகம்
88. யா/க/3173 திருமதி. சுந்தரேஸ்வரி சிவசிதம்பரம்
89. யா/க/3193 திருமதி. மலர்விழி பவானந்தன்
90. யா/க/3199 திருமதி. மாலதி பிரான்சிஸ்
91. யா/க/3250 திரு. கந்தையா பொன்னம்பலம்
92. யா/க/3269 திரு. ஏகாம்பரம் தில்லையம்பலம்
93. யா/க/3280 திருமதி. இராசமலர் அந்தோனிப்பிள்ளை
94. யா/க/3285 திரு. கந்தையா சிவஞானசுந்தரம்
95. யா/க/3294 திரு. சரவணமுத்து பரமசாமி
96. யா/க/3299 திரு. கந்தையா சின்னத்துரை
97. யா/க/3366 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
98. யா/க/3464 திரு. தம்பு கணபதிப்பிள்ளை
99. யா/க/3488 திரு. சின்னத்தம்பி வீரகத்தி
100. யா/க/3527 திரு. ஐயாத்துரை சிவனேந்திரன்
101. யா/க/3540 திரு. சுப்பர் நவரத்தினம்
102. யா/க/3562 திரு. வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம்
103. யா/க/3582 திரு. வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம்
104. யா/க/3610 திரு. கணேசக்குருக்கள் உதயசங்கர்
105. யா/க/3652 செல்வி. இரத்தினசோதி நாகரத்தினம்
106. யா/க/3661 திரு. சிவராசா பாலசுந்தரம்
107. யா/க/3689 திருமதி. சிவசக்தி சின்னையா
108. யா/க/3721 செல்வி. லலிதா இராசலிங்கம்
109. யா/க/3776 திரு. மயில்வாகனம் வீரகத்தி
110. யா/க/3788 திரு. சபாபதி முருகேசு
111. யா/க/3795 திரு. கிருஸ்ணபிள்ளை சதாசிவம்
112. யா/க/3813 திரு. சுப்பையா குட்டித்தம்பி
113. யா/க/3820 திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
114. யா/க/3852 திரு. சின்னப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
115. யா/க/3865 திரு. அருளம்பலம் இராசேந்திரம்
116. யா/க/3879 திரு. சிவகுரு சிவலோகம்
117. யா/க/3881 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்
118. யா/க/4052 திரு. கல்யாணசுந்தரக்குருக்கள் கனகசபாபதி
119. யா/க/4079 திரு. வல்லிபுரம் உதயகுமார்
120. யா/க/4149 திரு. செல்லையா சித்திரவேலு
121. யா/க/4264 திரு. கணபதியார் சீனித்தம்பி
122. யா/க/4276 திரு. வல்லிபுரம் ஏரம்பு
123. யா/க/4288 திரு. தம்பையா செல்லையா
124. யா/க/4312 திரு. சிதம்பரப்பிள்ளை பெரியதம்பி
125. யா/க/4419 திருமதி. நாச்சிப்பிள்ளை சண்முகம்
126. யா/க/4422 திருமதி. கிருபைமலர் மரியதாஸ்
127. யா/க/4498 திரு. சின்னையா குணரத்தினம்
128. யா/க/4511 திரு. வல்லிபுரம் கந்தசாமி
129. யா/க/4608 திரு.பஸ்தியாம்பிள்ளை பொன்னையாபிள்ளை
130. யா/க/4635 திரு.அம்பலவாணர் கதிர்காமத்தம்பி
131. யா/க/4710 திருமதி.சரசு விசுவன்
132. யா/க/4741 திருமதி. இராசம்மா வல்லிபுரம்
133. யா/க/4762 திரு. மருதநாயகம் மகாநாயகம்
134. யா/க/4787 திரு. சின்னத்தம்பி குணரட்ணம்
135. யா/க/4809 திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு
136. யா/க/4863 திரு. கார்த்திகேசு கந்தப்பு
137. யா/க/4874 திரு. ஆறுமுகம் கதிர்காமத்தம்பி
138. யா/க/4909 திரு. வல்லிபுரம் நாராணபிள்ளை
139. யா/க/4999 திரு. சிவகுருநாதர் விஸ்வலிங்கம்
140. யா/க/5024 திருமதி. குணபூரணம் வல்லிபுரம்
141. யா/க/5139 திரு. சடையப்பிள்ளை அரியகுலதேவர்
142. யா/க/5140 திருமதி. பொன்னார் சிதம்பரப்பிள்ளை
143. யா/க/5153 திரு. கந்தப்பு ஜெயராசா
144. யா/க/5169 திரு. வேலுப்பிள்ளை சிவபாதம்
145. யா/க/5255 திரு. பிலிப் மரியதாஸ்
146. யா/க/5278 திருமதி. தேவமலர் சிவபாலேந்திரன்
147. யா/க/5314 திரு. பொன்னையா சிற்றம்பலம்
148. யா/க/5346 திரு. சங்கரப்பிள்ளை ஜெயராசசிங்கம்
149. யா/க/5426 திரு. குருநாதன் கணேசமூர்த்தி
150. யா/க/5507 திரு. வினாயகமூர்ததி அருணாசலம்
151. யா/க/5630 திரு. கந்தையா சுப்பிரமணியம்
152. யா/க/5726 திரு. கந்தன் சிவபாலன்
153. யா/க/5888 திரு. வைரமுத்து அரசரத்தினம்
154. யா/க/5931 திருமதி. மகேஸ்வரி ஏரம்பு
155. யா/க/6015 திரு. வல்லிபுரம் கந்தசாமி
156. யா/க/6022 திரு. கிட்டிணபிள்ளை சேனாதிராசா
157. யா/க/6028 திருமதி. இராசம்மா செல்லத்துரை
158. யா/க/6062 திரு. செல்லையா சோமசுந்தரம்
159. யா/க/6066 திரு. சின்னப்பொடி சுந்தரம்
160. யா/க/6082 திரு. செல்லையா சின்னத்துரை
161. யா/க/6138 திருமதி. அழகம்மா சீனித்தம்பி
162. யா/க/6194 திருமதி. இரர்சம்மா பொன்னையா
163. யா/க/6246 திருமதி. இரட்ணேஸ்வரி குணரத்தினம்
164. யா/க/6252 திரு. தம்பு செல்லத்தம்பி
165. யா/க/6283 திருமதி. அன்னம்மா சின்னையா
166. யா/க/6304 திருமதி. கலாராணி சதானந்தகுமார்
167. யா/க/6321 திரு. தாமன் தியாகராசா
168. யா/க/6348 திரு. சுப்பர் கந்தவனம்
169. யா/க/6357 திரு. குமாரசாமி கந்தவனம்
170. யா/க/6362 திரு. முருகேசு பாலகிருஷ்ணன்
171. யா/க/6377 திரு. கதிரிப்பிள்ளை கந்தையா
172. யா/க/6406 திரு. கதிரிப்பிள்ளை செல்லையா
173. யா/க/6409 திரு. இளையதம்பி செல்லையா
174. யா/க/6415 திருமதி. நாகேஸ்வரி கனநாதன்
175. யா/க/6418 திரு. ஆழ்வார் கந்தையா
176. யா/க/6436 திரு. வேலுப்பிள்ளை சின்னத்துரை
177. யா/க/6486 திரு. கந்தையா ஆறுமுகம்
178. யா/க/6500 திரு. கந்தர் சிற்றம்பலம்
179. யா/க/6509 திரு. கந்தையா செல்லப்பா
180. யா/க/6514 திரு. வேலுப்பிள்ளை நடேசன்
181. யா/க/6524 திரு. கந்தன் லிங்கன்
182. யா/க/6533 திருமதி. அக்கினெஸ் அந்தோனிப்பிள்ளை
183. யா/க/6574 திருமதி. பாக்கியம் வைத்திலிங்கம்
184. யா/க/6576 திரு. சுப்பர் சின்னத்தம்பி
185. யா/க/6612 திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி
186. யா/க/6733 திருமதி. தங்கமுத்து கந்தப்பு
187. யா/க/6745 திரு. முருகேசு கதிரவேலு
188. யா/க/6765 திரு. இளையதம்பி சின்னத்தம்பி
189. யா/க/6776 திரு. வைரமுத்து கந்தவனம்
190. யா/க/6779 திரு. ஆறுமுகம் சின்னையா
191. யா/க/6785 திருமதி. இலட்சுமிப்பிள்ளை சிற்றம்பலம்
192. யா/க/6786 திரு. காத்தான் கணபதிப்பிள்ளை
193. யா/க/6813 திருமதி. பொன்னம்மா சண்முகம்
194. யா/க/6830 திருமதி. ஜெயமணி அந்தோணிப்பிள்ளை
195. யா/க/6833 திரு. சரவணமுத்து கிருஸ்ணபிள்ளை
196. யா/க/6885 திருமதி. புவனேஸ்வரி இராசகோபால்
197. யா/க/6886 திரு. சின்னத்துரை சிவராசா
198. யா/க/6981 திருமதி. இராசம்மா ஆறுமுகம்
199. யா/க/7010 திருமதி. ஜானகி கதிரவேலு
200. யா/க/7060 திருமதி. பாக்கியம் செல்லையா
201. யா/க/7099 திரு. சின்னத்தம்பி மார்க்கண்டு
202. யா/க/7116 திரு. வல்லிபுரம் கந்தசாமி
203. யா/க/7128 திரு. சிலம்பு கந்தப்பு
204. யா/க/7156 திருமதி. கமலாதேவி நற்குணம்
205. யா/க/7172 திரு. சின்னத்தம்பி அருளம்பலம்
206. யா/க/7249 திருமதி. சின்னம்மா மயில்வாகனம்
207. யா/க/7250 திருமதி. பார்வதி வேலாயுதம்
208. யா/க/7320 திருமதி. பரமேஸ்வரி நடராசா
209. யா/க/7322 திரு. முருகேசு வேலுப்பிள்ளை
210. யா/க/7361 திருமதி. தஞ்சம்மா சின்னத்துரை
211. யா/க/7367 திரு.சுப்பிரமணியம் கனகசிங்கம்
212. யா/க/7370 திரு. வைத்தியாம்பிள்ளை இராயப்பு
213. யா/க/7453 திருமதி. மேரிதங்கரத்தினம் எட்வேட்
214. யா/க/7469 திரு. இராமர் ஆறுமுகம்
215. யா/க/7555 செல்வி. ஜெகதாதேவி செகராசசுப்பிரமணியம்
216. யா/க/7598 திருமதி. சின்னத்தங்கம் கார்த்திகேசு
217. யா/க/7770 திருமதி. சிதம்பரம் சின்னையா
218. யா/க/7779 திரு. முருகப்பர் கனகசபை
219. யா/க/7812 திரு. நாகன் தங்கராசா
220. யா/க/7874 திரு. சின்னததம்பி சின்னத்துரை
221. யா/க/7879 திருமதி. தனபாக்கியம் பொன்னையா
222. யா/க/7884 திரு. சின்னததம்பி கதிர்காமு
223. யா/க/7899 திருமதி. முத்து திருப்பதி
224. யா/க/7931 திருமதி. உருக்குமணி சிதம்பரப்பிள்ளை
225. யா/க/7977 திருமதி. சிவக்கொழுந்து வீரகத்ததி
226. யா/க/8000 திருமதி. தங்கச்சிமுத்து சின்னத்துரை
227. யா/க/8021 திரு. சிதம்பரன் ஆழ்வான்
228. யா/க/8042 திருமதி. உருக்குமணி உதயரத்தினம்
229. யா/க/8043 திருமதி. செல்வதேவி ஆனந்தசிவம்
230. யா/க/8053 திரு. சங்கரி சின்னையா
231. யா/க/8072 திரு. சரவணமுத்து செல்லத்துரை
232. யா/க/8097 செல்வி. இளையநாயகம் கார்த்திகேசு
233. யா/க/8105 திரு. இளையதம்பி சிவராசா
234. யா/க/8106 திருமதி. லட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்
235. யா/க/8128 திரு. கந்தையா பாலகிருஸ்ணன்
236. யா/க/8136 திருமதி. தங்கம்மா விஸ்வலிங்கம்
237. யா/க/8137 திரு. இராமலிங்கம் சோமசுந்தரம்
238. யா/க/8151 திரு. சின்னையா இரத்தினசிங்கம்
239. யா/க/8165 திருமதி. ஆச்சி கந்தசாமி
240. யா/க/8168 திருமதி. சின்னம்மா செல்லத்துரை
241. யா/க/8173 திரு. சிவசுப்பிரமணியம் முருகுப்பிள்ளை
242. யா/க/8184 திரு. செல்லப்பா மயில்வாகனம்
243. யா/க/8195 திருமதி. பொன்னம்மா ஏரம்பு
244. யா/க/8199 திரு. தம்பன் சிவபுண்ணியம்
245. யா/க/8212 திரு. சிதம்பரப்பிள்ளை ஜீவரத்தினம்
246. யா/க/8232 திரு. தம்பையா கந்தசாமி

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/பரு/68 திரு. குமரேசு முருகுப்பிள்ளை
2. யா/பரு/188 திருமதி. யோகாம்பிகை கணபதிப்பிள்ளை
3. யா/பரு/298 திருமதி. பங்கயற்செல்வம் ஈஸ்வரலிங்கம்
4. யா/பரு/453 திருமதி. செல்வராணி சுதந்திரராசா
5. யா/பரு/599 திரு. வினாசித்தம்பி ஆழ்வாப்பிள்ளை
6. யா/பரு/645 திரு.கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
7. யா/பரு/680 திரு.சின்னத்தம்பி சர்வானந்தம்
8. யா/பரு/682 திரு. மு.சிதம்பரப்பிள்ளை பாலசுப்பிரமணிம்
9. யா/பரு/705 திரு. தம்பு சின்னராசா
10. யா/பரு/730 திரு. தம்பு சந்திரசேகரன்
11. யா/பரு/770 திரு. கணபதிப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா
12. யா/பரு/872 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
13. யா/பரு/954 திரு. மாசிலாமணி முத்துலிங்கம்
14. யா/பரு/995 திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
15. யா/பரு/1015 திரு. வேதநாயகம் சிவயோகம்
16. யா/பரு/1025 திரு. கந்தப்பர் சின்னத்தம்பி சிவப்பிரகாசம்
17. யா/பரு/1037 திரு. சதாசிவம் செல்லத்துரை
18. யா/பரு/1048 திரு. ஏகாம்பரநாதன் அருட்செல்வம்
19. யா/பரு/1060 திரு. சின்னத்தம்பி தியாகராசா
20. யா/பரு/1061 திரு. கிட்ணர் சிதம்பரப்பிள்ளை
21. யா/பரு/1062 திருமதி. கமலாசனி சண்முகம்பிள்ளை
22. யா/பரு/1096 திரு. தம்பையா விஸ்வநாதன்
23. யா/பரு/1120 திரு. சின்னப்பு கந்தசாமி
24. யா/பரு/1187 திரு. மணியம் கணபதிப்பிள்ளை
25. யா/பரு/1211 திரு. பாலசிங்கம் சிவகுமாரன்
26. யா/பரு/1258 திரு. சிவப்பிரகாசம் வைகுந்தநாதன்
27. யா/பரு/1299 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
28. யா/பரு/1311 திரு. பொன்னையா பத்மநாதன்
29. யா/பரு/1314 திரு. சிங்கராசா யோசப்கொன்விக்ரர்
30. யா/பரு/1339 திரு. சின்னத்தம்பி பாலானந்தன்
31. யா/பரு/1341 திரு. கந்தையா சிவப்பிரகாசம்
32. யா/பரு/1343 திரு. கந்தசாமி இராதா
33. யா/பரு/1348 திரு. சின்னையா தணிகாசலம்
34. யா/பரு/1365 திரு. சுப்பிரமணியம் பாலசுந்தரம்
35. யா/பரு/1377 திரு. கந்தையா பொன்னையா
36. யா/பரு/1382 திருமதி. செல்லம்மா கணபதிப்பிள்ளை
37. யா/பரு/1387 திருமதி. சகுந்தலை பாலச்சந்திரன்
38. யா/பரு/1408 திரு. சின்னையா கனகசபை
39. யா/பரு/1417 திரு. இ.சுப்பிரமணியம் இராமநாதன்
40. யா/பரு/1422 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
41. யா/பரு/1428 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
42. யா/பரு/1437 திரு. கணபதிப்பிள்ளை சிவஞானம்
43. யா/பரு/1549 திருமதி. சுந்தரலக்குமி மயில்வாகனம்
44. யா/பரு/1589 திருமதி. எலிசபெத் கிறிஸ்தோப்பர்
45. யா/பரு/1719 திருமதி. பாக்கியம் தம்பையா
46. யா/பரு/1768 திரு. சம்பந்தர்குமாரசாமி கிருஷ்ணசாமி
47. யா/பரு/1797 திரு. மாணிக்கம் நடனசிகாமணி
48. யா/பரு/1804 திரு. பொன்னையா நடராசா
49. யா/பரு/1815 திரு. சூரன் இராசு
50. யா/பரு/1864 திரு. சாம்பசிவம் பாலசிங்கம்
51. யா/பரு/1871 திரு. வீரகத்தி செல்வராஜா
52. யா/பரு/1881 திரு. அருளம்பலம் அம்பலவாணர்
53. யா/பரு/1922 திருமதி. சோதிமலர் சந்திரசேகரம்
54. யா/பரு/2032 திருமதி. நிர்மலாதேவி தேவசிகாமணி
55. யா/பரு/2089 திருமதி. கமலேஸ்வரி கந்தசாமி
56. யா/பரு/2103 திரு. குருசுமுத்து அன்ரனிமரியசீலன்
57. யா/பரு/2150 திரு. வேலுப்பிள்ளை நடராசா
58. யா/பரு/2220 திரு. வேலுப்பிள்ளை வன்னிமரம்
59. யா/பரு/2230 திரு. முத்துலிங்கம் சந்திரலிங்கம்
60. யா/பரு/2233 திருமதி. விறிசீற்றம்மா சூசைப்பிள்ளை
61. யா/பரு/2245 செல்வி. டெய்சி அமிர்தரட்ணம்வல்லிபுரம்
62. யா/பரு/2320 திரு. சாதுலிங்கம் செல்வநாதன்
63. யா/பரு/2329 திரு. கிட்டினபிள்ளை கந்தையா
64. யா/பரு/2358 திருமதி. சாந்தநாயகி சரவணபவான்
65. யா/பரு/2361 திரு. கணபதிப்பிள்ளை செல்லையா
66. யா/பரு/2364 திரு. ஆறுமுகம் வடிவேலு
67. யா/பரு/2493 திரு. முருகுப்பிள்ளை முத்தையா
68. யா/பரு/2527 திருமதி. ஈஸ்வரியம்மாள் சிவஞானசுந்தரம்
69. யா/பரு/2598 திரு. பரமநாதன் சச்சிதானந்தன்
70. யா/பரு/2694 திரு. சுப்பிரமணியம் விநாயகம்பிள்ளை
71. யா/பரு/2722 திரு. செல்வவினாயகம் விசாகசுந்தரம்
72. யா/பரு/2760 திருமதி.தெய்வானைப்பிள்ளை ரெங்கநாதன்
73. யா/பரு/2777 திரு. அம்பலவி அரியரத்தினம்
74. யா/பரு/2817 திருமதி. பரமேஸ்வரி லோகநாதன்
75. யா/பரு/2828 திருமதி. மண்டலநாயகி சுந்தரலிங்கம்
76. யா/பரு/2832 திரு. நாகரத்தினம் குகன்
77. யா/பரு/2883 திரு. பாக்கியநாதன் யோசேப்
78. யா/பரு/2953 திரு. சின்னத்தம்பி சின்னராசா
79. யா/பரு/2981 திருமதி. செல்வரத்தினம் கனகசபை
80. யா/பரு/2997 திரு. கந்தையா கிருஷ்ணபிள்ளை
81. யா/பரு/3025 திரு. மாணிக்கம் இரத்தினசபாபதி
82. யா/பரு/3036 திரு. பொன்னையா பாலசிங்கம்
83. யா/பரு/3067 திரு. கணபதிப்பிள்ளை கனகசபாபதி
84. யா/பரு/3071 திரு. வல்லிபுரம் கணபதிப்பிள்ளை
85. யா/பரு/3101 திரு. இளையதம்பி சிதம்பரப்பிள்ளை

# மோசடித் தடுப்புப் பிரிவுப் பொலிசார்
# 09 பேர் கொள்ளைச் சம்பவத்தில் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மோசடித் தடுப்புப்பிரிவுப் பொலிசார் இரவு விடுதி ஒன்றினுள் நுழைந்து வெளிநாட்டவர்களைப் பயமுறுத்தி ஒரு இலட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியான டொலர் நோட்டுக்கள் செல்போன் மற்றும் பல உடைமைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் மோசடித் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஒன்பது பொலிசாரைக் கொள்ளுப்பிட்டிப் பொலிசார் கைது செய்துள்ளனர் மேற்படி பொலிசார் கொள்ளைச் சம்பவத்திற்கு கடத்தப்பட்ட வாகனம் ஒன்றைப் பயன்படுத்தினர். இவ் வாகனத்தைக் கொம்பனித் தெருவில் கைவிட்டுச் சென்றுள்ளனர். மேற்படி வாகனச் சொந்தக்காரர் கொள்ளுப்பிட்டிப் பொலிசிடம இரவு விடுதியில் பொலிசார் வந்து கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக முறையிட்டுள்ளனர். அந்த இரவு விடுதிக்காரரும் பொலிசாரிடம் முறையிட்டுள்ளார். இதனையடுத்து இவ் ஒன்பது பேரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக மாளிகாவத்தை மோசடிக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரி உட்பட மேலும் சில பொலிசாரைக் கொள்ளுப்பிட்டி பொலிசார் கைது செய்யச் சென்ற வேளை அவர்கள் தலைமறைவாகியுள்ளனர். இவர்களையும் விரைவில் கைது செய்வோம் எனக் கொள்ளுப்பிட்டிப் பொலிசார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள ஒன்பது பேரில் ஒருவர் கோட்டைப் பொலிஸ் நிலையத்தின் மோசடித் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

பல தமிழர்களிடம் பயமுறுத்தி பணம் பறித்த சம்பவங்களுடன் இப் பொலிசாருக்கு தொடர்பு இருப்பதாக கொள்ளுப்பிட்டிப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பெரும்பான்மைப்பலம் உள்ளதாகக் கூறுவதால்
# அரசு சமாதானப் பேச்சைஉடன் ஆரம்பிக்க வேண்டும்

## -பா. உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை

அரசாங்கம் தற்சமயம் பெரும்பான்மைப் பலத்தை பாராளுமன்றத்தில் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றமையால் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல் .பீரிஸ் அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பித்தால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தமது ஆதரவை வழங்கும் எனக் குறிப்பிட்டார்.

நேற்று சனாதிபதிக்கும் ,ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் பற்றிக் குறிப்பிட்ட அவர், பொதுவான விடயங்களே அதில் பேசப்பட்டதாகக் கூறினார்

அரசாங்கம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய வெளிநாட்டவர்கள் இலங்கையில் கொள்வனவு செய்யும் காணிகளுக்கு நூறு வீத வரி அறிவீட்டு சட்டமூலமானது, வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுள்ள இலங்கை நாட்டவர்களுக்கும் பாதகமானதாக அமையவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோகித்த போகொல்லாகம குறிப்பிட்டார்(32)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல்-2004

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு கீழ்வரும் அட்டவணைக்கமைவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக நடைபெறும். 2003 ஆம் ஆண்டு வரை மீளளிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டோரில் இதுவரை மீளப்பெறாதோரும் ஏதாவதொரு மீளளிப்பு நிலையத்தில் மீளப்பெற்றுக் கொள்ளலாம்.

01 . **வன்னி**

| | | | |
|---|---|---|---|
| 17.09.2004 (வெள்ளி) | | | |
| கிளி.மத்தியகல்லூரி | -கிளிநொச்சி | பி.ப. | 03.30 மணி |
| 18.09.2004. (சனி) | | | |
| பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம் | -நல்லூர்- பூநகரி | காலை | 08.30மணி |
| முழங்காவில் மகாவித்தியாலயம் | -முழங்காவில் | மு.ப. | 09.45மணி |
| விடத்தல்தீவு றோ.க.பாடசாலை | -விடத்தல் தீவு | மு.ப. | 11.00மணி |
| கறுக்காய்க்குளம் அ.த.கபாடசாலை | -கறுக்காய்க் குளம் | ந.ப | 12.00மணி |
| மல்லாவி மத்தியகல்லூரி | -மல்லாவி | பி.ப | 04.00மணி |
| அக்கராயன் மகாவித்தியாலயம் | -அக்கராயன் | மாலை | 05.30மணி |
| 19.09.2004 (ஞாயிறு) | | | |
| மாங்குளம் மகாவித்தியாலயம் | -மாங்குளம் | காலை | 08.00மணி |
| வருவாய்ப் பகுதிச் செயலகம் | -புளியங்குளம் | காலை | 08.30மணி |
| நெடுங்கேணி மகாவித்தியாலயம் | -நெடுங்கேணி | மு.ப. | 11.00மணி |
| ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் | -ஒட்டுசுட்டான் | மு.ப. | 11.45மணி |
| வித்தியானந்தாக் கல்லூரி | -தண்ணீரூற்று | மு.ப. | 12.30மணி |
| ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் | -புதுக்குடியிருப்பு | பி.ப | 02.30மணி |
| விசுவமடு மகாவித்தியாலயம் | -விசுவமடு | பி.ப. | 4.00மணி |

**02.யாழ். மாவட்டம்**

இடம்:முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.

நேரம்: காலை 8.00மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை.

21.09.2004. (செவ்வாய்)
நல்லூர்
உடுவில்

22.09.2004. (புதன்)
யாழ்ப்பாணம்
கோப்பாய்
தெல்லிப்பளை

23.09.2004. (வியாழன்)
மானிப்பாய்
சங்கானை
காரைநகர்
வேலணை
வடமராட்சி கிழக்கு
பச்சிலைப்பள்ளி

24.09.2004. (வெள்ளி)
கரவெட்டி
பருத்தித்துறை
சாவகச்சேரி

## தமிழ்...

நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. என்றும் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சை மீண்டும் தாமதமின்றி ஆரம்பிப்பதற்கு ஏதுவான ஊக்கத்தை அளிக்க ஆவல் கொண்டுள்ளதாகவும், எமது மனிதாபிமானப் பணிகளைத்

தொடர்ந்து மேற்கொண்டுவருகின்றோம் என்றும், சமாதானப் பேச்சை தாமதிப்பது ஆபத்தானதென்றும், இது பேச்சுவார்த்தை மீதான மக்களிற்குள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துவிடும் என்றும் இச் சந்திப்பின்போது ஐ.நா.அபிவிருத்தித்திட்ட இலங்கைக்கான பிரதிநிதி மிக்கைல் பேர்மியோ. எடுத்துக் கூறியுள்ளார்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு வருகைதந்த மினகல் பேர்மியோவை சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்றார்.பின்னர் இரு பகுதிக்குமான சந்திப்பு நடைபெற்றது. சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இச்சந் திப்பில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சிறிலங்காவிற்கான வதிவிடப்பிரதிநிதி மினகல் பேர்மியோ மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மனித உரிமைகள் ஆலோசகர் றோமிமங்கோவன் அடங்கிய குழுவும், விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர்,மற்றும் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் அடங்கிய குழுவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## இந்தியத்...

முறைப்படுத்துவதற்கு இந்தியா சிறிலங்கா அரசிற்கு அழுத்தத்தைக் கொடுக்க வேண்டுமெனத் தெரிவித்தோம் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். ஜே.வி.பி, ஹெலஉறுமய உட்பட தென்னிலங்கையில் இருக்கின்றவர்கள் விசுவாசத்துடன் இந்தியாவை அணுகி நடுநிலைமை வகிக்க வேண்டும் அல்லது பங்குபெற்ற வேண்டும் எனக் கோருவதில் அவர்கள் ஒரு சுயநலப் போக்கைத்தான் கையாளுகிறார்களே தவிர விசுவாசத்துடன் இந்தியாவை நாடவில்லை எனத் தெரிவித்தோம் என்றார். இதேவேளை படகில் வருகின்ற அகதிகளை நிறுத்தி இரண்டு அரசாங்கங்களும் ஒரு முடிவெடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மேலும் தெரிவித்தோம் என்றார். இச்சந்திப்பில் உதவி இந்தியத்தூதுவர் மோகன்குமாரரும் பங்கேற்றுக் கொண்டார்.

## மீளப்...

நம்பிக்கை கொண்[illegible]ளதாக அவர் கூறி னார்.

அகதிகளுக்கான ஐ[illegible]கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்கள் வடக்கு கிழக்கு மக்களுக்கு சமாதான முன்னெடுப்புக்களில் உள்ள கடினத் தன்மையினைப் போக்கி சமாதான முன்னெடுப்பிற்கு தமது நேரடி ஆதரவை அதிகரிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். இரு பகுதியினருக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதே எமது விருப்பமென்றும் குறிப்பிட்டார். மாறி மாறி வந்த போரினால் பாதிப்படைந்த வடக்கு கிழக்கு மக்களுக்கு சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதே முக்கிய உதவிகளை வழங்குவதற்கான வழி எனவும் குறிப்பிட்டார்.


**நல்லினப் பாற்பசுக்கள் விற்பனைக்குண்டு**

**யேசிஇனப் பாற் பசுக்கள் 25 வரையில் விற்பனைக்குண்டு. அதில் 13 வரையானவை பால் கறக்கும் நிலையில் கன்றுகளுடனும், ஏனையவை கன்று ஈனும் தறுவாயிலும் உள்ளன. இவை அனைத்தும் மொத்தமாக விற்பனைக்குண்டு.**

தொடர்புகட்கு,
செல்லப்பிள்ளையார் அரிசியாலை,
புளியம்பொக்கணைச் சந்தி.
(5037)


## தேசிய..

விரிவாகத் தன்னைத் தயார்படுத்துவது அவசியமென நான் நினைக்கிறேன். புலிகளின் இ.த.அ. சபை யோசனை தொடர்பாக பல மட்டங்களிலும் ஊடகங்களிலும் குறிப்பாக வெளிநாட்டு ஊடகங்களிலும் வாதப் பிரதி வாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் அரசாங்கமும் தன்னைத் தயார்படுத்திக் கொள்வது நல்லது. அத்துடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க இவை உதவுமென நான் நினைக்கின்றேன். தமிழ் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளிடமும் ஆலோசிக்கப்படும் அதே போன்று பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியின் கீழ் இணைந்து செயற்படுகின்ற அதே வேளையில் ஒவ்வொரு தமிழ்க் கட்சிக்குமான அங்கீகாரமும் மதிக்கப்படுமென கரீம் பீரிஸ் மேலும் கூறியுள்ளார்.

## பிரதமருக்கு....

லின் பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி.யும் இணைந்து இக் கோரிக்கையை முன்வைத்துள்ள படியால் இதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என ஜே.வி.பி. பிரதமரை வற்புறுத்தியுள்ளது.

## சந்திரிகா பணிப்புரை

சனாதிபதியின் அனுமதியில்லாமல் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், ஐ.ம.சு.முன்னனி பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்லக் கூடாதென சனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். பாராளுமன்றத்தில் நடைபெறும் முக்கியமான நிகழ்வுகளுக்கு இவர்களின் பங்கேற்பு மிக அவசியமென சனாதிபதி தெரிவித்துள்ளார்

## மா.அமைச்சு...

இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளனர். பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகளும் ஏராளமானபழைய மாணவர்களும் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, மாகாண அமைச்சர் பேட்ரி பிரேமலால் திசாநாயக்கவைச் சந்தித்த மக்கள், ஜே.வி.பி மீதும் ஜே.வி.பி. ஆதரவாளர் மீதுமான தங்களது வெறுப்பையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். இதைச் செவிமடுத்த மாகாண அமைச்சர், ஏற்கனவே தான் ஜே.வி.பியினரின் அரசியற் பிரச்சாரத்திற்கு உதவிய நான்கு ஆசிரியர்களைப் பொலநறுவைக்கு மாற்றி விட்டதாகவும், ஏனையபலா மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்ததைத் தொடர்ந்து இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் முடிவுக்கு வந்தது.

## இந்...

அப்பகுதிக்குச் சென்ற சிறிலங்காப் கடற்படையினர் தீப்பற்றிய மற்றைய படகினை தலைமன்னார் பியர் கடற்படைத் தளத்திற்கு இழுத்துச் சென்றுள்ளதுடன், படகுகளில் இருந்த 8 தமிழக மீனவர்களையும் கைது செய்து சென்றுள்ளனர் என்று மன்னார்த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மின்சாரம் தடைப்படல்

மின்சார வழி திருத்தம் காரணமாக நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை ஏ-9 வீதியில் உள்ள காக்காகடைச்சந்திக்கும் பொன்னம்பலம் வைத்தியசாலை வீதிக்குமிடையில், காலை 07.30 மணி தொடக்கம் பி.ப.02.30 மணிவரை மின்சாரம் தடைப்படும் என மின்சாரசபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கின்றனர்.

## தேசிய நல்லி...

தொடர்பான பதிலை சனாதிபதிக்குக் கூறுவதாக ரணில் தெரிவித்துள்ளார் என அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (32)

## சமாதான...

நோர்வேத் தூதரகத்தின் முன் நோர்வேயின் தேசியக்கொடியையும் எரித்தனர். அவர்கள் நோர்வேயின் சமாதான நடவடிக்கைகள் பற்றிய பதினான்கு கேள்விகள் அடங்கிய மகஜர் ஒன்றினையும் நோர்வே இராஜதந்திரியிடம் கையளித்துள்ளனர்.


# ஆசிரியர் வாண்மைவிருத்தி தினம்

**10.09.2004-11.09.2004.**

**கிளிநொச்சி மகாவித்தியாலயம்**

வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரிய மத்திய நிலையங்களும், மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து 10,11-09-2004 ஆகிய இரு தினங்களும் ஆசிரியர் வாண்மைத்தினமாக கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடாத்துவதையிட்டு மனநிறைவடைகின்றோம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த 350 ஆசிரியர்களும், இதன் மூலம் பயன் பெறுவதோடு, எம் மாணவர்களின் கற்றற் செயற்பாட்டு விருத்திக்கு இது உரம் ஊட்டும் என்ற நிறைவோடு இவ் விருதினங்களும் நடைபெறும். இந் நிகழ்வு சிறப்பான வாண்மை விருத்தி தினமாக அமைய எமது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

வர்த்தகர் சங்கம்,
கிளிநொச்சி.

(சி.10215)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper
பக்கம் - 26

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly
விலை: 16.00
நாதம் - 15 வெள்ளி - 28 10 - 16 - செப்ரெம்பர் - 2004



## என்று தீரும் இந்தத் துயரங்கள்...?

## பிரமிக்கும் வீரம்

# திருமுக அறிமுகம்

"வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்" என்ற பாரதியின் தீர்க்கதரிசன வரிகளுக்கு உயிர் கொடுத்தவர்கள் டென்சிங்கும்- எபமண்ட கூறிலாறியும் ஆவர்.

அவர்கள் இமயத்தின் உச்சியில் ஏறிஉலாவிய முதற் சாதனையாளர்கள் என்ற பெருமையைப் பெற்றவர்கள்.

அதேபோல் 'சந்திரமண்டலத்தில் கண்டறிவோம்' என்ற அதே பாரதியின் கனவை நனவாக்கியவர்கள் 'நீல்ஆம்ஸ்ரோங்'கும் எட்வின் அல்ட்றிலும் அவர்கள் நிலாவில் உலாவிய விண்ணுலக சாதனையாளகள் இதேவேளை ஆழிக்கடலை நீந்திக்கடந்து உலகை வியக் கவைத்த சாதனையைப் புரிந்தவர் ஒரு தமிழர். அதுவும் ஒரு ஈழத்தமிழர். அலைகள் கொந்தளித்து குமுற, ஆழக்கடலுள் உயிராபத்தை விளைவிக்கும் பிராணிகள் நடமாட, எந்தவிதமான நவீன உயிர்காப்புச் சாதனங்கள் வெற்றியினதும் உதவிகள் ஏதுமின்றி இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையை முதன் முதலில் துணிச்சலாக நீந்திக் கடந்த பெருமை மு.நவரத்தின சாமி என்ற சாதனையாளரையே சாரும்.16-08-1909 இல் பிறந்த நவரத்தினசாமியின் சொந்த ஊர் முருகவேல் குடிகொண்டு அருள்பாலிக்கும்தொண்டமானாறு ஆகும்.

ஆரம்பக்கல்வியை சொந்தக்கிராமத்திலும், உயர்கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியிலும் கற்ற இவர் இளவயதிலேயே கூரியமதியும் சாதனைகள் செய்யத்துடிக்கும் வீரியதிறனும் கொண்டவராக விளங்கினார்.

பாடசாலை நாட்களில் ஆங்கிலக் கால்வாயை ஒரு மேல்நாட்டவர் நீந்திய செய்தியை படித்து வியப்புற்ற அவர், தம்கிராமத்தினருகே அலைகுமுறி நிற்கும் ஆழிக்கடலான பாக்கு நீரிணையை தான் நீந்திக் கடந்தால் என்ற எண்ணம் கொண்டவரானார்.



அந்த எண்ணக்கரு நாளாக நாளாக வளர்ந்து கொண்டே போயிற்று.. அதற்கான பயிற்சிகளில் தீவிரமாக முயலத்தொடங்கினார்.

19ஆவது வயதில் பள்ளிப்படிப்பு முடிய-

அரசாங்க கிருஷிய இலாகாவில் கடமையேற்று அப்பகுதி போதனாசிரியராகவும் பதவியுயர்வை பெற்றார்.

ஆனாலும் அவரது

## மு.நவரத்தின சாமி

சாதனை செய்யத்துடித்த மனம் ஓய்வதாக இல்லை. பணிநேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் நீச்சல்பயிற்சியில் தீவிரம்காட்டலானார். இடையில் திருமணப்பந்தம் வேறு... லீலாவதி மனைவியானார். வாழ்க்கைக்கடலிலும் நீச்சல்கடலிலும் நிதானத்துடன் முன்னேறத் தொடங்கினார். 18வருட காலப்பயிற்சி அவரைத்தன் சாதனையைப் புரிய 1954இல் தயாராக்கியது. 16-03-1954இல் பாக்குநீரிணையை கடக்கும் தனது முதல் நீச்சல் முயற்சியை ஆரம்பித்தார் நவரத்தினசாமி.31.1/2 மைல் நீளமான அலை கொந்தளிக்கும், ஆழ்கடல் அதுவாகும்.

அன்றைய தினம் மாலை இரண்டு மணிக்கு நீச்சலை ஆரம்பித்த அவருக்கு இயற்கை அழைப்பதாக இருக்கவில்லை.

கடல் கொந்தளிப்புடன் மழையும் கூட, இடி மின்னலை எதிர்கொண்டு நீச்சலை தொடர்ந்த நவரத்னசாமியின் சவால்களை எதிர்கொண்டு முன்னேறும் விடாமுயற்சி, இயற்கைக்கு சினத்தையும் அவமானத்தையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

சாதனை இலக்கை- அதாவது கோடியாக்கரை இன்னும் ஏழு மைல்கள் மட்டுமே இருந்த போது எதிர் நீரோட்டம் அவரை இழுத்துச் செல்ல ஆரம்பித்தது. இதனால் அவர் முன்னேறிய இடத்திலிருந்து பல மைல்கள் பின்னேற வேண்டியதாயிற்று.

சுமார் 35 மைல்கள் தூரத்தை 231/2 மணி நேரம் நீந்திய நவரத்தின சாமி முதல் முயற்சியை இயற்கையின் சீற்றம் முறியடித்தது.

"பாக்குநீரிணையை நான் நீந்திக் கடப்பேன் அல்லது என் பிள்ளைகளில் ஒருவன் நிச்சயம் நீந்திக்கடப்பான்" என மீள் சபதமிட்டு, மீண்டும் சாதனை புரியவென 25.03.1954 இல் கடலில் இறங்கினார் நவரத்தினசாமி.

அப்போது நேரம் 4.10

இம்முறை அவரது ஓர்மமிக்க உறுதியை கடலால் எதிர்கொள்ள முடியவில்லை ஓய்வற்ற நீச்சல்....

மறுநாள் மாலை 7.00 மணிக்கு கோடியாக் கரையில் கால் பதித்து தன் சாதனையை நிறைவேற்றி தமிழ்த்தாய்க்கு பெருமை தேடிக் கொடுத்ததுடன் ஈழமண்ணை இறும்பூதெய்தவைத்தார்.

இவரது சாதனையைப் புகழ்ந்து புகழ்பெற்ற கவிஞர்பரமஹம்ச தாசன் பின்வருமாறு பாடினார்-

வெற்றியீட்டி விட்டான்- தமிழன்
விருது நாட்டி விட்டான்- உலகு
முற்றும் கேட்டிராத- புகழின்
முடியிலேறி விட்டான் - அன்பால்
பெற்ற தாயின் புகழை- எங்கும்
பேச வைத்துவிட்டான்- ஈழம்
நற்றவத்தினாலே- ஈன்ற
நவரத்தினசாமி...

தமிழ் மக்கள் பூரிப்படைந்த நாள் அதுவாகும். இந்தச் சாதனைக்கு அவர் தன் உயிரையே பணயமாக வைத்தார் என்றால் அதில் மிகையில்லை. அவர் நீச்சல் வீரன் மட்டுமல்ல.

கணிதத்தில்- ஆசிரியத் தொழிலில்- இயந்திரத் தொழில் நுட்பத்தில் நாடக நடிப்பில் கவி புனைவதில்... அவரது ஆற்றல் பன்முக பரிமாணம் கொண்டது. இலங்கையை தனியாளாகக் கட்டுமரத்தில் ஏறி சுற்றி சாதனை செய்யவும் அவரது இறுதிக் காலத்தில் ஆசை இருந்தது.

ஆனால் அதற்கான பயிற்சியின் போதே 30.06.1969 இல் தொண்டமானாற்றுக் கடலில் மரணமானது துரதிஷ்டமே....

கடலை வென்றோன் கடலன்னை மடியிலேயே மரணத்தை தழுவிக் கொண்டார்.

நவரத்தினசாமி வாழும் வரலாற்றைக் கொண்டது என்பதில் ஐயமில்லை.

**அட்சயன்**

# கார சாரம்

## கவனிக்கவேண்டியவை கவனிக்கிறதா தெரியல்லை

'சீ'யெண்டு சொன்னதுக்குத்தான் நாய் சீலை கட்டாம விட்டது. என்று ஆத்தை அடிக்கடி சொல்லுற வார்த்தை இது.

நாய் இல்லாத வீடில்ல நாயைப்பார்த்து 'அடிக்' கெண்டா ஓடிரும். "நாயைக் குளிக்கவாத்து நடு வீட்டுக்க வைக்கிறதோ" எண்டொரு பழமொழியிருக்கு. ஒரு சித்தர் பாடலில "நாய் வாலை அளவெடுத்து நறுக்கித்தள்ளின் நற்றமிழை எழுத எழுத்தாணியாமோ" எண்டொரு வரி வருது. ஆனா இப்ப எங்கட மண்ணில வெளிநாட்டால விளக்குமாறு வந்தாலும் நாங்களதை விழுந்துதானே கும்புறம். நாயை விடுவமே. வெளிநாட்டிலயிருந்து வந்த நாயளக் குளிக்க வாத்துப் பவுடர் போட்டு 'பிஸ்கற்' தீத்தி, வேளாவேளைக்கு விட்டமின் மாத்திரையள் மருந்துகள் எண்டு குளுகுளுப்பாத்தான் வச்சிருக்கினம். இதுகள் வீட்டுக்கும் காவல் காராது. இதுகளுக்குத்தான் ஒரு காவல் காரன் வேணும்.

வன்னியில சும்மா சொல்லக்கூடாது, காட்டுப்புறக் கிராமங்களுக்க வீட்டுக்கு வீடு நாலைஞ்சு நாயள் இருக்கும். மாட்டுக்காவல், பன்றிக்காவல், வீட்டுக்காவல், வேட்டை யெண்டு அதுகளுக்கு வேலையுங் கூட.

நாய் வளர்க்கிறது ஒரு கலை. நாய் குட்டி போட்டிருக்கிற தெண்டா: காணுறவையெல்லாம் "நல்ல குட்டி ஒரு கடுவன் குட்டி தாங்கோ" எண்டு சொல்லிவைப்பினம். பெட்டை நாயைத் தேடுவார் கிடையாது. சில வேட்டைக்காறர் மட்டும் பெட்டை நாயைக்கேட்டு வளபபினம். அதுக்கு மோப்பம் பிடிக்கிற சக்தி கூட. நாயள் அதிசயமான மோப்ப சக்தியுள்ளதுகள். வீட்டில ரெண்டு நாயிருந்தா அச்சமில்லாம நித்திரை கொள்ளலாம். கலைக்கத்தென்பில்லாட்டியும் குலைச்சு ஆக்களை எழுப்பிப்போடும்.

உப்பிடித்தான் நாங்கள் இடம்பெயர்ந்து வேலங்குளத்தில இருக்கேக்கை, கொஞ்ச நிலத்தில மரவள்ளி வைச்சு நல்ல கிழங்கு. ஆனை விடுதே. வந்திட்டுது. நாய் குலைச்சுக்குலைச்சு பின்னுக்கு ஓடிவாறதும் முன்னுக்குப் போறதுமாப் பாயுது. இருட்டு. ஒரு லையிற்றோ சூழ் வெளிச்சமோ, இல்லை மங்கின நிலா வெளிச்சம், சளாரெண்டு சத்தங்கேட்டுது. நாயளுக்கு மேல ஏதோ வந்து விழுந்த சத்தம். நாய் காளெண்டு கத்திக்கொண்டு வருது பாத்தா மரவெள்ளியத் தூரோட புடுங்கி நாயுக்கெறியுது யானை.

அப்பிடி காட்டுப்பிரதேசத்தில நாய் ஒரு பெறுமதியான விலங்கு. என்ன மீனைத்திண்டிட்டு எலும்பப் போடுவம். வாலை ஆட்டிப் போட்டுத் தின்னும். சாப்பிட்டிட்டு கோப் பையில மிஞ்சிற ஒரு பிடிய வைப்பம். இறைச்சியத் திண்டிட்டு எலும்பப்போடுவம். இதுகளத் திண்டிட்டு வாசல்ல சுருண்டு படுத்திருக்கும்.

நாய் குட்டி போட்டுக்கண் முழிக்க முன்னம் கொண்டு வந்து என்ர கையால தான் சோறுவைப்பன். இதிலும் ஒரு ராசியிருக்கு. சிலபேர் சோறுவச்சா நாய் பேய் போல தின்னும் சாப்பாடு வச்சுக் கட்டாது.

மற்றது நாய் நல்ல கடி நாயா வரவேணுமெண்டாக் கட்டி வளர்க்க வேணும். மனிசர் மக்கள் காணாமக் கட்டி வளர்க்க வேணும்.

நெற்றிச்சுட்டி கண்ணுக்கு மேல ரெண்டு புள்ளி, சடைவால் மடியாத காது, நிக்கயுக்க பாச்சல் நிலை இதுகளெல்லாம் நல்ல நாய்க்கு அறிகுறி.

எங்கட வீட்ட முன்ன ஒரு நாய் நிண்டது. பாம்படிக்கப் படுசூரன். எத்தனை நாள் வயல் வரம்பில எனக்கு முன்னால புடையன் கிடக்க இடறிப்பாஞ்சு பிடிச்சிருக்கு. பிடிச்ச உடன ஓ... நடு முதுகப்பிடிச்சுப் படபடண்டு நிலத்திலயே அடிச்சுக் கொண்டிரும். கடைசியா கோழிக் கூட்டுக்க பூந்த புடையனை... அடிக்க வளமில்லையெண்டு அப்பு வெடி வைக்க இதுபாஞ்சு போய்ப்பிடிச்சதில பல்லுப்பட்டிருக்கு. விடியச் செத்துப் போச்சு. எனக்கு கண்ணில தண்ணி வந்திட்டுது. எத்தினநாள் என்ர உயிரை காத்திருக்கு.

இப்ப பாருங்கோவன் நான் சொல்லச் சொல்ல இதைப்படிக்கேக்க கனபேருக்கு தங்கட தங்கட நாயளின்ர நினைவு வந்திடும். அதுகளும் மனிசற்ற வாழ்க்கையில தாய் பிள்ளைபோல நாய் குட்டியெண்டு இணைஞசிட்டுதுகள். நாங்கள் வீட்டை விட்டு ஓடினாலும் தாங்கள் ஓடாம வீட்டைக் காவல் காக்கிறது நாய். விட்டிட்டுப் போனவைய நினைச்சு அழும். ஊளையிடும். நாய் ஊளையிட்டா ஊருக்குக் கூடாதாம். இவ் வளவெல்லாம் ஏன் சொல்லுறன்.

இப்ப ஊருலகத்தில நாயள் பெருகிப் போச்சு நாங்களா வாறமெண்டாலும் சேர்ப்பாரில்ல. ஒண்டா ரெண்டா அதுகளும் பிளாட்டுன் கொம்பனியெண்டு குழுவாச் சேந்துதான் திரியுதுகள். நிலவுக் காலம் வந்தா நித்திரையில்லை. நிலவைப்பார்த்து நாய் குலைக்கிறதெண்டது சும்மாயில்லை உண்மை. சில வீடுகள்ள ராராவா நாய் குலைக்கும். அதை ஏதோ இனிய சங்கீதமா நினைச்சு வீட்டுக்காறர் நித்திரை கொள்ளுவினம். பக்கத்து வீட்டுக்காறர் நித்திரை கொள்ளாட்டி அவைக்கென்ன?

காலையில வெள்ளண எழும்பி ஏனைன் ரோட்டில பார்த்தா வலுகுசாலாப் படுத்தெழும்பி வீதியிலயே மலசலங்களிச்சு முகமும் அலம்பிக் கொண்டு பெரிய பெரிய உணவு விடுதியள்ள சாப்பிடப் போகினம். "கையேசு" கள் ஓடித்திரியிற 'கைவேஸி'ல ஓடித்திரியினம். அதுக்குள்ளேயே திரிஞ்சு இவயட கலியாணப் பேச்சுவார்த்தையள் காதல் சந்திப்புகள் எண்டு நடத்துவினம். குழந்தை குட்டியளக் கொஞ்சி விளையாடவும் இதுதானிடம்.

அதோட போச்சோ... பகல் முழுதும் மக்கள் பிழங்கிற இடங்கள், விறாந்தையள், கோவில்கள், சந்தை எண்டு அலையிறது ராப்படுக்கையும் அங்கினயே போடுறது. அங்கிங்கெனாதபடி எங்கும் நாய்கள், நாய்கள், நாய்கள்.

சூரியக்கதிர் நடவடிக்கை முடிச்சு யாழ்ப்பாணத்தில் கொடியேத்தின ரத்வத்தைய வரவேற்கவும் இவைதான் முதல் போனவை.

உணவுத் தட்டுப்பாடு சுகாதாரக் கேடு எண்டதுக்கெல்லாம் மேலால நாய்களின் அமோகப் பெருக்கம் பிள்ளையளுக்கும் அச்சுறுத்தலாப் போச்சு. தெருவில நிக்கிற நாய் தெருவால போறவையப் பார்த்து உறுமினா... பேசாம விலத்திப் போவினம். பிள்ளையள் அப்பிடிப் போகாதுகள். ஒரு கல்லத்தூக்கியோ தடியத்தூக்கியோ எறிவினம். பிறகென்ன பகைமுத்தி ஒரு நாளைக்கு வாய் வச்சிடும். நாய் கடிச்சா அந்தநாளையில சுருக்கமான மருந்து கறிமுருங்கையிலையில வெள்ளை வச்சு கசக்கிப்போட்டுக் கட்ட, மாறிப் போகும். கொஞ்சம் கடுங்காயமெண்டாப் பட்டையில அரைப்பம்.

இப்ப அப்பிடியோ, கடிக்கிறநாய் நல்லதோ விசரோ எண்டொரு சந்தேகம் வரும் பிறகென்ன நாய் கடித்தால் முந்தி சாதாரணமான ஏற்பூசி. விசர்நாய்க் கடியெண்டா தொப்பூளச்சுத்தி இருபத்தொரு ஊசி ஸ்.. கையில போடவே நோகும் தொப்பூள்ளயோ... அய்யூக் எண்ணாதையுங்கோ இப்ப நாய் கடிச்சால்.... கடிச்ச புண்ணில தான் ஊசி போடுறது...

ஒரு காலத்தில சிங்கள அரசாங்கத்தின்ர பொருளாதாரத் தடைக்க மருந்தில்லாம நாய் கடிச்சுச் செத்தசனமிருக்கு சரி.

இவளவு தொகையா நாய் பெருகக் காரணமென்ன? நாயின்ர கர்ப்ப காலம் மூண்டுமாதம். ஒரு தடவைக்கு ரெண்டுமுதல் எட்டுக் குட்டிகள் வரை போடுது. அப்ப வருசத்தில ஒரு நாய் முப்பத்திரண்டு குட்டி போட்டா விளையாட்டே.

அந்தநாள் முதல் இந்த நாள் வரை கட்டாக்காலி நாய்களை அழிக்க வேண்டியது. அரசாங்கத்தின்ர கடமை தான். இதை உளளூராட்சி நிர்வாகம்தான் செய்யுது. பல நாடுகள்ள பலவிதமான முறையளைக் கையாளுகினம். ஒரு நாட்டில நாய்களைக் கைது செய்து நிரந்தரக் கருத்தடை ஊசி போட்டதாகக்கேள்வி.

முன்னணி நகரமாக மாறிக் கொண்டிருக்கிற கிளிநொச்சியில என்ன முயற்சி எடுத்திருக்கினம் எண்டு தெரியேல்ல. அநேகமாக இந்த நாய்கள் குறுக்க மறுக்க பாயுறதால எத்தினையோ விபத்துகளும் நடந்து முடிஞ்சிருக்கு. பள்ளிக் கூடங்கள், ஆசுப்பத்திரி எண்டு திரியிற நாயளால வேறு ஆபத்தும் இருக்கு. முன் பொருதடவை பிரசவ ஆஸ்பத்திரி வாட்டுக்க போனநாய் அண்டைக்குத் தான் பிறந்த பிள்ளையைத் தூக்கிக் கொண்டு ஓடின வரலாறும் இருக்கு. உணவுப் பண்டங்கள் அதிகமாக கொட்டுப் பட்டால் காகங்களும் நாய்களும் அந்தப்பகுதியில் பெருகுவது இயற்கை தான். ஆனா இதுக்குப் பின்னால வாற விளைவுகள் ஏற்படுகிற நோய்கள், நாய்க்கடி இதுகளுக்கெல்லாம் ஏற்படும் மருத்துவச் செலவு, மன உடல் உளைச்சல் இதெல்லாம் பெரியதில்லையோ. பிரதேச சபைகள் ஏன் இதைக் கவனிப்பதில்ல.

கதையோட கதை ஆற்றயும் நாய் கடிச்சுப் போட்டுதெண்டா, வழக்கும் போடேலாது. ஏனெண்டா நாய் சட்டப்படி சாதுவான மிருகம். அந்த நாய் முதலும் கடிக்க வந்தது அதை வீட்டுக்காரருக்கும் தெரியும் நான் சொன்னனான். எண்டு பல விசயங்களை நிரூபிக்க வேண்டும்.

இப்ப இந்த நாயளப்பற்றி ஏன் இன்னும் சம்பந்தப்பட்டவை கவனிக்காமயிருக்கினம். ம்... கவனிக்கவில்லையா? கவனம் இங்கில்லையா? பெட்டை நாய் வளர்க்கிறவை கண்திறக்க முதல் தூக்கிக் கொண்டு போய் தூரத் தெருவில் கொட்டுவது எப்ப நிக்கும். நாய்களை ஒரு நோய்களாக எப்ப கருதப் போகிறோம்.

**மாயா**

அஜித்சமர நாயக்க.

அளவான உயரம், அளவான உடம்பு, சவரம் செய்யப்படாத முகம், அதில் எளிமையான, பகட்டில்லாத ஆனால் நிதானமான சிரிப்பு, அலட்சியமாக உடுக்கப்பட்ட ஆனால் தரமான ஆடைகள்.... அவரை நான் முதன் முதலாக சந்தித்தது கடந்த ஆண்டு கொழும்பில் நிகழ்ந்த ஹிரு கலைக்கூடலில் தான். சண்டே ரைம்ஸில் அதிகம் பிரபல்யமான ஐந்தாவது பத்தி எனப்படும் அங்கதச் சுவைகலந்த அரசியல் விமர்சனப்பத்தி ஒன்றை புனைபெயரில் எழுதிவருபவர் என்ற ஒரு அறிமுகம் காரணமாக அவரைக்குறித்து ஒரு தனி மரியாதை என்னிடத்தில் இருந்தது. அவருடைய ஐந்தாவது பத்தி அரசியலையும், அரசியல்வாதிகளையும் அங்கதச் சுவைசொட்ட விமர்சிக்கும் விதத்தால் இலங்கைத்தீவிலும் அதற்கு அப்பாலும் பிரசித்தமானது.

'ஹிரு'கலைக்கூடலில் அவர் சிங்கள மீடியாக்காரர்களின் தரப்பில் ஒரு பேச்சாளராகக் கலந்து கொண்டிருந்தார்.

தமிழ் மீடியாத்தரப்பில் எனது பேச்சின் பின்பு அவருடைய பேச்சு வந்தது. தனது பேச்சில் அவர் குறிப்பிடத்தக்க அளவிற்கு எனது பேச்சை வழிமொழிந்தே பேசினார். அவர் சொன்னார்...“எனக்கு முன்பு பேசிய வன்னியில் இருந்துவந்த தமிழ்ச் சகோதரர் சொன்னார்... கொழும்புமைய மீடியாக்கள் தமிழர்களை புரிந்துகொள்ளத் தவறிவிட்டன அல்லது புரிந்து கொள்ளவிரும்பவில்லை என்று. நான் அவரிற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் எமது மீடியாக்கள் தமிழர்களை மட்டுமல்ல சிங்களவர்களையுமே சரியாகப் புரிந்து கொள்ளவில்லைத் தான்... இந்த மீடியாக்கள் தமது எஜமானர்களான சில முதலாளிகளிற்கு மட்டுமே சேவகம் செய்கின்றன. அவை தமிழர்களிற்கு மட்டுமல்ல சிங்களவர்களிற்கும் சேவகம் செய்வதில்லை. அவை தமிழர்களிற்கு மட்டும் தான் அநீதிசெய்கின்றன என்பதல்ல. மாறாக சிங்களவரிற்கும் அவை தீமையைத்தான் செய்து வருகின்றன...” என்ற தொனிப்பட.

பலத்த கரகோசத்தின் மத்தியில் அதிக எதிர்பார்ப்புக்களை தூண்டிவிடுவதாக அஜித் சமரநாயக்காவின் அந்த உரை அமைந்திருந்தது. அது அவரைப் பற்றிய மதிப்பை மேலும் ஒரு படி உயர்த்துவதாயும் இருந்தது. இது நடந்தது கடந்த ஆண்டு.

இதெல்லாம் நடந்து பலமாதங்களின் பின் அண்மையில் சில வரங்களிற்கு முன்பு கொழும்பு பத்திரிகைகளில் சில புகைப்படங்கள் வந்திருந்தன. மீடியாக்காரர்களிற்கான விருது வழங்கும் வைபவம் பற்றிய படங்கள் அவை. அதில் அஜித் சமரநாயக்கவும் ஒரு பிரமுகராகக் கலந்துகொண்டு விருதுகளை வழங்கியிருந்தார். தமிழர்களையும் சமாதானத்தையும் எதிர்த்து காட்டூண்கீறியதாலேயே பெருமளவிற்குப் பிரபல்யமடைந்த இலங்கைத்தீவின் மூத்த காட்டூணிஸ்றாகிய விஜய சோமாவிற்கு அவர்விருது வழங்கும் படம் ஒன்றின் கீழ் “அஜித் சமரநாயக்கா - லேக்கவுசின் பிரதான ஆசிரியர்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

தகவலை உறுதிப்படுத்தும்பொருட்டு கொழும்பில் உள்ள நண்பர்களைக் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள் அஜித் இப்போது அரசசார்பு லேக்கவுசில்தான் வேலைசெய்கிறார் என்று. எப்படி அவர் இப்படி ஒரு முடிவை எடுத்தார். என்று கேட்ட போது அவர்கள் சொன்னார்கள்... கொழுத்தசம்பளம், வாகனசுகம், போன்ற ராஜபோகங்கள் அவரைக் கவர்ந்திருக்கலாம் என்று. தவிர சில சமயம் சந்திரிகா அவரை தனிப்பட்ட முறையில் சந்தித்துக் கேட்டிருக் கலாம் என்று ஒரு ஊகமும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் சந்திரிகா சனாதிபதியாகிய புதிதில் விக்ரர் ஐவன், வசந்தராசா போன்ற பல வித்தியாசமான புத்திஜீவிகள், மீடியாக்காரர்கள் போன்றோரைக் கவர்ந்திழுத்து பின்நாளில் அவர்களைப் பாவித்து விட்டு குறிப்பாக அவர்களில் சிலரை நலம் கெடுத்து விட்டு தொப்பென்று கீழே போட்டதும் நினைவிலிருக்கலாம். அஜித் சமரநாயக்கவும் இந்தப் பட்டியலில் கடைசியாக வந்து சேர்ந்தவராக மாறக்கூடும்.

எதுவோ, சமர நாயக்க போன்றோரே இப்படித்தளம் பலாம்என்றால் ஜே.வி.பி.யையும், ஹெல உறுமயவையும் குறை கூறிக்கொண்டிருப்பது எப்படி? அதிலும் குறிப்பாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை எனப்படுவது தனித்தமிழ் ஈழத்திற்கான ஒரு இரகசிய வரைபடமே என்ற விபரீதமான ஒரு முற்கற்பிதம் தென்னிலங்கையில் மேலோங்கி வரும் ஒரு பின்னணியில், இந்த முற்கற்பிதங்களைக் களைய வேண்டிய தேவைகள் முன்னெப்பொழுதையும்விட வலிமையாக உணரப்படும் இந்நாட்களில் அஜித் சமரநாயக்க போன்றோரே லேக்கவுசிற்குள் இருக்கும்போது இனி யாரைத்தான் நம்புவது? யாரிடமிருந்து மாற்றங்களை எதிர்பார்ப்பது?



# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னால் உள்ள பணி

நிலாந்தன்

கடந்த வாரம் கிளிநொச்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிகள் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்தபோது ஒரு முக்கியமான தீர்மானம் எடுக்கப் பட்டது. அதன்படி இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றிய தெளிவூட்டும் நடவடிக்கைகளை பரவலாக்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இச்சந்திப்பிற்கு. சில கிழமைகளிற்கு முன்பு அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் தன்னைச் சந்தித்த கனேடியத்தூதுக்குழுவிடமும், தென்னிலங்கையில் இருந்துவந்த சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடமும் இது தொடர்பாக வலியுறுத்திக்கதைத்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன.

அதாவது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை எனப்படுவது தென்னிலங்கையில் பெருமளவிற்கு தப்பர்த்தம் செய்யப்பட்டு வருகிறது என்ற தொனிப்பட அவர் கதைத்திருந்தார்.

முன்பு சமஷ்டித்தீர்வு எனப்படுவது பிரிவினையின் தொடக்கம் என்ற அச்சம் சிங்கள வெகுசனங்களின் மத்தியில் பரப்பப்பட்டுவந்தது. இப்பொழுது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை எனப்படுவது பிரிவினைக்கு இட்டுச்செல்லும் என்ற கருத்து பரவலாக்கப்பட்டு வருகின்றது. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய விபரீதமான இந்த முற்கற்பிதத்தைப் பரப்பிக் கொண்டிருப்பது ஜே.வி.பி மட்டுமல்ல அதைவிட முக்கியமாக தெற்கிலுள்ள “ராவய'' போன்ற சில பத்திரிகைகள்தவிர, பெரும்பாலான சிங்கள, ஆங்கில மீடியாக்களே இந்தக் காரியத்தைத் தமது தொழிற் தர்மமாக கருதிச் செய்து வருகின்றன.

செய்திகளாகவும், செய்திக்கட்டுரைகளாகவும், காட்டூண்கள், ஆசிரியத் தலையங்கங்கள் மற்றும் தாங்களே எழுதிவிட்டு யாரோஒருவரின் பெயரையும் முகவரியையும் போடும் வாசகர் கடிதங்களாகவும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக முறியடிக்கக் கடினமான ஒரு கருத்துருவாக்கம் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டது.

இதை முறியடிக்கும் பொறுப்பு தெற்கில் உள்ள சிவில் சமூக அமைப்புகள், சமூக செயற்பாட்டுக்குழுக்கள், மதஅமைப்புக்கள், மனித உரிமைக்குழுக்கள் கலை இலக்கிய அமைப்புக்கள் மற்றும் நீதியான ஒரு சமாதானத்தை வேண்டி நிற்கும் மீடியாக்கள் அரசியல் கட்சிகள், அரசு சாரா அமைப்புக்கள் அனைத்திற்கும் உண்டு.

ஆனால் இந்தப் பொறுப்பை ஏற்று ''றிஸ்க்'' எடுத்து சிங்கள வெகுசனங்களின் மத்தியில் இறங்கி வேலை செய்ய மிகத்துணிச்சலான ஆட்கள் மிகமிகச் சிலரே உண்டு. அவர்களையும் கூட சர்வதேச அரசுசாரா நிறுவனங்களிற்கு ஊழியம் செய்து நாட்டைப் பிரித்துக்கொடுக்க முயல்வோர் என்ற முத்திரைகுத்தி தனிமைப் படுத்தும் வேலைகளை பிரதான நீரோட்ட மீடியாக்கள் செய்து வருகின்றன.

சில சமயங்களில் கொழும்பில் உள்ள வர்த்தக சம்மேளனம் போன்ற வர்த்தக அமைப்புக்கள் சமாதானத்தை வலியுறுத்திக்கதைக்கும் அளவுக்குக் கூட தீவிரமாகக் கதைக்க தயாராயில்லாத சிவில் சமூக அமைப்புக்களே தென்னிலங்கையில் அதிகம் உண்டு.

ஆயின் இத்தகையதொரு பகைப்புலத்தில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து தென்னிலங்கையில் காணப்படும் முற்கற்பிதங்களைக் களைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் முடியுமா? அதுவும் அவர்களைப் புலிகளின் ஆட்கள் என்று பெரும்பாலான சிங்கள மக்கள் நம்பிக்கொண்டிருக்கும் ஒரு அரசியற்சூழலில் இது சாத்தியப்படுமா?

நாடாளுமன்ற உறுப்பினர்களிற்குரிய பாரம்பரியமான மிதமான மெதுவான வழிமுறைகளிற்கூடாகச் சிந்தித்தால் இது நடக்கக்கூடிய காரியமேயல்ல. மாறாக முற்றிலும் புதிதாக புரட்சிகரமாக எதையாவது சிந்தித்துச் செயற்படுத்தினால்தான் உண்டு.

இத்தகைய நவீன அணுகு முறைகளிற்கு தென்னிலங்கையில் சமகால உதாரணம் ஒன்று உண்டு. அதாவது - யு.என்.பிஐச் சேர்ந்தமிலிந்த மொறகொட கட்சிக்குள்ளும், மக்கள் மத்தியிலும் தனது பலத்தை விஸ்தரிக்கும் நோக்கத்தோடு கிராமங்கள் தோறும் சென்று கைக்கடக்கமான சிறிய ஆனால் பயன்பொருத்தமான சந்திப்புகளை மேற்கொண்டு வருகிறார். யு.என்.பிக்குள் ஓடும் இள ரத்தம் என்று கூறத்தக்க மிலிந்த மொறகொடவின் அணுகுமுறைபோன்ற ஒரு புதிய அணுகுமுறையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டு பிடிக்க வேண்டும்.

பாரம்பரியமான நாடாளுமன்ற உரைகளோ அல்லது வீரவசனங்களோ அல்லது கொள்கைப்பிரகடனங்களோ ஹன்சார்ட்டின் பக்கங்களை நிரப்ப மட்டுமே உதவும். மக்கள் மத்தியில் இறங்கி வேலை செய்வதற்கு முற்றிலும் நவீனமான ஒரு வேலைத்திட்டம் தேவைப்படுகிறது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களில் ஒருவராயிருக்கும் பத்மினி சிதப்பரநாதன் அரங்கச் செயற் பாடுகளிற்கூடாக அரசியலுக்கு வந்தவர் அவரைப் போன்றவர்கள் இது விசயத்தில் அரங்கச் செயற்பாடுகளிற்கூடாக எதையாவது செய்யமுடியுமா என்று சிந்திக்க வேண்டும்.

இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபைக்குப் பின்னால் இருக்கும் நியாயங்கள் சிங்கள வெகுசனங்களுக்கு போதியளவு தர்க்கபூர்வமாக இதுவரை எடுத்துச்சொல்லப்படவில்லை என்பதே தென்னிலங்கையின் களயதார்த்தமாயிருக்கிறது. இந்நிலையில், அங்குள்ள மீடியாக்களையும் அரசியல் கட்சிகளையும் அரசுசாரா அமைப்புக் களையும் நம்பிக்கொண்டிருப்பதை விடவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே இந்தப் பொறுப்பை ஏற்று சிங்கள வெகுசனங்களின் மத்தியில் இறங்கி வேலை செய்தால் என்ன? ●

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

கொஞ்சக்காலத்திற்கு முன்னர் யாழ் உயர்நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு நாட்டப்பட்ட அடிக்கல் நாட்டப்பட்ட ஓரிரு நாட்களுள் காணாமல் போய்... பின்னர் கண்டுபிடித்து மீண்டும் நாட்டப்பட்டதாக கூறப்பட்டது.



இப்போது பிரதமர் நாட்டிய நினைவுக்கல் ஒன்றே காணாமல் போய்விட்டதாம்! அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 53 ஆவது நிறைவு நாளை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள கட்டடமொன்றிற்கான நினைவுக்கல் அண்மையில் சிறிலங்காபிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் திரைநீக்கம் செய்யப்பட்டது. செய்திகளில் வெளிவந்த விடயமேயாகும்.

இப்போது திடீரென இந்தக்கல்லைக் காணவில்லையாம்!

இனந்தெரியாதோர் அதனை அகற்றிவிட்டார்களாம்!

## கிரக மாற்றத்துக்காகவா?

## தலைமை மாற்றத்துக்காகவா?

பரபரப்பான புதிய செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நினைவுக்கல் திரைநீக்க நிகழ்வே ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. இந்த நிகழ்வு நடைபெற்றபோது சனாதிபதி தன் சொந்தக்காரணங்களுக்கான வெளிநாட்டு பயணத்தில் இருந்தார். அந்தச் சொந்தக்காரணங்கள் குறித்தே பலகதைகள் உலாவின... அதனை விட்டுவிடுவோம்.

அவர் அங்கிருந்தே இந்த நிகழ்வை தான் நாடுதிரும்பும்வரை ஒத்திவைக்குமாறு அறிவித்திருந்தாராம். ஆனால் பிரதமர் அவரது வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டு நிகழ்வை நடாத்தி நினைவுக்கல்லை திறந்து வைத்துவிட்டாராம். நடந்தது அவ்வளவுதான்!

இப்போது அந்தக்கல் மாயமாக மறைந்துவிடவில்லை. இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டுவிட்டது.

இனந்தெரியாதோர் என்று சொல்வதிலும் முகம் தெரியாதோர் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

அகற்றியவர்கள் நிச்சயமாக மகிந்தராஜபக்ஷவிற்கு எதிரான சனாதிபதியின் ஆதரவுச்சக்திகள் தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் யார்யார் அதில் பங்குகொண்டார்கள் என்பது தெரியாது அவ்வளவுதான்.

இதற்கிடையில் ஒரு கிசு கிசு...

மகிந்தவும். சந்திரிகாவும் சாத்திரத்தை நம்புகின்றவர்கள். ஒரு கொஞ்சக் காலம் வெளிநாட்டில் தங்கினால் உங்களுக்கு நல்லது என்றும். கிரகமாற்றம் இப்போது உங்களுக்கு சாதகமானதாக இல்லை. அது சாதகமானதும் நாடு திரும்புங்கள் என சனாதிபதியின் சாத்திரிமார் அவருக்கு ஆலோசனை கூறினார்களாம். அவர் வெளிநாடு பறந்துவிட்டார். அவர் வருவதற்குள் நீங்கள் நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து கட்சியின் தலைவராக உங்களை இனங்காட்டி பிரபலப்படுத்துவது உங்களுக்கு நல்லது என மகிந்தவின் சாத்திரிமார் தெரிவிக்க. அவர் அதனைச் செய்துவிட்டாராம். நாடுதிரும்பிய சனாதிபதிக்கு அந்த நினைவுக்கல் அவருக்கு சாதகமான நேரத்தில் நாட்டப்படவில்லை என்று சாத்திரிமார்கூற... அது காணாமல் போயிற்றுது. நாட்டை ஆட்சித் தலைமைகள் ஆளுகின்றனர்.ஆட்சித் தலைமைகளை சாத்திரிமார் கையாளுகின்றனர்.

இன்னும் ஒரு கிசு கிசு...

சனாதிபதிக்கும். பிரதமருக்குமிடையிலான முறுகல் நிலையைப் பயன்படுத்தி பிரதமர் பதவிக்கு அநுராவை கொண்டு வரும் முயற்சியில் ஜே.வி.பி யினர் ஈடுபட்டுவருகிறார்களாம்...

மகிந்தரே துண்டை உதறித்தோளில்போட்டு. மீசையை முறுக்கி சவாலைசமாளியுங்கள்.

---

## புத்தி இருந்தால் ஏற்றுக்கொள்ளட்டும் இல்லையேல் பட்டுத்தெளியட்டும்



"தமது எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமையை வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்கவேண்டும்!"

இப்படி ஒரு கருத்தை ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் வெளியிட்டிருக்கிறார் என்றால் ஆச்சரியப்பட வேண்டிய விடயம்தான். அதுவும் சமாதான முயற்சிகள் ஒரு சிக்கலானதும் நெருக்கடியானதுமான கட்டத்தை எட்டியுள்ளநிலையில் இப்படியானதோர் அறிவிப்பை விடுவதனாது - சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டை எடுக்கமுடியாது அரசும். சனாதிபதியும் உள்ளுக்குள் முரண்பட்டு திணறிக்கொண்டிருக்கையில் - எத்தகைய அழுத்தத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும் என்பதை கூறவேண்டியதில்லை.

சர்வதேச சமாதான வலியுறுத்திகள் மேற்குறித்த கருத்தை நியாயபு,ர்வமான சிந்தனையுடன் கருத்தில் கொள்வார்களாயின் அரசுக்கு சமாதானம் தொடர்பான அழுத்தங்களை அவர்களால் அதிகரிக்கவும் முடியும்!

ஆனால் இவையெல்லாம் சாத்தியமா? இத்தகைய கருத்தின் ஆழமான - நியாயபு,ர்வமான அர்த்தத்தளத்தை அரசும். சர்வதேசமும் புரிந்து கொண்டு செயற்படுமா என்பது வேறுவிடயமாகும்.

சரி விடயத்திற்கு வருவோம்!

மேற்குறித்த கருத்துக்குரியவர் வேறுயாருமல்ல. குமார் ரூபசிங்கவேதான்! அதாவது இந்நாள் சனாதிபதியின் முன்னாள் மைத்துனர். அதாவது. சந்திரிகாவின் சகோதரி சுனேத்ரா பண்டாரநாயக்காவின் முன்னாள் கணவர்.

அதாவது. ஒரு காலத்திய 'பலவேகய' இயக்கத்தின் தலைவர்.

'அலேர்ட் இன்ரர் நாஷனல்' என்ற அமைப்பின் முக்கியஸ்தராக இருந்தவர் தற்போது இலங்கையின் இனவிவகாரம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரைகள். புத்தகங்களை எழுதிவருபவர்.

கடந்த பலவருடங்களாக இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டவர் - பொது சமூக அமைப்பின் தற்போதையதலைவர் அந்தவகையில் அவரது அண்மைக்காலக் கருத்துக்கள் சமாதான வலியுறுத்திகளின் கவனத்திற்குக்கொண்டு செல்லப்படுதல் நல்லதேயாகும்.

'வடக்கு கிழக்கு மக்கள் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கக்கூடிய உரிமைகளை அவர்களுக்கு வழங்கவேண்டும் எனக்கூறும்அவர். அதன் ஆரம்பக்கட்டத்தை தமிழீழவிடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை உள்ளடக்கியுள்ளது என்றும் இது கடந்த 25 ஆண்டுகால யுத்தத்தின் பிரதிபலிப்பான திட்டமே எனவும். இது இருதரப்பும் வெற்றிபெறக்கூடியதான தீர்வைத் தரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அது மட்டுமல்ல தமிழீழவிடுதலைப்புலிகள் வரலாற்றில் முதல் தடவையாக முன்வைத்துள்ள யோசனைக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றும் வலிறுத்தியுள்ளார்.

ஆனால் ஆக்கபு,ர்வமான யோசனைகளுக்கும். ஆலோசனைகளுக்கும் மதிப்பளிக்கும் அரசாக சிறிலங்காவின் அரசுகள் ஒருபோதும் இயங்கியதில்லையே! நன்றி. மிஸ்டர் ரூபசிங்க.

நீங்கள் கூறிய கருத்துக்களை உங்களுக்கும் சனாதிபதி குடும்பத்தினருக்குமிடையேயான ஒரு காலத்தை உறவுநிலையைப் பயன்படுத்தி ஏன் சந்திரிகாவுக்கு விளக்கமுடியாது?

முயற்சி பண்ணுங்களேன்!

நல்ல சுயபுத்தி இருந்தால் ஏற்றுக் கொள்ளட்டும்... இல்லையேல் விட்டுவிடுங்கள் பட்டுத்தெளியட்டுமென்று!

---



கடைசியில் தொண்டமான்... அவர்தான் ஆறுமுகன் தொண்டமான் தன் பாரம்பரிய திருமுக நிஜமுகத்தை வெளிப்படுத்தி தான் தாத்தாவுக்கேற்ற பேரன் என்பதை நிரூபித்தே விட்டார்.

அரசு பக்கம் தாவிவிட்டதைத்தான் கூறுகிறேன்.

தேர்தல் முடிந்த மறுநாளே ஆறுமுகனார் தான் தீர்மானம் எடுத்து வைத்த ஒன்றைத்தான் கால தேசவர்த்தமானம் அறிந்து நடைமுறைப்படுத்தியுள்ளார்.

ஆளும் தரப்போடு சமரசம் செய்துகொண்டால்தான் அமைச்சராக அடையாளப்படுத்த முடியும் என்பது தொண்டமான் - அதாவது அந்த மறைந்த தொழிற்சங்க வாதித்தலைவரும் ஆறுமுகனின் தாத்தாவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் கடைப்பிடித்த கோட்பாடாகும்.

## சந்திரிகா – ஆறுமுகம் கூட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேட்டு

அது அவரை இறக்கும் வரைக்கும் ஆட்சிக்கு வருவோரைத்தீர்மானிக்கும் சக்தியாக (KING MAKER ) இருக்க வைத்ததும் உண்மைதான்.

அவர் பின்னால் அணிதிரண்டிருந்த லட்சக்கணக்கிலான அப்பாவி மலையக மக்களின் வாழ்க்கையில் விடிவு ஏற்பட்டதோ இல்லையோ. தொண்டமான் பரம்பரை அரச பரம்பரையாகவே தொடர்ந்து இருக்கும் தந்திரோபாயத்தை நன்றாகவே தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.

ஆறுமுகனார் அந்த அரசியல் சுவட்டினை அப்படியே அச்சொட்டாக தொடர்கிறார் என்பதில் ஐயமில்லை.

அரசுக்கு ஆதரவினை வழங்கத்தயார் என அவர் அறிவிக்க மூன்று மாதகாலத்திற்கு மேலாகிவிட்டபோதும். அவர் அதற்கான முடிவை தேர்தல் முடிந்த உடனேயே எடுத்துவிட்டார் என்பதே உண்மை.

ஆட்சிக்கு ஆதரவளிக்க அவர் கூறிய காரணம்தான் பொருத்தமற்றதாக உள்ளது. தனது மலையக மக்களுக்கு ஆட்சியோடு ஒன்றி இருந்தால்தான் சேவை செய்யமுடியும். அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முடியாவிட்டாலும் சலுகைகளையாவது பெற்றுக்கொடுத்து விடமுடியும் என அவர் ஆட்சிக்கு முண்டு கொடுக்க தான் எடுத்த முடிவுக்கு காரணம் கூறியிருந்தால் அது இயல்பானதாக இருந்திருக்கும்.

ஆனால் 'சமாதான முயற்சிகளுக்கு ஆதரவை வழங்கவும் அபிவிருத்திக்கு உதவும் தான்' ஆட்சியோடு இணைவதாக அறிவித்திருப்பது தான் கோமாளித்தனமாக உள்ளது. ஏற்கனவே அவர் ஒட்டிக்கொண்டிருந்த ஐக்கியதேசிய முன்னணியும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசின் சமாதான முயற்சிகளுக்கும் தேசிய அபிவிருத்தித்திட்டங்களுக்கும். வெளிப்படையாக ஆதரவளிக்கத்தயார் என அறிவித்துள்ள நிலையில் தொண்டமானால் தனியாக அத்தகைய அறிவிப்பொன்றை வெளியிட வேண்டிய தேவையில்லை. ரணிலோடு இருந்த மாதிரி இருந்து கொண்டேஅரசின் சமாதான-அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஆதரவளித்திருக்கலாம் தானே...!

ஆனால் அதிகார அமைச்சுப்பதவியாசை அவரை இயங்க விட்டால் தானே..! அந்தக்கதிரையில் அமர மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி பதவிக்கு வரும் வரை காத்திருக்கும் பொறுமை அவருக்கு கிடையாது.

கூட்டணி மாறிவிட்டார் - அதாவது சமாதானத்திற்கு எதிரானவர்களின் கூட்டணிக்கு சமாதானத்திற்கு உதவ தாவிவிட்டார். அவ்வளவு தான்.

அதுதான் அவரது அரசியல் இலக்கு!

ஆனாலும் ஒரு குழப்பம். அவர் ஆட்சியோடு இணைவதாக அறிவித்த மறுநாளே இன்னும் மூன்று மாதங்கள் மீண்டும் அதிக பலத்துடன் ஆட்சிக்குவருவேன் என்று அறிவித்துள்ளார். அதுதான்....அதற்கென்ன அப்போதும் ஆட்சிக்கு வருபவருடன் ஒட்டிக்கொள்ளலாம் தானே கடவுளே...!

---

## இத்தனை நடந்த பிறகும் இவ்வளவு ஆவேசமா...?



எப்படியோ ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ரோஷம் பிறந்துவிட்டது. இன்னும் மூன்று மாதங்களில் அதிகபலத்துடன் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைப்பிடிக்கப்போகிறது பாருங்கள் என சூளுரை செய்துள்ளார்.

அதுவும் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு ஆட்சியைப் பிடிக்கும் என்றும் கூறியுள்ளார். அதுதான் ஆச்சரியப்படுத்தும் விடயமாகும்.

அதுவும் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கியதேசியக் கட்சிக்கூட்டிலிருந்து விலகி ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் ஒட்டிக் கொள்ளச் சென்றுவிட்ட நிலையில் இதனை இவர் கூறியுள்ளமையானது மேலும் வியப்பூ ட்டும் விடயமாகும்.

தனது கட்சிக்காரர்களுக்கு உற்சாகமூட்டி அவர்கள் மேலும் கட்சி தாவுதலைத் தடுக்க இப்படிக் கூறியிருக்கவும் கூடும்.ஆனால் அது சாத்தியமானதல்ல. பதவிப்பதர்கள் கட்சிதாவியேதீரும்.

எனவே எந்த நோக்கில்- உறுதியில் ரணில் இந்த அரசியல் ஆரூடத்தை வெளிப்படுத்தியிருப்பார்?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் பிளவு ஏற்படும் என்றோ. பிளவை ஏற்படுத்தலாமென்றோ நம்புகின்றாரா?

அப்படியாயின் ஜே.வி.பி அரசிலிருந்து விலகக்கூடும் என்றோ. பிரதமர் ராஜபக்ஷ சனாதிபதியுடன் முறுகல் நிலையை கொண்டுள்ள சூழலில் அவரும் ஏனையஅவரது ஆதரவாளர்களும். ஜே.வி.பியின் உள்நுழைவால் அதிருப்தி கொண்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் ஐ.ம.சு. முன்னணியில் இருந்து விலகக்கூடும் எனவும் அப்படி விலகினால் அவர்களை தம்முடன் இணைத்துக் கொள்ளலாம் எனவும் நம்புகின்றாரா?

அல்லது சனாதிபதியே ஆட்சியைக் கலைத்து தேர்தல் ஒன்றை நடத்தக் கூடும் என நம்புகிறாரா? அப்படிக் கலைத்து தேர்தல் நடத்தும் போது ஆட்சியை புதிய கூட்டணிஒன்றை அமைப்பதன் மூலம் கைப்பற்றலாம் என எண்ணுகிறாரா.

இல்லையேல். ஜே.வி.பி ஹெலஉறுமய போன்ற பேரினவாத சக்திகளுடன் சமரசமாகிவிட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொண்டு ஆட்சியை கைப்பற்றலாம் எனக் கனவு காண்கிறாரா?

அல்லது வேறு ஏதாவது ரகசிய அணுகுமுறைகளைக் கையாண்டு ஆளும்கட்சியின் அதிருப்தியாளர்களை தம்வசம் இழுத்துக் கொண்டு ஆட்சியமைக்கத் திட்டமிடுகிறாரா?

இவையெல்லாவற்றிற்கும் மேலாக சில வேளைகளில் சனாதிபதியுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைக்கும் திட்டத்துடன் இருக்கின்றாரா?

இவ்வாறு பல கேள்விகள் எழவே செய்கின்றன.

இவை தவிரஅவர் ஆட்சியை அமைப்பதற்கான மாற்றுவழிகள் ஏதும் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் மூன்றுமாதங்களில் ஆட்சியை கைப்பற்றுவோம் அதுவும் சகல கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் அதனை சாத்தியமாக்குவோம். என்று சூளுரைத்துவிட்டார்.

-இருந்து பார்ப்போம் என்ன செய்யப் போகிறார் என்று?

அதுசரி திருவாளர் ரணில் அவர்களே நீங்கள் ஆட்சியை மீண்டும் அமைக்கும் போது அதில் தொண்டமான் கோஷ்டியையும் இணைத்துக் கொள்வீர்கள் தானே..?

தொண்டமான் விடயத்தில் சிங்கள ஆட்சித்தலைமைகள் ஒருபோதுமே முதுகொலும்பு உள்ளவர்களாக செயற்பட்டது கிடையாதே...!

**செங்குட்டுவன்**

# சிங்களம் தமிழர்களுக்கு கொடுக்கும் மன அழுத்தங்களும்

## மன அழுத்தங்களை முதலீடு செய்யும் சிங்களப் புலனாய்வும்

**— நீலன் —**

தனியரசுக்கான சுதந்திர வேட்கையும், பிடிவாதமான இனப் பற்றும் கொண்ட தமிழர்களை அடிமைப்படுத்தவென சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களுடன் போர் புரிந்து வருகின்றார்கள். இப்போரின் ஒரு பகுதியாக தமிழர்களுக்கு கொடுக்கும் மன அழுத்தங்கள் போரியல் உத்தியாக இருந்துவருகின்றது.

தமிழர்களை பூர்வீக வாழ்விடங்களைவிட்டு இடம்பெயரச் செய்தல், தொடர் இடம்பெயர்வு களை ஏற்படுத்தி அகதிகளாக்குதல், அகதிகளாக திறந்தவெளித்தடுப்பு முகாம்களில் வாழச்செய்தல், தமிழர்கள் மீது விமானக்குண்டுகளை, பீரங்கிக்குண்டுகளை வீசி உயிர் பற்றிய மரணப்பயத்தை ஏற்படுத்துதல், பொருளாதாரத் தடைகளை விதித்து அன்றாட வாழ்க்கைச் சுமைகளைச் சுமத்துதல் இவைகள் யாவும் மொத்தத்தில் தமிழர்களுக்குக் கொடுக்கும் மன அழுத்தங்களாகும். இவைகளே தமிழர்களுக்கு "போர்க்களைப்பை"ஏற்படுத்தும் போரியல் உத்திகளாக இருந்துவருகின்றன.

புலனாய்வுப் போர்க்களத்தில் சிங்கள புலனாய்வாளர்கள் தமிழர்களின் சிந்திக்கும் திறனை மழுங்கடித்து அவர்களை சதா முட்டாளாக்கும் புலனாய்வு உத்திகளை கையாண்டு வருகின்றார்கள்.

சிங்களம் தமிழர்களுக்கு கொடுக்கும் மன அழுத்தங்களால் தமிழர்கள் உள ரீதியாகக் களைப் படைந்து வாழ்கின்றார்கள். இவ் உளநெருக்கீடுகளை முதலீடு செய்யும் சிங்கள புலனாய்வு உத்திகளை இங்கு அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

சிங்கள பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள், சிறைக்கூடங்கள், தடைமுகாம்கள் போன்ற இடங்கள் தமிழர்களுக்கு மன அழுத்தங்களையும், உள நெருக்கீடுகளையும் கொடுக்கும் களங்களாக இருந்துவருகின்றன.

இக் களங்களில் உளவு வட்டத்திற்கான ஆளணிகளை உற்பத்தி செய்யும் புலனாய்வு உழைப்பில் சிங்களப் புலனாய்வாளர்கள் கடுந்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இப்படியான உளவியல் உத்திகளை ஒவ்வொரு உண்மை உதாரணங்களுடன் ஏழு நிகழ்வுகளை மீட்டுப்பார்ப்போம்.

முதலாவதாக சிங்களச் சிறைக்கூடத்தடுப்பில் இருக்கும் தமிழர்களைக் காணச்செல்லும் குடும்ப உறுப்பினர்களை, மிக நெருங்கிய உறவினர்களை மன அழுத்தங்களுக்குள்ளாகின்றார்கள். சிங்களப் புலனாய்வாளர்கள் கொடுக்கும் பல தரப்பட்ட மன அழுத்தங்களால் அவர்கள் உள ரீதியாக களைப்படைகின்றார்கள். அதாவது தமக்கான உளவு வலை அமைப்பினுள் அவர்களை இணைத்துக்கொள்வதில் விடாப்பிடியான அணுகுமுறைகளை புலனாய்வாளர்கள் கையாண்டுவருகின்றார்கள்.

யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்த பீற்றர் இஸ்டீபன் 92இல் கொழும்புச் சிறைக்கூடத் தடுப்பில் இருந்துள்ளார். அக்காலப்பகுதியில் அவரது சொந்த மைத்துனரான யேசுராசா சிறைக்கூடத்தடுப்பில் இருக்கும் பீற்றர் இஸ்டீபனைக் காணச்சென்று வருபவராக இருந்தார். இச் சமயங்களில்தான் சிங்கள புலனாய்வாளரான செனவிரட்ணா யேசுராசாவை அணுகி தமக்கான ஒரு பணியை முடித்துத்தந்தால் பீற்றர் இஸ்டீபனை விடுதலை செய்யலாம் என்கின்ற மன அழுத்தத்தைக் கொடுத்திருந்தார்.

மைத்துனரை எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்ற மன அழுத்தத்தினுள் இருந்து வந்தவர்தான் யேசுராசா. ஆதலால் அவர் தன் சம்மதத்தை தாமதமின்றி செனவிரட்ணாவிடம் தெரிவித்தார். அதனை அடுத்து யேசுராசா கொழும்பில் வைத்து கிளைமோர், றிமோட் தாக்குதல் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டார்.

பயிற்சிகளையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுக்கொண்ட யேசுராசா இரண்டு கிளைமோர்கள், (ஒவ்வொன்றும் 5.K g) றிமோட் கொன்றோல் கருவி ஆகியவற்றுடன் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். அவரின் தாக்குதல் இலக்காக அப்போது புலிகளின் அரசியல் பிரிவு பிரமுகரான யோகி இருந்தார். அத்தாக்குதலைச் செய்வது தமிழர் போராட்டத்திற்கு நம்பிக்கைக்கேடு செய்கின்ற செயல் என்கிற எண்ணத்தினால் அவர் அவ் வெடிப்பொருட்களை புலிகளிடம் ஒப்படைத்தார். அதனால் அவர் தன்மன அழுத்தங்களை மேலும் அதிகப்படுத்தாது அமைதியான மன நிலைக்குள் வாழ்ந்துவருகின்றார்.

இரண்டாவது சம்பவமாக சிங்கள இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமிழர்கள் நடமாடுவதற்கு ஒருவார அனுமதி வழங்குதல், ஒரு மாத அனுமதி வழங்குதல், ஆறுமாத அனுமதி வழங்குதல், நிரந்தர விசேட அடையாள அட்டை வழங்குதல் போன்ற இறுக்கமான புலனாய்வுத் தந்திர ஏற்பாடுகள் இருந்துவருகின்றன.

புலனாய்வு தந்திர ஏற்பாடுகளின்போது சிங்களப் புலனாய்வாளர்கள் தமிழர்களை தமது உளவுப் பொறிக்குள் வீழ்த்தும் குறிக்கோளுடன் இயங்குகின்றார்கள்.

திருமலை நகரினுள் தற்காலிகமாக வாழ்ந்து வந்த மூதூர் வாசியான சுரேஸ்குமார் 94இல் நிரந்தர விசேட அட்டையை பெற்றுக் கொள்வதற்காக பொலிஸ் நிலையத்திற்கு சென்றுவந்தார். அதனைக் கொடுப்பதில் தாமதப்படுத்தும் தந்திரத்தை புலனாய்வாளர்கள் கையாண்டு வந்தனர். இதனால் சுரேஸ்குமார் அடிக்கடி பொலிஸ் நிலையம் சென்றுவரும்போது C.S.U பாஸ்கரனின் அறிமுகம் ஏற்படுகின்றது. அதனை அடுத்து C.S.U பாஸ்கரன் சுரேஸ்குமாரை அணுகி வேலை செய்ய விருப்பம் தெரிவித்தால் விசேட அடையாள அட்டையை விரைவாக பெற்றுத்தர முடியும். என்கின்ற நம்பிக்கையை ஊட்டி தொடர் அழுத்தங்களை கொடுத்துவந்தார்.

ஒரு புறம் C.S.U பாஸ்கரன் சுரேஸ்குமாருக்கு கொடுத்த மன அழுத்தங்களால் புலனாய்வுப் பணியை செய்ய அவர் விருப்பம் தெரிவித்தார். மறுபுறம் சுரேஸ்குமார் பாஸ்கரனின் புலனாய்வு அணுகுமுறைகள் தொடர்பான விடயங்கள் அனைத்தினையும் புலிகளின் புலனாய்வுப் பிரிவினருக்கும் தெரியப்படுத்திவந்தார். அதனால் அவர் முழுமையான மனப்பாரத்திலிருந்து விடுதலை பெற்று நிம்மதியாக வாழ்ந்துவருகின்றார்.

மூன்றாவதாக தமிழர்கள் 98இல் மன்னார்த்தீவினுள் இருந்து தடைசெய்யப்பட்ட பொருட்களை கடல்வழி ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டுவந்து சேர்த்தார்கள். இந்நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் அரச படைகளின் தேடுதலின்போது சில தடவைகளில் பெருந்தொகையான தடைசெய்யப்பட்ட பொருட்கள் அவர்களிடம் சிக்கிக்கொள்ளும் நிகழ்வுகளும் நடைபெற்றுவந்தது.

அரசபடையினரின் தேடுதலின்போது கிளிநொச்சி வாசியான முத்துராசாவின் பொருட்கள் அரச படையினரிடம் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. சில நாட்களின் பின்னர் முத்துராசா அப்பொருட்களை மீட்டெடுப்பதற்காக பள்ளிமுனை C.S.U முகாமிற்கு சென்றார். அவ்வேளையில் C.S.U அதிகாரியான ஜெயசிறி முத்துராசாவிடம் அணுகி கதைக்கும் சந்தர்ப்பத்தில் பொருட்கள் அனைத்தையும் தங்களிடம் ஒப்படைக்கத் தயார். ஆனால் அதற்கு முதல் தனக்கான புலனாய்வு பணிகளை செய்வதற்கு சம்மதம் தரும்படி கேட்டுக் கொண்டார்.அந்நிலையில்தான் முத்துராசா சம்மதம் தெரிவித்தார். அச்சம்மதத்தை பொருட்களை மீட்பதற்கான சந்தர்ப்பமாக அவர் பயன்படுத்திய பின் ஜெயசிறியை சந்திப்பதை நிறுத்திக்கொண்டார்.

> “தமிழர்களை பூர்வீக வாழ்விடங்களை விட்டு இடம்பெயரச்செய்தல், தொடர் இடம்பெயர்வு களை ஏற்படுத்தி அகதிகளாக்குதல், அகதிகளாக திறந்தவெளித் தடுப்பு முகாம்களில் வாழச் செய்தல், தமிழர்கள் மீது விமானக்குண்டுகளை, பீரங்கிக்குண்டுகளை வீசி உயிர்பற்றிய மரணப்பயத்தை ஏற்படுத்துதல், பொருளாதார தடைகளை விதித்து அன்றாட வாழ்க்கைச்சுமைகளைச் சுமத்துதல் இவைகள் யாவும் மொத்தத்தில் தமிழர்களுக்குக் கொடுக்கும் மன அழுத்தங்களாகும். இவைகளே தமிழர்களுக்கு “போர்க்களைப்பை” ஏற்படுத்தும் போரியல் உத்திகளாக இருந்துவருகின்றன.”

நான்காவது சம்பவமாக தமிழர்களை சந்தேகத்தின் பெயரில் கைது செய்வதும் ஒரு சில மாதங்கள் தடுப்பின் பிற்பாடாக விடுதலை செய்வதும் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வழமையாக நடைபெற்று வரும் சம்பவங்களாகும்.

1999 காலப்பகுதியில் ஒரு நாள் வவுனியா நகரில் C.S.U வினரால் முல்லைத்தீவைச் சேர்ந்த கந்தசாமி சிவம் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டார். அவர் கைதாகி ஒரு மாதத்தின் பின் நிபந்தனையுடன் விடுதலையானார். இந் நிபந்தனையின் பிரகாரம் கந்தசாமி சிவம் கையொப்பம் வைப்பதற்காக பொலிஸ் நிலையத்திற்கு சென்றுவரலானார்.

பொலிஸ் நிலையம் சென்று வரும் வேளையில் C.S.U அதிகாரியான தாப்ரூ கந்தசாமி சிவத்துடன் சில மணித்தியாலங்கள் சந்திப்பொன்றைச் செய்து தன் புலனாய்வுப் பணிக்கு உள்வாங்கும் கருத்துக்களைத் திணித்திருந்தார். அம் முயற்சியில் தாப்ரூ தொடர்ச்சி பேணிவரும்போது கந்தசாமி சிவம் மன அழுத்தங்களுக்குள்ளானார்.

மனதழுத்தத்தினுள் இருந்த கந்தசாமி சிவம் வேலை செய்ய சம்மதித்து பின் தன்னை கையொப்பம் வைக்கும் நிபந்தனையை நீக்கும்படியும் தாப்ரூவிடம் கேட்டுக்கொண்டார். அதன்படி இரு மாதங்களின் பின்னர் கையொப்பம் வைக்கும் நிபந்தனையிலிருந்து விடுதலையானார். அத்தோடு கந்தசாமிசிவமும் முழுமையாக விடுதலை பெற்றவராக புலிகள் பகுதிக்குள் வந்துசேர்ந்தார். அதன் பிற்பாடு தனக்கு நேர்ந்த விபரீத நிகழ்வுகளை புலிகளின் புலனாய்வாளருக்குத் தெரியப்படுத்தினார்.

ஐந்தாவதாக தமிழ் மக்கள் வெளி இடங்களுக்கு பயணங்களை சிங்கள தடைமுகாம்களுக்குள்ளால் மேற்கொள்வதுண்டு. இப்பயணங்களின்போது பொய்க் குற்றச்சாட்டை சுமத்தியும், அடையாள அட்டையை வாங்கியும் தமிழர்கள் தாமதப்படுத்தப்படும் சம்பவங்கள் அவ்வப்போது திட்டமிட்டு அவ்விடங்களில் நடைபெற்றுவருகின்றன.

சத்தியசீலன் புதுக்குடியிருப்பு நிரந்தர வதிவிடவாசியாக வாழ்ந்துவருபவர். அவர் 2000ஆம் ஆண்டின் ஆரம்பகாலப்பகுதியில் வவுனியா சென்றுவரும்போது ஒரு நாள் சிங்களத் தடைமுகாமில் கடமையாற்றும் பெரேரா அவரது அடையாள அட்டையை வாங்கி பயணத்தை தாமதப்படுத்தி வைத்திருந்தார். இத் தாமதத்தினால் சத்தியசீலனின் மனம் அச்சத்திற்குள்ளாகியது. அத்தகைய உளரீதியான சோர்வில் இருக்கும்போது பெரேரா சத்தியசீலனிடம் நீ புலிகளுக்கு வேலைசெய்து கொடுக்கும் ஆள் என் அவர்மீது குற்றப்படுத்தலைச் செய்தார்.

பெரேராவின் இக்குற்றப்படுத்தலால் சத்தியசீலனின் மனத்தின் சமநிலை சீர்குலைந்தது. அச் சூழ்நிலையை பெரேரா உணர்ந்தவராக சத்தியசீலனிடம் புதுக்குடியிருப்புப் பற்றிய தகவல்களை கறந்தெடுக்கக்கூடிய ஒரு நீண்ட நேர்காணலைச் செய்தும், அவரை தனக்கு சார்பாக உளவுப் பணி செய்துதரும்படியும் கேட்டுக்கொண்டார். சத்திய சீலன் தன் விருப்பத்தை தெரிவிப்பது போல் பாசாங்கு செய்தார். அதனால் அந்நெருக்கடியிலிருந்து தப்பிக் கொண்டதுடன். மன அழுத்தத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டார்.

ஆறாவது சம்பவமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அற்புதராசா புலிகளின் ஆதரவாளராக செயலாற்றியவர். சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் யாழ்ப்பாணம் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டபின் புலிகளுடன் எவ்வித தொடர்பும் அற்று வாழ்ந்து வந்தார். இதன் போது 97ஆம ஆண்டு இறுதிக் காலப்பகுதியில்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 10 . 09 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## அழிவின் பாதையில்...!

கடந்த ஐந்து மாதகாலமாக நாடாளுமன்றில் அறுதிப் பெரும்பாண்மையை நிரூபிக்க முடியாதிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஆதரவு வழங்குவதாக அறிவித்ததையடுத்து பெரும்பாண்மை பலம் கிட்டிவிட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் இந்த கைங்கரியம் மூலம் ஒரு இனவாதக் கூட்டு பாதுகாக்கப்பட்டுள்ளதாகவே கருத வேண்டும்.

இதற்காக அவர் பெற்றுக்கொள்வது பல மில்லியன் ரூபாய் பணப்பரிமாற்றத்தையும், ஏற்கெனவே ஆளும் கட்சியின் பிடிக்குள் சிக்கியிருக்கும் அவரின் ஊழல்கள் தொடர்பான விபரங்களும் சில அமைச்சுப் பதவிகளும் என தகவல்கள் வெளியாகிய வண்ணமிருக்கிறது.

இந்த நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரசினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குள் பலமானதொரு சக்தியாகவோ, அதிகாரங்களை பிரயோகிக்கக்கூடியபலம் பொருந்தியவர்களாகவோ இருக்கமுடியுமா என்பது கேள்விக்குறியே.

ஏனெனில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்து ஒரு சில நாட்களுக்குள்ளேயே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் பிரதான அங்கம் வகித்திருக்கும் இனவாதக்கட்சியான ஜே.வி.பி. "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பது அவசியம்" என அழுத்தம் திருத்தமாக தெரிவித்திருக்கிறது.

இதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கட்சியின் சொந்தக்காரர்கள் தாங்களே தான் எனக்கூறிவரும் ஜே.வி.பி யினர் தமது இனவாதக் கொள்கைகளையும், இலங்கையின் முக்கிய விவகாரமாக இருந்துவரும் சமாதான முயற்சிகளில் கடைப்பிடித்துவரும் எதிர்ப்போக்கான முறைகளையுமே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடைப்பிடித்தாகவேண்டும் என வலியுறுத்தி இருப்பதாகவே கருதவேண்டும்.

இதன் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீது கட்டுப்பாடுகளை விதிக்கமுனைவதோடு அவர்களை கைப்பாவையாக கையாளவே அவர்கள் விரும்புகின்றனர்.

ஆக. இலங்கை தொழிலாளர் காங்கிரசானது மலையக மக்களை மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழினத்தினையும் ஏமாற்றியுள்ளதாகவே கருத வேண்டும்.

ஏனெனில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்க எடுத்த முடிவானது எந்த வகையிலும் எந்த விடயத்திலும் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. மாறாக சந்தேகங்களையே தோற்றுவித்துள்ளதோடு பல குழப்பங்களையும் தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் என்றுமில்லாதவாறு தமிழ்கட்சிகள் தேசிய ரீதியில் ஐக்கியத்தை பேணி தமிழர்பலத்தை வெளிப்படுத்தும் ஒரு காலமாக இதனை பயன்படுத்திவருகிற போது, இதிலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாதைமாறி இருப்பதன் மூலம் அந்த கட்சி தனக்கான அபகீர்த்தியை தேடிக் கொண்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஆதரவு மூலம் பலம்பெற்று இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்குள் வேரூண்டியிருக்கும் ஜே.வி.பியானது கொஞ்சம் கொஞ்சமாக இலங்கை சுதந்திரக்கட்சியை கரைக்கத் தொடங்கியிருக்கிறது இனி மலையக மக்கள்மத்தியிலும் ஊடுருவுவதன் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரசையும் கரைக்கத் தொடங்கலாம். இதற்கான வாய்ப்புகள் அதிகமாகவேயுள்ளது. பதிலாக சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்லவோ, தமிழ்மக்கள் கோரிநிற்கும் இடைக்காலதன்னாட்சி அதிகாரசபையினை வழங்கவோ பயன்படுத்தப் போவதில்லை என்பது மட்டும் தெளிவு.

## தூரனின்பார்வை

# சமாதான முயற்சிகள் குறித்து சந்தேகம் தரும் நகர்வுகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ரத்னசிறிவிக்கிரமநாயக்கா இல்லையோ என்ற சந்தேகமும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இல்லையோ என்ற சந்தேகமும்,

இந்த நாட்டின் பிரச்சினைகள் குறித்து இறுதித்தீர்வெடுக்கும் அதிகார சக்தி சனாதிபதி இல்லையோ என்ற சந்தேகமும் வலுவாக எழத் தொடங்கியுள்ளது.

எதற்கெடுத்தாலும் அரசு சார்பில் அதற்கு பொறுப்பானவர்கள் பதில் சொல்லாது தாம்தான் அனைத்தும், என்ற அதிகார தோரணையில் அகங்காரமாக பதில் கொடுக்கும் முந்திரிக்கொட்டைத் தனத்தை ஜே.வி.பியினர் தமதாக்கிக்கொண்டிருப்பது மேற்குறித்த சந்தேகங்களுக்குகெல்லாம் காரணமாகும்.




தற்போதைய அரசில் ஜே.வி.பியினரின் நடவடிக்கைகளைத் தட்டிக்கேட்க எவருக்கும் அதிகாரம் இல்லையென்ற நிலையே தொடர்வதாக இருப்பதுபோல் தெரிகிறது. இல்லையெனில் அரசு தரப்பில் பொறுப்பும் தகுதியும் வாய்ந்தவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய பதில்களையெல்லாம் ஜே.வி.பியின் விமல் வீரவன்சவும் டில்வின் சில்வாவும் தாமாகவே முன்வந்து வழங்கிக் கொண்டிருப்பதானது மேற்குறிப்பிட்ட சந்தேகங்களை மேலும் உறுதியாக்குவதாகவே உள்ளது.

உண்மையில் இவர்கள் சனா[illegible]தி அல்லது பிரதமரின் அனுமதியுடன்தான் இவ்வாறாக [illegible]த்துக்களை வெளியிடுகிறார்களோ என்ற சந்தே[illegible]மும [illegible]எழவே செய்கிறது. ஏனென்றால் சர்ச்சைக்குரியதான இவர்களின் அறிவிப்புகள் அல்லது அறிக்கைகள் யாவும் அரசு தரப்பினரால் ஒருபோதுமே மறுக்கப்படுவதோ அல்லது [illegible]ராகரிக்கப்படுவதோ இல்லை என்பதாலேயாகும்.

அரசு என்றால் அதற்குரிய கட்டுக்கோப்பான கட்டுமானத்தைஅதன் சகல மட்டத்திலும் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அப்படியானதோர் ஒழுங்கமைப்புடன்கூடிய கட்டுமானத்தைக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

தேசிய முக்கியத்துவமிக்க பிரச்சினைகளில் கூட அரசில் அங்கம் வகிக்கும் பல்வேறுபட்ட கட்சிகளிடையே முரண்பாடுகளற்ற ஒருமித்த கருத்து நிலையுடன் கூடிய செயற்திட்ட அனுகுமுறை இல்லையென்பதே அதற்கான காரணமாகும்.

குறிப்பாக ஜே.வி.பியினரின் அத்துமீறிய செயற்பாடுகள் சனாதிபதி மற்றும் பிரதமர் போன்றோரின் அரசியல் அனுகுமுறைகளையும் ஏனைய நடவடிக்கைகளையும் கொச்சைப்படுத்துவதாகவும், பல தடவைகளில் உதாசீனம் செய்வது போலவும் இன்னும் சில விடயங்களில் அவர்களை எச்சரித்து அச்சுறுத்துவது போலவும்கூட அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஜே.வி.பியினர் அரசில் செலுத்திவரும் மேலாதிக்க நிலையானது, சனாதிபதியுட்பட அரசிலுள்ள எவராலுமே கட்டுப்படுத்த முடியாத நிலையை நோக்கி நகர்வதாகவே உள்ளது. பலவீனமான ஒரு அரசின் பலமான சக்தியாக தனிப்பட்ட முறையில் ஜே.வி.பி விளங்குவதே இதற்கு பிரதான காரணமாகும்.

சனாதிபதி தனது வெளிநாட்டுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் இனிப்போர் மூளும் அபாயமே இல்லையெனவும் சமாதானப்பேச்சு வார்த்தைகள் இறுதித்தீர்வொன்றை எட்டும்வரை தொடருமென்றும் உறுதியாக ஒரு அறிக்கையை விடுத்திருந்தார்.

அந்த அறிக்கை வெளியாகி ஒரு சில நாட்களுள் சமாதான முயற்சிகள் தொடர்பான சனாதிபதியின் கருத்துக்கள், கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றுடன் ஒத்துப்போகவேண்டுமென்ற அவசியம் தமக்கெதுவும் இல்லையென விமல் வீரவன்ச கருத்தொன்றை வெளியிட்டுமிருந்தார்.

அப்படியாயின் சமாதானம் தொடர்பான சனாதிபதியின் நிலைப்பாடும் செயற்பாடும் வேறு, அரசின் நிலைப்பாடு வேறு என்றெல்லவா ஆகின்றது!

ஏற்கனவே சமாதான முயற்சிகளில் அரசுக்கும் சனாதிபதிக்கும் இடையிலான முரண்நிலைதான் முன்னைய அரசின் ஆட்சிக்காலத்தில் அமைதி முன்னெடுப்புகளுக்கு இடையூறாகவும் குழப்பத்தை உண்டு பண்ணுவதாகவும் இருந்தது. ஆட்சி மாறி சனாதிபதியின் கட்சியாளரே ஆட்சியை அமைந்த பின்னரும் அதேநிலை தொடர்வதுதான் வேடிக்கையாக உள்ளது.

இங்கே ஒரு முக்கிய விடயத்தை கவனத்தில் கொள்ளல் அவசியமாக உள்ளது. அப்போதும் சமாதான முயற்சிகளை நோர்வேயின் அனுசரணையை விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபை யோசணைகளை நிராகரித்த ஜே.வி.பி இப்போதும் அதே நிலைப்பாட்டில் இருக்கும் தன்மையுடன் அரசில் இணைந்து இயங்கிவருகிறது. இதுவே அரசின் சமாதான நகர்வுகளுக்கு இடையூறாகவும் இருக்கிறது.

இது இவ்வாறிருக்க விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபையின் குறித்த யோசணைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்பது சாத்தியமற்றவிடயமாகும். அதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விடுதலைப்புலிகளுடன் ஒரு போதுமே பேச்சுக்களை ஆரம்பிக்கப்போவது கிடையாது. இந்த வகையில் பார்த்தால் சமாதானப்பேச்சுக்கள் இனி ஒரு போதும் அரசினால் ஆரம்பிக்கப்படமாட்டாது என ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா முழங்கியுள்ளார்.

இதுதான் அரசின் சமாதானம் குறித்த எதிர்கால முயற்சிகள் தொடர்பான நிலைப்பாடா?

அல்லது ஜே.வி.பியின் செயலாளரின் தனிப்பட்ட புலம்பலா?

இதனைத்தெளிவுபடுத்தவேண்டியது சனாதிபதி மட்டுமே.

இதேவேளை சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவோ அல்லது இடைக்காலத்தன்னாட்சி நிர்வாகம் தொடர்பாகவோ அமைச்சர்கள் எவரும் கருத்துக்கள் எதனையும் வெளியிடக்கூடாது என சனாதிபதி அறிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த அறிவிப்பின்படி பார்த்தால் ஜே.வி.பி. அமைச்சர்களும் மேற்படி அறிக்கைக்கு கட்டுப்பட்டே நடக்கவேண்டும். ஆனால் அவர்கள் அதற்கு கட்டுப்பட்டு நடப்பார்களா? என்பதே இப்போதைய கேள்வி.

எப்படியாயினும் தனது அரசாங்கத்தைச்சேர்ந்த அமைச்சர்களின் தான் தோன்றித்தனமான கருத்து வெளிப்பாடுகள் சமாதான முயற்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பதையாவது சந்திரிகா உணர்ந்து கொண்டிருக்கிறார் என்பதையே அவரது இந்த அறிவிப்பு தெளிவுபடுத்தியுள்ளது எனலாம்.

எவ்வாறாயினும் சமாதானப்பேச்சுக்களை மீள ஆரம்பித்தே ஆகவேண்டும் என்ற தவிர்க்கமுடியாத சர்வதேச அழுத்தத்தை நிராகரிக்கமுடியாத நிலையில் சந்திரிகாவினால் இந்த வாய்ப்பூட்டு அமைச்சர்களுக்கு போடப்பட்டுள்ளதாக கருதமுடியும் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

ஆனால், இந்த வாய்ப்பூட்டை பேரினவாதிகளும் சமாதான விரோதசக்திகளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது சர்வநிச்சயம்.

அவர்கள் யுத்தமா? சமாதானமா? என்ற ஜே.ஆரின் அறைகூவலுக்கும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற சந்திரிகாவின் இராணுவ அனுகுமுறைக்கும் ஆதரவாக கைதட்டியவர்களே...

அவர்களால் நிரந்தர சமாதானத்தையோ, இனப்பிரச்சினைக்கு நியாயமான முறையில் அரசியல் தீர்வு காணும் முயற்சிகளையோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது என்பதும் இன்றைய அரசியல் யதார்த்தமேயாகும்.

சரி,இனிவருங்காலங்களில்... இல்லையில்லை வாரங்களில் சமாதானமுயற்சிகளை சந்திரிகா எவ்வாறு முன்னெடுக்கப்போகிறார் என்பதையும் அதனை ஜேவி.பியினரும் ஏனைய பேரினவாத அரசியல் சிந்தனையாளர்களும் எவ்வாறு மௌனமாக பார்த்துக்கொண்டிருக்கப்போகிறார்கள் என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

# விருட்சங்களின் நிமிர்வுகளும் அவற்றின் வேர்களும்

## சீனா,அமெரிக்கா ஒரு பார்வை

சு.ஞாலவன்



மிகப்பழைய மொழி, கலை, கலாசார வரலாற்றுப்பாரம் பரியத்தினைக் கொண்டிருப்பது மாத்திரமன்றி, சுயத்தினை விட்டுக்கொடாது சொந்த முயற்சியினாலேயே, பல்வித நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தவாறே முன்னேறியவர்கள், என்றோ கட்டப்பட்ட கட்டடத்தினால் மட்டுமன்றி, கனவுகளை மெய்ப்பிக்கும் தமது கடுமையான உழைப்பின் மூலமும் உலக அதிசயத்தினை நிகழ்த்திக் கொண்டிருப்பவர்கள், அளவில் சிறுத்தும், ஆற்றலில் பெருத்தும் தங்கள் தேசத்துக்கான பெருமைகளை பதக்கங்களாகவும் ஒலிம்பிக்கில் ஈட்டிக்கொண்டிருக்கும் சீனர்களைப் பற்றித்தான் இங்கு பேசப்படுகிறது. தங்கள் நாட்டினை அந்நிய ஆதிக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக கி.மு 3ஆம் நூற்றாண்டில் 2400 கி.மீ நீளத்திற்கு, எதிரிப்படைகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, கட்டிக்கொண்ட பெருஞ்சுவரைப் பற்றிய் பெருமை பேசிக்கொண்டு, நிகழ்காலத்தில் வாழாதிருப்பவர்கள் அல்லர் அவர்கள். இவ்வாறாக தனக்கென்று ஒரு பாதை வகுத்துத் தனித்துவத்தோடு பயணிக்கும் சீனா பற்றிய சில செய்திகளை நாமும் அறிந்துகொண்டு பயனடைவோம்.

'ஆமாம், அபிவிருத்தி அடைந்த நாடுகளைவிட சீனா அப்படி என்னதான் சாதித்து விட்டது', என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றலாம். பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது வெறுமனே 'made in japan' ஐயே எல்லாவற்றிற்கும் மேலாக எதிர்பார்க்கும் நாம், நம்முடைய பாவனையில் உள்ள பல தயாரிப்புக்கள் குறைந்த விலையில் கிடைக்கும் சீனத்தயாரிப்புக்கள் என்பதையும் அறிந்திருக்கிறோம். பாரிய அளவில் பொருட்களைத் தயாரிக்கக் கூடிய வல்லமை படைத்த பல நாடுகள் சர்வதேசச்சந்தை நிலைமைகளைச் சாதகமாக அணுகிக்கொள்ள முடியாத காரணத்தினாலேயே, பொருளாதார பின்னடைவுகளைச் சந்திக்கின்றன. பொதுவான நிலைமை இவ்வாறிருக்க சீனாவோ 9% இற்கும் குறையாத ஸ்திரமான பொருளாதார வளர்ச்சி விகிதத்துடன் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேகமாகவே வளர்ந்து வருகிறது.சுய ஒளிப்படக்கருவிகளாகிய Camera க்களில் 50% ஆனவை சீனத் தயாரிப்புக்களாகும். இதேபோல் குளிரூட்டி எனப்படும் Air-Condition மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் 30% தையும் சலவை இயந்திரம் எனப்படும் washing-mashine களில் 25% ஐயும் சீனாவே தயாரித்து உலகுக்கு வழங்குகின்றது. இவ்வாறானதொரு பாரிய உற்பத்திப் பொருளாதாரத்துக்கான மூலவளங்கள் அனைத்தும் சீனாவிலேயே பெறப்படுபவை அல்ல! உருக்கிரும்பையும், செம்பையும் ஆகக்கூடிய அளவில் இறக்குமதி செய்யும் நாடாகவும் சீனா இருந்து வருகிறது. இது தவிர மசகு- எண்ணெய்யினை இறக்குமதி செய்வதில் இரண்டாவது இடத்திலும் உள்ளது. 2003ஆம் ஆண்டில் சீனாவின் மொத்த இறக்குமதி 41% இனால் அதிகரித்திருக்கின்றது. உள்நாட்டு வளங்களையும், மாற்றுவழி இல்லாதபோது இறக்குமதி செய்தும், தனது பொருளாதார வளர்ச்சி வீதத்தினை 1978ஆம் ஆண்டில் இருந்து 9%திலேயே நிலையாக வைத்திருக்கின்றது, என்று பாராட்டுப் பத்திரம் வழங்குகின்றது ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank).

இன்று சீனாவின் அரசியல், இராணுவ, பொருளாதாரப் போக்குகளிற்கு, விரும்பாவிட்டாலும் உற்பத்திமூலம் தன்னிறைவு அடைந்துகொள்ளும் அதேவேளை, போட்டி உற்பத்தியாளர்களைச் சர்வதேச்சந்தையில் எதிர்கொள்ளும் வல்லமையைக்கொண்டதாகவும் விளங்குகிறது. கூடவே குறிப்பிட்ட துறைகளில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கான சந்தை வாய்ப்புக்களை உள்நாட்டிலே மட்டுப்படுத்திய அளவில் அனுமதித்ததன் மூலம், தான் முன்னேறுவதுடன் தன்னுடைய பெரிய சந்தைப்புலத்தினூடாக மற்றைய நாடுகளைத் தன்னில் தங்கி வாழும் நிலைக்கும் உட்படுத்துகின்றது. இதற்காக தனது கம்யூனிச சித்தாந்தத்தில் பல விட்டுக்கொடுப்புக்களையும் செய்து, சமரசப்போக்கிற்கு இது தன்னை நகர்த்தியுள்ளது.

இன்று உலகம் பூராவும் விற்பனை செய்யப்பட்டுவரும் உலகநாடுகள் யாவும் தலையாட்ட வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில்! இதற்குக்காரணம் சீனாவின் அறிவியல் பார்வையும், கடின உழைப்பும், தேசியத்தை நேசிக்கும் விடாமுயற்சியும்தான்! அண்மையில் கூட 'உலக அதிசயங்களில் ஒன்றான 2400கி.மீ நீளமுள்ள (2400kM) சீனப் பெருஞ்சுவரை, விண்வெளியில் இருந்தவாறே கண்டு கொள்ளக்கூடிய பிரமாண்டம் மிக்கது' என்று மிகைப்படுத்தி, ஆரம்பப் பாடசாலை நூல்களிலிருந்த வாக்கியங்கள் அகற்றப் பட்டுள்ளன. உண்மைக்குப் புறம்பான வெற்றுப் பெருமைகளால் திருப்தி அடையாத இவர்களின் சிந்தனைப்போக்கே, இத்தகைய வளர்ச்சிக்குக் காரணமென்றால் அது மிகையாகாது.



சீனாவிலிருந்து இப்போது வேறொரு நாட்டிற்குப் போவோம். சகல தளங்களிலும் சீனா முன்னேறி வருவதைக் கண்டு சகிக்க முடியாமல் 'மூஞ்சியை நீட்டிக்கொண்டு முறைத்துப் பார்க்கும்' அந்த நாடு உலகெங்கும் மூக்கை நுழைத்து அடிக்கடி 'வாங்கிக் கட்டினாலும்' மீண்டும் மீண்டும் சுதாகரித்துக்கொண்டெழுந்து விடக்கூடிய வல்லமை படைத்தது. ஆமாம் நீங்கள் நினைப்பது போல அது அமெரிக்காதான்! நியூயோர்க்கிலுள்ள தனது இரட்டைக் கட்டடங்கள் தாக்கியழிக்கப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் அடிப்படை வாதிகள் மீதான ஒரு திறந்த போரை உலகளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தியது. இந்தப் போர் பிரகடனத்தை அடுத்து கண்மூடித்தனமாக அமெரிக்கா எதிர்த் தாக்குதல்களை நடாத்தமுடியாத பலவீனமான நிலையில் இருப்பது உள்நாட்டில் தான் என்று முஸ்லிம் தீவிரவாதிகள் உணர்ந்தனர், முதலாவது வெற்றியைத் தொடர்ந்து தங்கள் முன்னாயத்த நடவடிக்கைகளை அமெரிக்காவிற்குள்ளேயே முடுக்கி விட்டனர். முஸ்லிம் நாடுகளிலென்றால் தங்கள் கடைசிக் கண்டுபிடிப்பினையும் பரீட்சித்து முழு அளவிலான ராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் அமெரிக்கா, உள்நாட்டைப் பொறுத்தவரையில் மக்கள் இழப்பு உட்பட பல்வித காரணங்களுக்காக, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இயங்கிக்கொள்ள முடிந்தது.

இப்படியானதொரு பலவீனமான நிலையில் தங்கள் பலத்தை தேடினார்கள் அமெரிக்கர்கள். உள்நாட்டின் சகல இடங்களிலும் நடமாடும் சந்தேகத்துக்கிடமானவர்களைப் பற்றி அறிந்துகொள்வது என்பது நடைமுறைச்சாத்தியமற்றது என்றதொரு நிலையை மாற்றுவதற்கான முதற்கட்ட நடவடிக்கையாய், அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை (US Department of Homeland Security) 10000 (பத்தாயிரம்) பேரைக்கொண்ட 'தகவல் சேகரிப்பு அணி' ஒன்றை உருவாக்கியிருக்கிறது. தங்களது இயல்பான வாழ்வை வாழ்ந்துவரும் இவர்கள் சுயவிருப்பின் பேரில் இலவசமாகவே பணியாற்றும் பாரஊர்திச்சாரதிகள் ஆவர் 'Highway-Watch' என அழைக்கப்படும் இவ்அணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான Amanda Ripley பின்வருமாறு தெரிவிக்கிறார்! ''தேசத்தின் கண்களாகவும் காதுகளாகவும் செயற்படும் இவர்கள் தங்களின் வழமையான தொழில்களையே செய்துவருகின்றனர். தம்முடைய அன்றாட கடமை வேளைகளிலே சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்களை எதிர்கொள்ளும்போது 'அவதானி! கணிப்பிடு! தகவல் கொடு!' என்ற அடிப்படையில் நம்முடைய குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்வார்கள். சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்களை அவதானித்தல் குறித்த சில பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் இவர்களின் ஒரேயொரு ஆயுதம், நம்முடன் தொடர்புகொள்வதற்கான அவசரத் தொலைபேசி இலக்கம் தான்! மற்றையபடி இவர்களாக துணிந்து எந்தவிதமான நடவடிக்கைகளிலும் இறங்கக்கூடாது. கற்பனை வளம்கூடிய சிலரின் தொலைபேசி அழைப்புக்கள் நமக்கு வீண் அலைச்சலை ஏற்படுத்துவதாக இருந்தாலும் கடந்த காலத்தில் நமக்குக் கிடைத்த 200 அழைப்புக்களில் 10 பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடையனவாக பயன் மிகுந்து காணப்பட்டன. இவர்களின் அடுத்தகட்ட திட்டமாக தபாற்காரர்கள், குழாய் பொருத்துனர்கள், பாரம் ஏற்றுபவர்கள், சுங்கவரி அலுவலகர்கள் முதலியோரை கொண்ட, 400000 பேருக்குக் குறையாத இன்னுமொரு கண்காணிப்பு அணி!



பார்த்தீர்களா இந்த இரண்டு தேசங்களையும்? பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் பாதுகாப்பும் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் பொருளாதாரமும் என தங்கள் வளர்ச்சிக்காக ஒவ்வொரு தனி மனிதனும் தேசத்தின் பலமாகக் கருமம் ஆற்றுவதை!

வானலை காவி வரும் பாடலொன்று காதருகே வந்து ஏதோ சொல்லுகிறது கேளுங்கள் அந்த இனிமையான பாடலின் வரிகளை!

"…..எனது வீடு,<br>
எனது வாழ்வு<br>
என்று வாழ்வது<br>
வாழ்க்கையா!<br>
இருக்கும் நாலு சுவருக்குள்ளே<br>
வாழ நீ ஒரு கைதியா!<br>
தேசம் வேறல்ல, தாயும்<br>
வேறல்ல ஒன்று தான்!<br>
தாயைக்காப்பதும், நாட்டைக்<br>
காப்பதும் ஒன்று தான்!<br>
கடுகு போல் உன்மனம் இருக்கக்<br>
கூடாது;<br>
கடலைப் போல் விரிந்ததாய்<br>
இருக்கட்டும்.

….படிக்கத்தான் பாடலா, நினைச்சுப் பார்த்தோமா? படிச்சதை நினைச்சு நாம் நடக்கத்தான்!…."

‘உள்ளிருந்தே கொல்லும்பகை’ என்னும் பொருள் பற்றி அரசியலில் அதிகம் பேசப்படுவதுண்டு. ஒரு தலைவனை வீழ்த்தி விடக்கூடிய அதிகபட்ச ஆபத்து இதுவெனவே பெரிதும் விதந்துரைக் கப்படுகிறது. சிறிலங்காவின் அரசின், அரசாங்கத்தின் தலைவரான சனாதிபதிக்கும், அரசாங்கத்தின் செயற்படு அமைப்பான அமைச்சரவை யின் பெயரளவு அல்லது குறியீட்டுத் தலைவரான பிரதமருக்குமிடையேயான ‘உறவு’ மேற்சொன்ன சித்தாந்தத்திற்கு நல்லதொரு உதாரணமாகக் காட்டப்படக் கூடியதாகத் திகழ்கிறது!

வெளியே சிரித்தபடி ஆளையாள் வீழ்த்திவிட வியூகம் விடுத்துக்கொண்டி ருக்கும் இரு தலைவர்களின் அசைவியக்கமாக இன்றைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கதை விளங்கு கிறது. தத்தமது எதிர்கால அரசியலை இலக்குவைத்துக் காய் நகர்த்தும் இவர்களின் கறுவல், முறுகல்கள்

வெஸ்ற் மினிஸ்ரர் முறையிலான நாடாளு மன்றத்துக்குப் பதில் சொல்லும் பிரதமரைத் தலைவராகக் கொண்ட ஆட்சி முறையைத் தாபிப்ப தனூடாக தனது அரசியல் வாழ்வை நீட்டிக்கொள்ள வேண்டுமென்பது சந்திரிகா வின் இலக்கு. இந்த இலக்கைத் தான் அடைய வேண்டுமானால், தன்னை எதிர்கொள்ளக்கூடிய தலைவர்கள் எவரும் கட்சியினுள் இருப்பது அவருக்கு எப்போதும் அச்சுறுத்தலாகவே இருக்குமென்பதில் ஐய மில்லை. எனவேதான் தென்னிலங்கையிலும் மகாநாயக்க தேரர்களிடமும் செல்வாக்குள்ள நீண்ட அரசியற் பாரம்பரியமுள்ள ஊழல் புகார்கள் எதிலும் சிக்கிக்கொள்ளாத மஹிந்த ராஜபக்ஷ எப்போதுமே சந்திரிகாவுக்கு வில்லனாகத் தோற்றுகிறார்.

மறுபக்கமாக, மஹிந்த ராஜபக்ஷவோ 25 வருடகால சலனமற்ற

எதிர்ப்புத் தெரிவிப்பவர் களில் பிரதானமானவராக அவர் விளங்குகிறார். ஜே.வி.பியுடன் அமைக்கும் கூட்டணி ‘கலர்’ காட்டுவதாக மட்டுமே அமைவதோடு அடிமடியில் கைவைத்துவிடக் கூடியதென்பதையும், தமது பாரம்பரிய வாக்கு வங்கி களான கிராமங்கள், தொழிற் சங்கங்கள் என்பவற்றை ஜே.வி.பி வேகமாகக் கைப் பற்றிக்கொண்டுவருகிறது என்பதையும் மஹிந்தராஜ பக்ஷ உணர்ந்திருக்கிறார்.

இந்த போக்குக்கு ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைத்துள்ள ஐ.ம.சுதந்திர முன்னணி செங்கம்பளம் விரித்திருக் கிறது. என்பது மஹிந்தவின் நோக்கு

நாளிலேயே ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி விழாவை நடாத்தி முடித்துவிட்டார். ஒரே ஒரு மாற்றம் அடிக்கல்லை நட்டவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்பதுதான்.

இதன் பின்னர்தான் திருவிழாவே தொடங்கியது. அடிக்கல்லை

பிரதமராகி அரசியல் வாழ்வைத் தொடர்வது என்ற அவசர அரசியல் இலக்கு ஒருபுறம்.

தனது சொந்தக் கட்சியின் கட்டுறுதியைக் கட்டிக்காத்து அதனை மீட்டெடுத்துத் தான்



# கூரையேறாதவன் வானமேறும் கதை

இப்போது வெளி, வெளியாகத் தெரியத் தொடங்கியும் விட்டன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை பண்டாரநாயக் காக்களின் கூடாரமாகவே கருதும் இருவருக்கும், அக்கட்சியில் நீண்டகாலமா கவே விசுவாசத்துடன் உழைத்த தலைவர்களுக்கு மிடையேயான பனிப்போரின் கதையே அது. சந்திரிகா அம்மை யாரோ



தனது தனிப்பட்ட அரசியல் எதிர்காலத்தை, அரசியல் வாழ்வை மேலும் நீட்டிக் கொள்வதிலும் சுதந்திர கட்சியில் மக்கள் முன் ஈர்ப்புத் தன்மையுள்ள தலைவர் தான் மட்டுமே என்று நிறுவுவதிலும் முனைப்பாக உள்ளார். நிறைவேற்றதிகார சனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து

அரசியல் வாழ்வை சிறி லங்கா சுதந்திரக்கட்சியில் பூர்த்திசெய்துவிட்டு தலைமைப் பதவியைக் குறிவைத்து ‘ஓடும் மீனோடி உறுமீன் வருமளவும்’ காத்திருக்கிறார். சனாதி பதியை வாயாரப் புகழ்ந்து கொண்டே அவரது நகர்வு களை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நொந்து

நூலாகிப் போயிருந்த நேரத்திலும் அதனைவிட்டு ஓடாது பற்றுறுதியோடு கட்சியைக் கட்டிக்காத்தவர் களில் மஹிந்த ராஜபக்ஷவும் முக்கியமானவர். இதனால் அவரது நகர்வுகள் தனது கட்சி யின் நலனையும் முன்நிறுத் தியதாகவே அமையும். இதனாலேயே ஜே.வி.பியு டனான கூட்டணிக்கு

இதுகாரணமாகவே ஜே.வி.பி யுடனான அவரது உறவு அவ்வளவுக்குச் செம்மை யானதாக இல்லை. சந்திரிகா ஜே.வி.பியுடனான உறவுக்கு ‘வெட்டுக்காட்ட’ முடிவெடுத் தால் அதற்குப் பலமான ஆதரவாளராகவும் மஹிந் தவே விளங்குவார்.

இப்படியாக விரியும் இந்த முறுகல் மிகவும் அப்பட்டமாக வெளிப்பட்டு விட்ட சம்பவம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலை மையகத்துக்கான அடிக்கல் நடப்பட்ட விவகாரத்தில் நி[illegible]ழ்ந்தேறியது.. 100 மல்லியன் ரூபா செலவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கான தலைமையகம் கட்டப் படவுள்ளது. இதற்கான அடிக் கல் நாட்டும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது. ஆனால் அப்போது சந்திரிகா

**பு.சத்தியமூர்த்தி**

அம்மையார் லண்டனில் இருந்தார். லண்டனிலிருந்து அடிக்கல் நாட்டும் விழாவுக்கு அவர் வந்துவிடுவார் என்ற எதிர்பார்ப்பில் அதற்கான நாள் குறிக்கப்பட்டுவிட்டது. ஆனால் லண்டனில் இருந்து கொழும்புக்கு வருவதற்கு பதிலாக பரிசிற்கு பறந்து விட்டார். சந்திரிகா; தான் வரும் வரைக்கும் நிகழ்வைத் தாமதிக்குமாறு அறிவித்தல் மட்டும் அவரிடமிருந்து வந்திருந்தது.

ஆனால் இந்த அறி வித்தலை அல்லது உத்தர வைப் புறந்தள்ளிய சிறி லங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, குறித்த

நட்டபின் அதுகுறித்த பட்ட யத்தையும் திரைநீக்கம் செய்து வைத்தார் மஹிந்த. ஆனால், அந்தப் பித்தளைப் பட்டயத்திலே அவரின் பெயர் இருக்கவில்லை. அவருக்கெதிரான மறைக் கரங்களின் இருட்டடிப்பு எந்தளவுக்கு இருக்கிறது என்பதை மஹிந்த ராஜபக்ஷ அட்[illegible]ாது பட்டறிந்து கெ[illegible]டார்.

ஆனால் அந்தப் பட்டயத்துக்கும் அடிக்கல்லுக் கும் ஆயுள் அவ்வளவு கெட்டியானதாக இல்லைப் போலிருக்கிறது. ஏனெனில் நடப்பட்டும் திறந்துவைக் கப்பட்டும் மிக மிகச் சில நாட்களிலேயே அவை காணாமற்போய்விட்ட ‘அற்புதம்’ நிகழ்ந்துதான் விட்டது. இதனூடாக மேற் சொன்ன ‘மறைகரங்கள்’ சில செய்திகளைப் பெற் றிருக்கிறார்கள். “உங் களுடைய திருவிளை யாடல்கள் உங்கள் வழி யிலேயே எதிர்கொள்ளப் படும்” என்பதே அந்தச் செய்தி.

இப்போது இரு தரப்புமே வரிந்து கட்டிக் கொண்டுவிட்டன. பதிலுக் குப் பதிலாக முகங்களிலே கரிபூசியாயிற்று-அப்படியா யின் எதிர்காலம் என்னவாக நகரப்போகிறது. தத்தமது இருப்புக்கான போட்டி யாளர்களை எதிர்கொள் வதற்கு இனி என்ன நடக்கப் போகிறது?

அரசியல் யாப்புத் திருத்தம், நாடாளுமன்ற ஆட்சிமுறை, அதன்படி

தலைவராகுவது என்ற நீண்ட கால இலக்கு மறுபுறம்.

முதல் இலக்கு எதைத் தின்றால் பித்தம் தெளியும்? என்ற நிலையில் இருக்கிறது. அதற்கு எதைப் பறிகொடுத்தாவது தான் எதிர்பார்ப்பதை அடைய வேண்டும். இரண்டாவதோ மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருவிப் பாயும் என்று நம்புகிறது. காத்திருக்கிறது.

இப்படியாகப் போகிறது சிறிலங்காவின் தற்போதைய ஆளும் கூட்டணியின் பிரதான கட்சியின் கதை. அதனைப் ‘பிரதான கட்சி என்று ஏற்றுக்கொள்ள மற்றைய கட்சி, தயாராக இல்லை என்பது இதன் சுவாரஸ்யமானதொரு கிளைக்கதை.

இதிலிருந்து தெரிவதெல்லாம் என்ன? தங்கள் கட்சியின் உட்பூசலுக்கே இன்னமும் தீர்வுகாணாத, அல்லது தீர்வுகாண்பதற்குப் பதிலாகப் பூசலை உக்கிரமாக்குகின்ற இந்தத் ‘தலைவர்கள்’ நாட்டின் பிரச்சினையை எவ்வாறு அணுகப் போகிறார்கள்? தீர்க்கப்போகிறார்கள்?

இலங்கைத்தீவின் இன்றைய சோகம் என்னவென்றால், ‘கூரையேறிக்கோழி பிடிக்காதவன் வானமேறி வைகுண்டம் போவான்’ என எதிர்பார்த்துக் காத்திருப்பதுதான்.

நாற்றிசை நடப்பு

**சமகால** சர்வதேச அரசியலில் இன விடுதலைப் போராட்டங்களுக்குள் பிற தேசங்களின் நலன்களுடன் அரசியல் ஊடுருவி அவற்றின் தனித்துவத்தை தகர்த்து விடுகின்றன. தேசிய இன விடுதலைக்கு கொடுக்கப்பட்ட சோசலிச சார்புடைய சித்தாந்த விவரணம் எல்லாமே பொய்த்துப்போனதொன்றாக மாறி வருவதும் தேசிய இனங்கள் உலக ஆதிக்க அரசுகளின் தேசிய இனங்களுக்கான விலைபோகும் நிலை காணப்படுகின்றது. இது தேசிய இன விடுதலைக்கான தனித்துவத்தை அழிப்பதுடன் தேசிய இனங்கள் விடுதலைப் போராட்டங்களை மேற்கொள்ள முடியாத அளவுக்கு ஆதிக்க அரசியல் சக்திகளின் அடக்கு முறை விரிவடைந்து செல்கின்றது. அடக்கு முறைக்குள் உட்பட்ட சிறுபான்மை தேசியஇனங்களும் சரி ஏனைய தேசிய இனப் பிரிவுக்குட்பட்ட இனங்களும் சரி தமது அடையாளத்தை பாதுகாக்க முடியாத நிலை அரசியல் பொருளாதார, இராணுவ பரிமாணத்தில் மட்டுமல்ல ஆயுதப் போராட்ட அணுகு முறைக்குட்பட்ட தேசிய விடுதலைப் போராட்டத்திலும் காணமுடிகின்றது.

அரசியலாக தெரிகின்றது. இதனை விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பு எனக் கூறுவதைவிட ஆதிக்க அரசியல் சக்திகளுக்கும் அவற்றின் துரோகத்தனமான அரசியலுக்கும் துணைபோகும் அரசியலெனக் கூறலாம்.

விடுதலைப் போராட்ட அமைப்போ அல்லது அடக்குமுறைக்குட்பட்ட தேசிய இனமோ பிற இனத்தின் உரிமைகளையும், விழுமியங்களையும் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பாதிப்படைவதோ அல்லது விரோதமானதோ எதுவாயினும் அவை தேசிய இனங்கள் என்பதில் நம்பிக்கை கொள்வதோடு அந்த இனத்தின் அடிப்படைக் கௌரவத்தை மதித்தே ஒரு தேசிய இனம் போராட்டத்தை நடாத்தவேண்டும். அதுவே உண்மையான தேசிய விடுதலையாகவும் விடுதலைப் போராட்டமாகவும் அமையும். இவ்வாறான சூழலை ஆதிக்க சக்திகள் கையாள முனைவதன்மூலம் இரண்டு நன்மைகளை நேரடியாக அடைந்து விடுகின்றன.

ஒன்று அயல் தேசிய இனத்தின் ஆதரவையோ பங்களிப்பையோ போராட்டத்திற்கான உந்துதலையோ இல்லாமல் செய்வது.

இரண்டாவது நீண்ட காலத்தின் தேசிய விடுதலையை நோக்கிய இனத்தின் போராட்டத்தை தகர்ப்பதுடன் பிற தேசிய இனங்களின் விடுதலைக்கான முன்னாயத்தத்தையும் தகர்ப்பதாகும்.

இதன் வரிசையில் மிக அதிகமாக பயன்படுத்தப்படும் தேசிய இனமாக செச்சினியர்களும் அவர்களது விடுதலைப் போராட்டமும் காணப்படுகின்றது. விடுதலைக்கு முன்பு அவ்வினத்தின் மீது பீடித்துள்ள ஆதிக்க சக்திகளின் ஊடுருவல் தகர்த்து அழிக்கப்படவேண்டும். இத்தகைய வேலையில் செச்சினிய போராட்ட அமைப்பு ஈடுபடுமாயின் செச்சினியப் போராட்டம் எதிர்காலத்திலாவது வெற்றிபெற முடியும்.

இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு கிடைத்த காலம் தாழ்த்திய வெற்றியாக இருந்தாலும் முழுமையான வெற்றியல்ல. மாறாக இந்தியாவின் நட்பை தக்கவைக்க கிளர்ச்சிவாதிகள் பின்பற்றிய அணுகுமுறையில் ஒன்றாகவுள்ளது. இருந்த போதும் இந்தியர்கள் தமது பிரஜைகளை மீட்டுவிட்டனர் என்ற அரசியல் திருப்தியளிக்கும் நிகழ்வாக இந்திய வெளியுறவுத்துறைக்கும் கிடைத்துள்ளது.

கூட்டணியிலோ அல்லது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பிரிவிலோ நேபாளியர்கள் அங்கம் வகிக்கவில்லை. அவர்கள் தொழிலாளர்களாக மட்டுமே அங்கு சென்றிருந்தனர். அவ்வாறே நேபாளிய அரசாங்கமும் அதற்கான ஏற்பாடுகளையோ இராஜதந்திர நடவடிக்கை எதுவுமே தமது பிரஜைகளை மீட்டெடுப்பதற்காக பெரியளவில் செய்யவில்லை. இது ஏற்கனவே மாவோஸ்டுக்கள் தொடர்பாக நேபாளிய மக்கள் கொண்டிருக்கும் அரசாங்கம் மீதான அதிருப்தியை மேலும் அதிகரித்துள்ளது. நேபாளிய மக்களின் கோரிக்கைக்கும் போராட்டத்துக்கும் பின்னால் நியாயத்தன்மை காணப்படுகின்றது. அரசாங்கம் மன்னனது ஆதிக்கத்திலிருப்பதால் எந்த நடவடிக்கையையும் மன்னனே மேற்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இதனால் போராட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புக் காணப்படுகின்றது.

கின்றது. காரணம் ஹமாஸ் அமைப்பு வளர்வதோடு பலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்புக்கு முதலீடாக மாற்று அமைப்பாக வளர்ந்து வருகிறதென்பது ஹமாஸ் அமைப்புக்குரியதாக உள்ளது.

எதுவாயினும் பலஸ்தீன விடுதலைப் போராட்டமும் அதன் அமைப்பும் முற்றாக செயலிழந்து போகின்றது. ஒரு விடுதலை அமைப்பும் அதன் போராட்டமும் நிலையான காரணியாக அமைய முடியாது என்பதைவிட, அதன் சூழலுக்குள் இரண்டுமே தனது தனித்துவங்களை பாதுகாத்துக்கொண்டு செயற்படவேண்டும். என்பதே முதன்மையான செய்தியாகும். மேற்கின் தந்திர அரசியலுக்குள் மூழ்கிப்போனதால் PLO தனித்துவத்தை இழந்துள்ளதுடன் பலஸ்தீன மக்கள் அழிக்கப்பட்டு வருகின்றனர். இதனை ஹமாஸ் உடனடியாக மீட்டுவிடுமெனக் கூறிவிட முடியாது. ஏனெனில் தற்கொலைத் தாக்குதல் போராட்டத்தை தக்கவைக்குமே அன்றி போராட்டத்தை முழுமையாக நகர்த்தும் ஆயுதமல்ல தனியான, பலமான உறுதிமிக்க ஆயுதம் தற்கொலைத் தாக்குதல் என்பது சரியானது. ஆனால், அது முழு மக்களையுமே அரசியல் இராணுவமயப்படுத்தும் ஒரு போராட்ட அணுகுமுறையல்ல. இதுவே PLO முற்றாக வலுவிழக்க முடியாமைக்கும் ஹமாஸ் பலம் பெறமுடியாமைக்கும் காரணமாகும். யூதர்களின் பின்பலம் பலஸ்தீனர்களுக்குக் கிடைக்கும் வரை இப்போராட்டம் தளம்பலாகவே காணப்படும்.







# தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்குள் ஊடுருவும் அரசியல்

ஐங்கரன்

### பணயக்கைதிகளும் விடுதலையும்.

ரஷ்சிய அரசியலையே ஒரு குலுக்குக் குலுக்கிய நிகழ்வாக பாடசாலைச் சிறுவர்கள், பெற்றோர்கள் அடங்கலாக 394 பேரை காவு கொண்ட விவகாரம் அமைந்துள்ளது. மிக இளம் சிறார்களையும் அவர்களின் பெற்றோர்களையும் பணயக் கைதிகளாக பிடித்து செச்சினிய விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க முடியுமென செச்சினியப் போராளிகள் துணிந்துள்ளனர்.

அதுமட்டுமல்ல சிறுவர்கள் கைதிகளாக பிடிக்கப்பட்டபோது அவர்கள் கையாளப்பட்ட விதம் பாடசாலை உடற்பயிற்சிக் கூடத்தில் அடைக்கப்பட்டதுடன் இயற்கை கடமைகளையோ, குடிநீர் வசதிகளையோ வழங்காது சிறுபிள்ளைகளை நெருக்கீட்டுக்குள்ளாக்கிய தன்மை என்பன மிக அவமதிப்புக்குள்ளாக்கும் அரசியலாகவே காணப்படுகிறது. இதனை செச்சினிய விடுதலைக்காக போராடும் தமது சகாக்களுக்காக செச்சினியப் போராளிகள் (?) செய்திருக்கிறார்கள் என்பதே மிக மோசமான வன்முறை

### நேபாள இந்துக்கள்

ஈராக்கில் பல மாதங்களுக்கு முன்பு கைதுசெய்யப்பட்ட இந்தியர்கள் மற்றும் எகிப்தியர், கென்யாக் காரர்கள் அடங்கலாக ஏழு பேர் விடுதலைசெய்யப்பட்டனர்.

ஆனால் உலகிலேயே இந்து இராட்சியமாக விளங்கும் நேபாளிய நாட்டைச் சேர்ந்த 12 நேபாளியர்கள் சிரசேதம் செய்தும் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது கொலையை மேற்கொண்ட ஈராக்கிய கிளர்ச்சிக்குழு அமெரிக்கர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் பணியாற்றவும் இஸ்லாமியரை அழிக்கவுமே இவர்கள் வந்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர். இந்தியர்கள், எகிப்தியர் விடுதலை செய்யப்படும் போது அதே பிராந்திய நாடுகளின் பட்டியலிலுள்ள நேபாளிய பிரஜைகள் மட்டும் எப்படி? ஏன்? கொல்லப்பட்டனர் என்ற சர்ச்சை எழுந்துள்ளது. உண்மையில் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் இந்துக்கள் மீது கொண்டிருக்கின்ற எதிர்ப்பின் நிமித்தமே இக்கொலைகள் நிகழ்ந்துள்ளன என்று கூறலாம். அவர்கள் கிறிஸ்தவத்தை மட்டும் எதிரியாகக் கொள்ளவில்லை இந்துவையும் எதிரியாகவே நோக்குகின்றனர் என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது.

கிறிஸ்தவர்களை மேற்கு நாட்டவர்களை கடத்துகின்றதோ சிரசேதம் செய்வது என்னவோ நியாயமாக தெரிந்தாலும்; நேபாளியர்களை கிளர்ச்சிவாதிகள் கொன்றதற்கு நியாயம் கற்பிக்கமுடியாது. அமெரிக்க

### இஸ்ரேலிய பலஸ்தீனர்கள

இஸ்ரேல் படிப்படியாக ஆக்கிரமிப்பையும் அரசியலையும் தொடரானதாக கையாண்டுவருகின்றது. வன்முறையிலான போராட்டத்தை முறியடிக்க முயன்று இறுதியில் அதிதீவிரவன்முறைக்குள் இஸ்ரேலை உள்ளாக்கும் அரசியலுக்குள் ஷரோனின் அரசு அப்பிராந்தியத்தை தள்ளியது. அடிக்கடி பலஸ்தீனர் பக்கம் பாதுகாப்பை மேற்கொள்வது போன்று நடந்துகொள்வதுபோல் காட்டிக்கொண்டு யூதர்களையும் தமது இராச்சியத்தை பாதுகாக்கும் பணியிலேயே ஈடுபட்டுவருகின்றார். அவரது அரசியலும் இராணுவ நடவடிக்கைகளும் சமமான தூரத்திலேயே நகர்ந்து செல்கிறது.

ஹமாஸ் இயக்கத்தின் தீவிர தற்கொலைத்தாக்குதலால் மட்டுமே பலஸ்தீனர்களின் வாழ்வு பாதுகாக்கப்படுகின்றதென்பது காணப்பட்டாலும் அது தவிர்க்க முடியாததாக விளங்கிய போதும் அதனால் பலஸ்தீனர் தரப்பிலும் பாதுகாப்பின்மைகள் ஏற்படத்தான் வேண்டியுள்ளது. தற்கொலைத் தாக்குதலை கட்டுப்படுத்த முயன்ற யூத ஆட்சியாளர்கள் இறுதியில் ஹமாஸின் அணுகுமுறையால் திணறிப் போயுள்ளனர். ஆனால் இப்போராட்டத்தின் அணுகுமுறை தீவிரமான மாறுதலை ஏற்படுத்தும் என்பதில் அதிக நம்பிக்கை தென்படு

### இந்திய பாகிஸ்தான.

இந்திய பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு மட்டத்திலான சமாதான உரையாடல் தொடர்கிறது. காஷ்மீர் உட்பட இரு நாட்டுக்கும் இடையிலான அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கப் போவதாக இருதரப்பும் உறுதி பூண்டுள்ளன. எப்போதும் போலவே இந்தியர்கள் பயங்கரவாதப் பிரச்சினையை ஒரு கோரிக்கையாக முன்வைத்தாலும் நிதானமான பேச்சுவார்த்தையாக காணப்படுகின்றது. ஆனால் பாகிஸ்தான் தரப்பு எப்போதும் போலவே தற்போதைய நெருக்கடியையும் தந்திரமாக கையாண்டு வருகின்றது.

(24 ஆம் பக்கம் பார்க்க...)

# நேர்நோக்கு

சமாதானம் தொடருமா? அல்லது யுத்தமேகம் சூழுமா? பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி விரைவில் தீர்வு ஏற்படுமா? அல்லது இப்பொழுது நிலவும் சூழல்தான் தொடருமா? இவ்வாறெல்லாம் மக்கள் மத்தியில் கேள்விகள் இடைவிடாது எழுந்தவண்ணமே உள்ளன. ஆனால் ஊகங்கள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கின்றன. ஏனெனில் இவ் விடயத்தைத் தீமானிக்க வேண்டிய தரப்பின் கருத்துக்களும் செயற்பாடுகளும் நேரத்துக்கு ஒன்றாக மாறிக்கொண்டிருப்பதே இதற்குக் காரணமாகும் என்பது வெளிப்படையான ஒன்றே.

அதாவது, விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்வதற்கான தீர்க்கமான ஒரு நடவடிக்கையை கடந்த ஆண்டிலேயே மேற்கொண்டு



## பழியேற்க ஜே.வி.பி தயாரா?

விட்டனர். தமிழர் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபைத் திட்டவரைபு ஏகோபித்த ஓர் ஆவணமாக பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமைந் திருக்கிறது. இதனை சர்வதேசமும் கூட அப்பொழுதே வரவேற்று ஏற்றுக்கொண்டுவிட்டது.

அவ்வேளையில் பதவியில் இருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்கூட அதனை பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாக ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட இருந்த வேளையிலேயே அதிகாரப்போட்டி காரணமாக அவ் ஆட்சி கலைக்கப்பட்டது. இப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் அதனையிட்டு பேச்சுவார்த்தை நடத்தத்தயார் என்று அவர் விரும்பியோ விரும்பாமலோ சர்வதேசத்துக்கு அறிவிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளார் என்பதிலிருந்து இதனை சர்வதேசத்தினர் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது வெளிப்படையாகின்றது.

இந்நிலையில் அரசாங்கத் தரப்பு இது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள், விடுக்கும் கருத்துக்கள் நாளுக்குநாள் வேறுபடுவதை அவர்களே ஏற்றுக்கொள்கின்றனர். ஒன்று சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க இடைக்கால தன்னாட்சி திட்டவரைபு தொடர்பில் பேசுவது தொடர்பாக பலமுறை மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அத்துடன் சிரேஷ்ட அமைச்சர்கள் கூட ஒருவரிலிருந்து ஒருவர் மாறுபட்டகருத்துக்களைத் தெரிவித்துவருகின்றனர். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர், பிரதமர், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என முக் கிய பொறுப்புகள் வகிப்பவர்கள்கூட மாறுபாடான முறையிலேயே பேசி வருகின்றனர்.

எனினும், அண்மைக்காலத்தில் இதனைத் தவிர்க்கும் முயற்சியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இறங்கியுள்ளது போலவே தோன்றுகிறது. அண்மையில் சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய அனுராபண்டாரநாயக்க [illegible]னைப்பிரச்சினை தொடர்பாக சனாதிபதி மட்டும் பேசட்டும் ஏனையோர் வாயைமூடிக்கொண[illegible]போம் என்று கூறியிருக்கிறார். இதேவேளை சனாதிபதியே விடுதலைப்புலிகள் தொடர்பாக அவரது வழமையான பாணியிலான கருத்துக்களைக் கூறினாலும் "யுத்தமா? அது நடவாது" என்றரீதியில் பேசிவருகிறார். கருணாவுடன் தொடர்பில்லை என மறுக்கிறார்.

இதேவேளை ஜே.வி.பியின் கருத்துக்களைப் புறக்கணித்துவிட்டு சமாதானமுயற்சிகளை முன்னெடுக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் கோர இருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இவையெல்லாம் சனாதிபதிசந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது என்று உளப்பூர்வமாகவே தீர்மானித்துவிட்டது என்பதைக்காட்டுவதாக கூறிவிடமுடியாது. அவ்வாறாயின் ஏன் இவர்கள் பேச்சுவார்த்தைகுறித்து கரிசனை செலுத்துகிறார்கள்?·என்பதையும் அவர்களே வெளிப்படுத்து கின்றனர். அண்மையில் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளே" "விலைவாசி இன்றுள்ள நிலைபோன்றே தொடர்ந்தும் ஏறுமாயின் நாம் வெளியில் தலைகாட்ட முடியாது" எனக்கூறியுள்ளார்.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதாயின் குறை[illegible]தபட்டசம் சமாதான முயற்சிகள் நடைபெறுவது போன்று காட்டவேண்டிய தேவை அவர்[illegible]நக்கு ஏற்பட்டுள்ளது அதனையே அவர்கள் செய்துவருகின்றனர்.

இவ்விடயத்திலே பரிதாபத்திற்கு உரியவர்கள் [illegible].வி.பியினரே இன்றைய சமாதான முயற்சிகளை ஆரம்பம்முதலே நிராகரித்து தமது ஆதரவாளர்களுக்கு இனவாத ஆவேச மூட்டிவந்தவர்கள் இன்றும் இதிலிருந்து பின்வாங்க முடியாத நிலையில் உள்ளனர். இதனால் அவர்கள் சமாதானத்தின் விரோதிகளாக உலகளாவியரீதியில் பார்க்கப்படுகின்றனர்.

இவர்கள் உண்மையிலேயே சமாதானத்தின் விரோதிகளாக இருப்பினும் சமாதான முயற்சிகள் தோல்வியடையும் பட்சத்தில் அதற்கான பழியை ஜே.வி.பி மீது முற்று முழுதாகச் சுமத்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராகி வருகிறார்.

ஜே.வி.பி யின் பிடியிலிருந்து விலகி அவர் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க விரும்பியே அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறியதாக ஒரு தோற்றப்பாட்டை சனாதிபதி தரப்பினர் ஏற்படுத்தியுள்ளனர். இதன் மூலம் தாம் சமாதான விரும்பிகள் எனவும் ஜே.வி.பி யினர் சமாதான விரோதிகள் எனவும் காட்டமுயல்கின்றனர்.

எனவே யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் அதற்கு தாமேகாரணமாக இருந்தாலும் அதற்கான பழியை சனாதிபதி சந்திரிகா புலிகள்மீது கூசாமல் கூறுவார் என்பது வெளிப்படையானது. அதேவேளை அதனைவிட மோசமாக ஜே.வி.பி மீது போடுவார் என்றும் ஜே.வி.பி எதிர்பார்க்க வேண்டும். யுத்தத்தால் ஏற்படும் விளைவுகளுக்கும் அவர்களே பழியேற்க வேண்டிவரும்.

**வேலவன்**

மீனவர்கள் மீதான கடற்படையின் தாக்குதல்கள் ஓயாது தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.

மீனவர்கள் கடலில் சுதந்திரமாக தமது தொழிலை மேற்கொள்ள முடியாது வாழ்க்கைக்காக பெருமளவு போராடவேண்டியுள்ளது.

இந்த நிலையில் மீனவர்கள் தொழில் உபகரணங்கள் மீது மட்டுமன்றி அவர்களின் உயிருக்குக் கூட அச்சுறுத்தலை ஏற்படுத்துபவர்களாக சிறிலங்கா கடற்படையினர் உள்ளனர்.

கடலிலும் உயர் பாதுகாப்பு வலயமாகவும் ஆபத்து மிக்க பிரதேசங்களாகவும் துப்பாக்கி முனையில் வைத்திருக்கும் கடற்படையினரால் மீனவர்கள் அனுபவிக்கும் இன்னல் மிகப் பெரியது.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் மீனவர்கள் உயிர் இழப்பு மற்றும் தமது உடமை இழப்புகளை சந்திக்கும் மீனவர்களுக்கு உரிய நிவாரணங்கள் கூட வழங்கப்படுவதில்லை.

அரசு- புலிகளுக்கிடையில் உக்கிர யுத்தம் நடைபெற்ற காலத்தில் அரசால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார தடைகாரணமாக தமது தொழிலை முற்றாக செயலிழந்து போகக் கூடிய அளவிற்கு அவர்கள் நெருக்கடியைக் கூட சந்தித்தார்கள்.

பின்னர் அரசு- புலிகளுக்கிடையில் சமாதான முயற்சிகள் ஆரம்பித்த பின்னர் கூட அவர்களின் துயரங்கள் தீர்க்கப்பட வில்லை.

கடற்றொழிலாளர்களிற்கு சேவை புரியவென இருக்கும் நீரியல் வளத்துறை திணைக்களம் கூட மீனவர்களுக்கு உதவி புரிவதை விட்டு கடற்படையினருக்கு உதவி புரிவதிலேயே கவனம் சொலுத்தி வருகிறது.

அண்மையில் கூட காங்கேசன்துறை கடற்யினருக்கு இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளை வழங்குவதற்கு உதவியுள்ளது.

ஆனால் இந்த நீரியல்வளத் திணைக்களம் உதவி புரியவேண்டிய தமிழ் கடற்றொழிலாளர்கள் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

அவர்கள் படகுகள் மூலம் மீன்பிடித் தொழிலை புரியத்தேவையான எரிபொருட்கள் கூட போதியளவு வழங்கப்படுவதில்லையென தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மீனவர்கள் கடலில் தமது மீன்பிடித் தொழிலை புரிவதற்கு அவர்களின் படகுகளிற்கு சுமார் ஐயாயிரம் லீற்றர் பெற்றோல் தேவையான நிலையில் சுமார் மூவாயிரத்தி முந்நூறு லீற்றர் பெற்றோலை மட்டுமே வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மீனவர்களுக்கான நெருக்கடிகளும், தடைகளும் ஏராளம்.

மீனவர்களின் நிலைமை இவ்வாறு இருக்க, மீனவர் மீதான கடற்படையினரின் தொடர்தாக்குதல்கள் தொடர்கிறது.

இந்த நிலையில் தமது மீதான கடற்படைகளின் தொடர் தாக்குதல்களை நிறுத்தவேண்டும்எனக்கோரி முல்லைத்தீவு மீனவர்கள் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில்




## முல்லையில் மீனவர்களின் கண்டனப் பேரணி

> **கடற்றொழிலாளர்களிற்கு சேவை புரியவென இருக்கும் நீரியல் வளத்துறை திணைக்களம் கூட மீனவர்களுக்கு உதவி புரிவதை விட்டு கடற்படையினருக்கு உதவி புரிவதிலேயே கவனம் சொலுத்தி வருகிறது.**
>
> **அண்மையில் கூட காங்கேசன்துறை கடற்படையின ருக்கு இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளை வழங்குவதற்கு உதவியுள்ளது.**
>
> **ஆனால் இந்த நீரியல்வளத் திணைக்களம் உதவி புரிய வேண்டிய தமிழ் கடற்தொழிலாளர்கள் கடற்படையினரின் தாக்கு தலுக்கு உள்ளாகி வருகின்றனர்.**

நடைபெற்ற கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட மீனவர்கள் தமது உயிருக்கு உத்தரவாதத்தினையே கேட்டுள்ளனர்.

அத்தோடு தமது கண்டனங்கள் அடங்கிய மகஜர்களை சனாதிபதி சந்திரிகா உட்பட உரிய உயர் அதிகாரிகளுக்கும் சமர்ப்பித்துள்ளனர்.

ஆனால் மீனவர்கள் எத்தனை போராட்டங்களை நடத்தினால் என்ன. அவர்களின் துயரங்களையோ, கோரிக்கைகளையோ ஏற்கவோ அல்லது அவர்களுக்குரிய உரிமைகளை வழங்குவதாக இல்லை.

ஆனால் தமிழர் கடல் தொடர்பாக யாருக்கு சொந்தம் என்பதில் மட்டும் அரசு பேசுவது வேடிக்கையாக இருக்கின்றது.

கடல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு கடற்றொழிலாளர்களும் கடலில் உள்ள வளங்களும் முக்கியமானதாகும்.

இதே போன்று கடற்றொழிலாளர்கள் மீதும் அவர்களின் பாதுகாப்பின் மீதும் அக்கறை கொள்பவர்களாக அரச தரப்பினர் இருக்க வேண்டும்.

**நக்கீரன்**

# நேரத்துக்கு நேரம் கட்டுப்பாடுகளை விதித்து மீனவர்களை கடற்படையினர் துன்புறுத்துகின்றனர்

## - முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் -

**சிறிலங்கா கடற்படையினரால் மீனவர்கள் கடலில் எதிர்கொண்ட ஆபத்துக்களும், நெருக்கடிகளும் ஏராளம். கடற்படையினரின் ஆபத்துக்கள் மத்தியில் தமது தொழிலை மேற்கொண்ட எத்தனையோ மீனவர்கள் கடலிலே சங்கமமாகிப்போனார்கள். இன்று நிலவும் நிலைமைகளின்போது கூட அவர்கள் தொழில் ரீதியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டவர்களாகவே இருக்கிறார்கள்.**

**மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறியும் நோக்குடன் முல்லைத்தீவுக்கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் அவர்களை சந்தித்து கேட்டோம்.**

**அவர் மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக தெரிவித்தவையை இங்கு தருகின்றோம்.**



*கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசமானது கடற்றொழிலாளர்களுக்கு எந்தவகையில் உதவிபுரிகின்றது?*

மீனவ மக்களை பொறுத்தவரையில் 1990ஆம் ஆண்டிற்குமுற்பட்ட காலப்பகுதியை எடுத்துக் கொண்டால் எந்த ஒரு நிறுவனமோ அல்லது அமைப்புக்களோ மீனவர்களைச் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய வழியை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. ஆனால் 1990இற்கு பின்னர் மீனவர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அந்த சங்கங்களின் மூலம் ஒவ்வொரு பிரதிநிதிகளை தெரிவுசெய்து ஒரு கட்டமைப்பை அதாவது சமாசம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

அந்தவகையில் முல்லைத்தீவு சமாசம், என்ற இவ் அமைப்பு, இப்பிரதேச மக்களின் நலன்களை, பேணிவருகின்றது. அதாவது மீனவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு குரல்கொடுத்துவருகின்றது. குறிப்பாக சிறிலங்கா கடற்படையினால் இன்று ஏராளமான மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைவிட கடலுக்கு தொழிலுக்கு செல்லும் கடற்கலங்களை நேரத்திற்கு நேரம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து மீனவர்களை துன்புறுத்திவருகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளை மக்கள் தனித்தனியாகக் கொண்டு செல்லமுடியாது. இவ்வாறான பிரச்சினைகளை சமாசமூடாக சம்பந்தப்பட்ட கண்காணிப்புக் குழுவிற்கோ, சனாதிபதிக்கோ கொண்டு சென்று குரல் கொடுக்கின்றோம். இப்பிரச்சினைகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்மூலம் நாடாளுமன்றத்திலும் எடுக்கப்படுகின்றது.

இவ்வாறான சமாசம் என்ற ஒரு அமைப்பின் கீழ் ஒரு போர்க் கொடியை தூக்கி எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்த முடியும்.

*முல்லைத்தீவு சமாசத்தின் கடல் எல்லை பற்றி கூற முடியுமா?*

முல்லைத்தீவு கடல் எல்லையானது கொக்கிளாய் ஏரியில் இருந்து சுண்டிக்குளத்திற்கு அண்மையில் உள்ள நல்ல தண்ணித் தொடுவாய் வரையான பகுதியை உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியில் கொக்கிளாய் முதல் நாயாறுவரையான பகுதி தற்பொழுதும் ஒரு தடை செய்யப்பட்ட பிரதேசமாக உள்ளது. அதாவது இப்பகுதியின் கடற்கரையில் எப்பொழுதும் இராணுவம் நிலைகொண்டுள்ளதால் கடலின் உயர் பகுதியில் ஏதாவது பிரச்சினை என்றால் கரையை அடைய முடியாது. கொக்கிளாய்க்கும் நாயாத்திற்கும் இடையான 10 கடல்மைல்தூரம் பெரும் ஆபத்து வாய்ந்த உயர்பாது காப்பு வலயமாக உள்ளது.

ஏனைய பகுதிகளில் உயர் கடலில் (நடுக்கடலில்) ஏதாவது பிரச்சினை என்றால் கரையை அடைவதனால் கடற்புலிகளின் பாதுகாப்பு கிடைக்கின்றது.

*முல்லைத்தீவு பிரதேசத்தில் நேரடியாக கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர்கொள்கின்றபிரச்சினைபற்றி கூறமுடியுமா?*

தற்பொழுதுள்ள பிரச்சினை என்னவென்றால் முக்கியபிரச்சினை, எரிபொருள் மீன்பிடிவள்ளங்களில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களுக்கான பெற்றோல் போதியளவு கிடைக்கப்பெறாமை, அதாவது எமது சமாச எல்லைக்கு உட்பட்ட படகுகளின் எண்ணிக்கை 1025 ஆகும். இத்தொகை அதிகரித்த வண்ணம் உள்ளன. அரச செயலகத்தினால் கடற்றொழிலாளர் சமாசத்திற்கென 3300லீற்றர் பெற்றோல் மாதாந்தம் ஒதுக்கீடு செய்கின்றது. இது போதுமானதாக இல்லை. அதாவது ஒரு படகிற்கு மாதாந்தம் 05 லீற்றர் வீதம் குறைந்தளவு வழங்கவேண்டும். 5000 லீற்றருக்கு மேற்பட்ட பெற்றோல்தேவை இது தொடர்பாக அரச அதிபரிடம் கோரியுள்ளோம்.

*இப்பகுதி மீனவர்களுக்கு அரசாங்கத்தின் கீழ் உள்ள நீரியல் வளத்துறைத் திணைக்களம் எந்தவகையில் சேவையாற்றிவருகின்றது?*

நீரியல் வளத்திணைக்களத்தினை எடுத்துக் கொண்டால் (தனியார்) அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற நிதியினை மட்டும் பெறக்கூடிய வகையிலான உதவிகளை பெற்றுக்கொள்கின்றனர். 1990இற்கு முன்னைய காலங்களில் மக்களுக்கு நேரடியாக செய்து கொண்ட உதவிகள் போன்று எந்த விதமான உதவிகளையும் தற்காலத்தில் இத்திணைக்களம் செய்யவில்லை.

நேர்காணல்
சு.பிரபா

மீன்பிடி வள்ளங்களுக்கான காப்புறுதிப்பதிவு தொடர்பாக எடுத்துக் கொண்டால் இதுதொடர்பான விடயங்களை கவனிக்கவேண்டியது இவர்களின் பொறுப்பு. இதனைக்கூட இத்திணைக்களம் செய்து கொடுக்க முன்வரவில்லை. காரணம் ஒரு புதிய, வள்ளம் 80000ஆயிரம் ரூபா எனில் அதனை கொள்வனவு செய்ய முடியாத எமது தொழிலாளர்கள், பொருளாதார பலமற்றவர்களாக உள்ளனர். இதனால் தென்னிலங்கைப்பகுதிகளுக்கு சென்று அவர்கள் பயன்படுத்திய படகுகளை குறைவான விலையில் பெற்றுவந்து தொழில்செய்து வருகின்றனர். ஆனால் இங்கு புதிய படகு கொள்வனவு செய்யப்பட்ட இலக்கம் என்பன அவசியம் என தெரிவிக்கின்றனர். இதைவிட முன்பிருந்த படகுகளின் பதிவுகூட மேற்கொள்ளப் படாதுள்ளன. இதுவரையில் நீரியல் வளத்துறைத்திணைக்களத்தினால் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. தற்பொழுது கடற்படையினர் ஒருபடகினை கடலில் வைத்து தாக்கினால் அல்லது மூழ்கடித்தால் சமாசத்தினால் வழங்கப்பட்ட தொடர் இலக்கங்களை, கொண்டுதான் இனங்காணமுடிகின்றது. தொழிலாளிகளின் காப்புறுதியைத்தானும் 1990இற்கு பின்னர் இத்திணைக்களம் செய்து கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

*தொடர்ந்து வந்த போராலும் பொருளாதாரத்தடையினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் தற் பொழுது மீளக்குடியமர்ந்து சிறுதொழில்களை மேற்கொண்டு வருகின்றனர்: இவர்களின் தொழிலை மேம்படுத்தும்வகையில் எவ்வாறான உதவிகள் மேற்கொள்ளப்படுகின்றன?*

அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக கிடைக்கின்ற நிதிகளை சமாசம் பெற்று கடற்றொழில்சங்கங்களின் ஊடாக சங்கங்களில் உள்ள அங்கத்தவர்களுக்கு வழங்குகின்றது. U.N.D.P யின் நிதியுதவிமூலம் பாரஊர்திஒன்று கிடைக்கப் பெற்று இருக்கின்றது. இதன்மூலம் ஏற்றுமதி தொழிற்பாடு நடைபெறுகின்றது.

1993,1995,1996 காலப் பகுதியில் கெயர்நிறுவனத்தினால் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டதை அடுத்து இந்நிதி சுழற்சிமுறையில் கடனாக தொழிலாளர்களுக்கு வழங்குகின்றது.

அரச நிறுவனங்களினால் (திணைக்களங்களினால்) எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை.

தற்போது அரசினால் சிறிய உதவி ஒன்று வழங்கி வருகின்றது. அதாவது, ஒவ்வொரு குடும்பங்களுக்கும் பதினையாயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்குகின்றது. அதனால் எந்தவிதமான பயனும் இல்லை. முல்லைத்தீவை பொறுத்தவரையில் கரையோர தொழிலை செய்ய முடியாது. ஆழ்கடல் தொழிலாயின் அதற்கான வலையினை வழங்கினால் அதற்குரிய, படகு, வெளியிணைப்பு இயந்திரம் எதனையும் வழங்கவில்லை. அல்லது இந்த நிதியில் இவ்வாறான பொருட்களை கொள்வனவு செய்யமுடியாது. இதனை குறைந்தது 30 பேருக்கான நிதியினை பத்துப்பேருக்கு வழங்கும்போது ஒரு சாதாரண தொழிலைச் செய்யமுடியும். இதில் எத்தனை பேருக்கு கடன் வழங்கப்படுகின்றது என்பதை தெரியப்படுத்துகின்றார்களே தவிர, கடற்றொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக எதனையும் வழங்கமுன்வரவில்லை என்றே கூறவேண்டும்.

*முல்லைத்தீவு பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் எத்தனையுள்ளது அவை எவை?*

கொக்கிளாய், செம்மலை, அளம்பில், சிலாவத்தை, தியோநகர் கள்ளப்பாட்டுப்பகுதியில் மூன்று சங்கங்களும், வண்ணாங்குளத்தில் இரு சங்கங்களும் மணற்குடியிருப்பு, கோயிற்குடியிருப்பு, வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், வலையன்மடம், மாத்தளன், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு என 22 கடற்றொழில் சங்கங்கள் உள்ளன.

வலிகாமம் வடக்கு என்று சொல்லி இடம்பெயர்ந்த சங்கம் ஒன்று உள்வாங்கி அதுவும் இணைத்து இயங்கிவருகின்றது.



மண்டைதீவிற்குச் சென்ற மக்கள் ஒரு மனிதப் புதைகிணறைக் கண்டனர்.

ஒரு கிணறிலிருந்து பிணவாடை அதிகம் வீசியது. ஆனால் பிணவாடை திசை தெரிந்ததேதவிர கிணறிலிருந்துதான் என்பது முதலில் உறுதிப்படுத்தப்படவில்லை. தேடுதலில் ஆலாய் மக்கள் மண்டைதீவு எங்கும் அலைந்தனர்.

மக்கள் அதிகம் அலைய மண்டைதீவின் புழக்கத்துக்குரிய பகுதி அதிகமில்லை. அதிகம் கண்ணாக் காடுகள் நிறைந்ததாக மண்டைதீவு இருக்கின்ற காரணத்தினால் ஒரு மையப்பகுதியில் மட்டும் மக்கள் வாழிடம் செறிந்து இருந்தது.

அங்குதான் மக்கள் தேடினர் முப்பது நாட்களின் முன் படையினரால் பிடிக்கப்பட்டு காணாமல்போன தம் உறவுகளின் பிணவாடையினை.

பிணவாடை வந்த இடம் ஒரு எருக்கும்பத்திலிருந்து வந்தது. புகையிலை நாற்று உற்பத்திக்குப் பேர் போனது மண்டைதீவு. அதனால் அங்கு அதற்கு அதிகளவில் மாட்டெரு குவிக்கப்பட்டிருந்தது.

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 13



அப்படியானதொரு கும்பலிலிருந்துதான் பிணவாடை வந்திருந்தது.

அதனை மக்கள் கிளறத் தொடங்கினர். கிணறு ஒன்றின் மீது படையினர் அந்த எருக்கும்பத்தை உருவாக்கியிருந்தனர். எருவைக் கிளறிய போது.- கிணறு பிணங்களால் நிரப்பப்பட்டிருந்த கொடூரம் வெளிப்பட்டது. மிகக் கடுமையாக அழுகிச் சிதைந்த நிலையில் கடுமை யான துர்நாற்றத்துடன் கிணறினுள் பிணங்கள் கிடந்தன.

மக்களால் எதுவுமே செய்ய முடியவில்லை, அவற்றை எடுக்கவோ- அகற்றவோ- அடையாளம் காணவோ கூட முடியவில்லை. அதற்குரிய நிலையில் அந்த மனிதப் புதைகிணறு இருக்கவில்லை. கிணறுள் கிடந்த பிணங்களின் எண்ணிக்கையை கூட உறுதிசெய்யக் கூடியதாக இருக்கவில்லை. அதனால் அங்கு கிணறு மூடப்பட்டு விட்டது. அதாவது எந்த ஒரு செயலும் செய்ய முடியாத நிலை அதில் படையினரால் பிடிக்கப்பட்டு காணாமல் போன 70க்கும் அதிகமானவர்கள் கொன்று போடப்பட்டு மூடப்பட்டதாக இறுதி செய்யவேண்டி ஏற்பட்டது. உண் மையில் அதில் காணாமல் போய் கடைசிவரை மீளாதவர்கள்75 க்கும் மேற்பட்டவர்கள். பெயர் விபரங்கள் கூட திரட்ட முடியாதபடி மக்கள் சிதறி ஓடிவிட்டனர். இன்னும் முழுதாக விபரங்களை திரட்ட முடியாத நிலை. மண்கும்பான்- அல்லைப்பிட்டி- மண்டைதீவு பகுதிகளில் சிங்கள திரிபிடபலய நடத்திய உயிர் வேட்டையின் சாட்சியாக மண்டைதீவின் பிணக்கிணறு இருந்தது. இது உலகின் காதுகளை எட்டவில்லை.

அந்த திரிபிடபலய ஊர்காவற்றுறை ஊருண்டிமுனையிலிருந்து மண்டைதீவு வரை 3 நாட்கள் மேற்கொண்ட சிங்களப் படைகளின் திரிபிடபலய வில் பலிகொள்ளப்பட்ட மக்களின் எண்ணிக்கை 375 என இப்போதைக்கு ஓரளவு இறுதி செய்யக் கூடியதாக உள்ளது. வடபகுதியில் குறுகிய கால மிகப் பெரும் மனித வேட்டை திரிபிடபலய தமிழர் வேட்டை அமைந்தது. இந்த திரிபிடபலய ஆக்கிரமிப்பு வேட்டை 35 நாட்களில் சிங்களப் படைகள் கோட்டையைவிட்டுத் தப்பி ஓட படைகள் மண்டைதீவில் இருந்து ஊர்காவற்றுறைக்கு தப்பிச் சென்றன இது தெரியும்.

இதன்பின் மண்டைதீவில் பிணப்புதைகிணறு கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பிறகு தீவகத்திற்கு திரும்பும் மக்களுக்கு போக்கு வரவுப் பாதை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. பண்ணை பிரதான பாலம் தகர்க்கப்பட்ட நிலையில் 20 அடி அகலத்தை கடக்க 2 அடி அகல தண்டவாளம் குறுக்காகப் போடப்பட்டது.

ஒற்றையடிப்பாலம் அது. ஒரு மிதிவண்டி செல்லலாம் நடை பயணிகள் போகலாம். அடுத்தடுத்து மண்டைதீவுச்சந்தி வரை இருந்த நீர்ப்போக்குக்குழாய் மதகுகள் சிதைக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் 20 அடிஅகலத்துக்கும் அதிக இடைவெளி ஆகவே இந்த ஒவ்வொரு இடைவெளியையும் மிதிவண்டி- அல்லது நடைபயணிகள் செல்லக்கூடியவாறு ஒற்றைத் தண்டவாளம் அல்லது இரு பனைமரங்கள் போடப்பட்டு போக்குவரவுக்கு விடுதலைப்புலிகள் வழி ஏற்படுத்தினர்.

அதன் வழி தீவகத்துக்கு மிதி வண்டிப் பயணம் மக்களால் மேற்கொள்ளப்படத் தொடங்கியது.

இதன் மூலம் மக்கள் திரும்பவும் மீளக் குடியேறினர். அல்லர் மக்கள் சொத்துக்களை வெளிக்கொணர்ந்தனர். வயதானோரை வீடுகளில் தங்கவைத்தனர்.

நம்பிக்கையுடன் மீளக் குடிறேக் கூடிய வகையில் நிலைமை இல்லை. ஊர்காவற்றுறையில் பிணந்தின்னிகள் பலமாக நிலையமைத்துக் கொண்டிருந்தன.

இங்கு நிம்மதி ஓரளவு தரைச்சாலை தொடர்வு தீவுகளான வேலணை-புங்குடுதீவுக்கு மட்டும் தான்.

மறுபுறம் தரை வழி சாலை தொடர்பற்ற தீவுகளின் அவலம் நீள்கின்றது.

துருவன்

## தொல்லியல்

# நவீன மனிதனின் முதல் மையம் பூநகரி மனல் குன்று

இலங்கையில் நவீன மனிதன் ஹோமோ சேப்பியன் சேப்பியனின் முதல் மையங்களில் ஒன்று பூநகரி மணல்குன்றுகள்.

இலங்கையில் நவீன மனிதரான ஹோமோ சேப்பியன் சேப்பியன்களின் முதல் வாழிடங்களாக இரத்தினபுரியின் பலாங்கொடவும் - வன்னியின் பூநகரி,மாந்தை மணற்குன்றுகளும் சிறிலங்காதொல்லியல் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டவை.

உலகில் நவீன மனிதனின் பரிணாமம் 40ஆயிரம் ஆண்டுகளின்முன் ஆரம்பிக்கின்றது. பலாங்கொடையில் எடுக்கப்பட்ட தொல் மனித எலும்புக்கூடு அமெரிக்காவின் தொல்லியல் நிபுணர்களின் ஆய்வுப்படி 37000 - 40000 ஆண்டுகள்வரை தொன்மையானதாக காலக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளது. உலகில் எலும்புக்கூடாக எடுக்கப்பட்டுள்ள தொல் மனித எலும்புப்படிவங்களில் நவீன மனிதனின் எலும்புப்படிவங்களில் மிகத் தொன்மையானது பலாங்கொடவில் எடுக்கப்பட்ட மனித எலும்புப்படிவமாகும்.

இங்கு பூநகரிக்கு வருவோம்.

இலங்கையில் மனித மூதாதைகளின் மிகத் தொன்மையான சான்றுகளான கல்லாயுதங்கள் வன்னியின் மையப்பகுதி - மன்னாரின் முருங்கன், மறிச்சிக்கட்டி, புத்தளம், அம்பாந்தோட்டை பகுதிகளில் எடுக்கப்பட்டது 'பழையகற்காலம்' என்பதற்குரியஇக்கல் ஆயுதங்கள் 1லட்சத்து 25ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக காலக்கணிப்புச் செய்யப்பட்டது. பழைய கற்காலம் - பெரிய கல்லாயுதங்களை கொண்டது. கிரவல் கற்களில் இங்கு மூதாதைகள் பழையகற்கால கல்லாயுதங்களை செய்தனர்.

அடுத்தகட்ட வளர்ச்சி சிறிய குவாட்ஸ் கற்களை கூராக்கி அவற்றை அம்பின் நுனியாக்கி சுட்டி விலங்குகளை வேட்டையாடும் நுட்பமாகும். இது 28 ஆயிரம் ஆண்டுகளில் இலங்கையில் ஆரம்பமாகிறது. இது குறுணிக்கற்காலம் (Microlithic) எனப்படுகின்றது.

இந்த குறுணிக்கற்கால மக்கள் வன்னியின் மையத்திலிருந்து கரையோரம்நோக்கி நகர்ந்தனர். இதற்கு காரணம் விலங்கு வேட்டையை விட இலகுவான உணவுதேடும் வகைகளை தேடுவதாகும். இதன்படி பூநகரி மணற்குன்றுகளின் மேற்காக உள்ள பரவல்களால் ஆழங்குறைந்ததான பவளப்பாறைகளைக் கொண்டதாக ஒடுங்கியதாக இருந்தது.

தெளிந்த மேற்பரப்புக்கடலில் மீனை அவர்களின் அம்புகளால் எறிந்து பிடிக்கவும் - நண்டுகளை இலகுவாக பிடிக்கக்கூடியதாகவும் இலகுவாக இருந்தது. இதனால் அந்த நகர்வு பூநகரி மணற்குன்றுகளுக்கு நடந்தது. பூநகரியின் சங்குப்பிட்டிக்கு தெற்காக வெட்டுக்காடுமுதல் கல்முனைவரை இந்த மணற்குன்றுகள் நிறைந்து கிடக்கின்றன. இவற்றில் தொல்லியல் அகழாய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

ஆனால் காற்றுக்காலத்தில் ஏற்படும் மணல் அரிப்புகள் மூலம் வெளிப்பட்ட தொல்பொருட்கள் மூலம் இந்த மணற்குன்றுகளில் மனித மூதாதைகளின் வாழ்வின் தொன்மை சாட்சிகள் வெளிப்பட்டன. இதன்போதுதான் - 28 ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட குறுணிக்கற்கால ஆயுதங்கள் இங்குகண்டுபிடிக்கப்பட்டன.' இது சிறிலங்கா தொல்லியல் திணைக்கள முன்னாள் ஆணையாளர் கலாநிதி சிரான் தெரனியகலவினால் உறுதிசெய்யப்பட்டது.

குறுணிக்கற்கால மனித மூதாதைகளின் வாழ்வுத்தொடர்ச்சியாக தமிழரின் பெருங்கற்கால சான்றுகளும் பூநகரி மணற்குன்றுகளில் ஏராளமாகக் காணப்படுகின்றன. 3000 ஆண்டுகள் தொன்மையானதாக பெருங்கற்காலம் உள்ளது.

இந்த மணற்குன்றுகளில் பெருங்கற்காலத்துக்குரிய இரும்புப் பொருட்கள், ஆயுதமுனைகள் - பெருமளவில் எடுக்கப்பட்டுள்ளன. இன்றும் இந்த மணல்வெளிகளில் இவற்றை எம்மால் காணமுடியும். இரும்பு உருக்குப் பகுதிகளுடன் ஏராளமான தொல்கால மட்பாண்டங்கள் சிதைந்த நிலையிலும் - முழுமையான நிலையிலும் இந்த மணல்வெளிகளில் காணமுடியும். அத்துடன் சங்குகளில் செய்யப்பட்டவளையங்கள், ஆபரணங்களின் வண்ண மணிகள் என்பனவும் - வரைதல் அல்லது கண் இமைகளுக்கான மைக்குச்சுகள் உட்பட்ட இன்நோரன்ன தொன்மைச் சான்றுகள் பூநகரியின் மணற்குன்றுகளில் வெளிகளில் காணக்கிடக்கின்றன.



உலோகக்காலத்தின் தொடர்ச்சியாக நாணயங்களின் புழக்கம் ஆரம்பமாகிய காலத்தின் வெளிப்பாடான நாணயங்கள் கூட இவற்றில் கிடக்கின்றன. காற்றுக்காலத்தில் மணலில் இந்தநாணயங்கள் வெளிப்படும்.

பூநகரியின் மணல்வெளி 28ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான மூதாதைகளின் கருவூலம் - அது இதுவரை அகழாய்வு செய்யப்படவில்லை.

கலாநிதி சிரான் தெரனியகல மேலாய்வுசெய்துள்ளார். 1980 களின் கடைசியில் தொல்லியல் தேடலாளர் கு.மேகநாதன் பெருமளவிலான சான்றுகளை எடுத்திருக்கிறார். கலாநிதி ப.புஸ்பரட்ணம் ஓரளவு விடயங்களை வெளிக்கொணர்ந் தார்.

அதன்பின் சிறிலங்கா இராணுவம் இப்பகுதியை ஆக்கிரமித்திருந்தது. 1996இல் அது முழுதாக மீட்கப்பட்டது.

இப்பொழுது மீளவும் தேடல்கள் அங்கு தொடர்கின்றன.

குரலோன்



மண்ணின் மைந்தர்களின் கதை

# பிரச்சினையில்லையடா நான் தனியப்போறன்...?

குருதியும்.... சதையுமாய் உணர்ச்சி பூர்வமான களம், அந்தக் கொடூரமான காட்டுச் சண்டையில் உயிர் தப்புவதென்பது அசாத்தியமானது. உடலை மட்டுமல்ல "உயிரையும்" பணயம் வைத்தே வெற்றி கொள்ளப்பட வேண்டியது. வெற்றிக்கான நொடிப்பொழுதில், சில வினாடிகளுக்குள் எஞ்சியிருக்கின்ற இருவரும் முடிவெடுத்தாக வேண்டும்.

அந்த இறுதிக்கட்டப் போராட்டம் உயிரைப் பாதுகாப்பதற்கான போராட்டம் அல்ல, ஒட்டுமொத்த விடுதலையையுமே சார்ந்துள்ள மானத்தையும், கௌரவத்தையும், தமிழர் வீரத்தையும் நிலை நிறுத்த வேண்டிய போராட்டம், இலட்சிய விடுதலைப் போரின் உறுதியை எதிரிக்கு உணர்த்திட வேண்டிய போராட்டம். இதில் வாழ்வு, சாவு என்பதைவிட எதிரி வெற்றி கொள்ளப்பட வேண்டியவன் என்பது மட்டுமே நினைவில் நிலைத்தது, 15.10.1999 அன்று நடந்த வோட்டர் ஜெட் எனும் மரணவேதனை நிறைந்த களத்திற்குள் இருவர் மட்டுமே எஞ்சி இருக்கின்றனர். நடப்பது நடக்கட்டும் என இருவரும் பின்வாங்குகின்ற கட்டளையையும் மீறி சுட்டுக் கொண்டே முன்னேறுகின்றனர்.

எதிரியின் நிலையை வெற்றி கொள்ள இன்னும் 25 யார் தூரமே இருக்கிறது. எதிரியின் தாக்குதலோ அசுரபலமாய் நடக்கிறது. அதற்குள்ளே இலட்சிய வேங்கைகள் இருவரும் தங்களது சுடுகருவிகள் சடசடக்க எதிரியை துவம்சம் செய்வதையே இலக்காக கொண்டு முன்னேறுகின்றனர்.

ஆ.... அம்மா என்று கத்தியவாறு எஞ்சிய இருவரில் ஒருவன் வீழ்கிறான்.

மச்சான் நான் காயப்பட்டிட்டன்,

என நா தளர்ந்தவாறே, தனது சக தோழனுடன் தொடர்ந்தும் சண்டைபிடிக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் ஏதோ சொல்ல நினைக்கிறான். காயமடைந்து உடல் சோர்வுற்றுப் போன போதும் இனி தன் உடல் ஒத்துழைக்காது என்ற போதும் உறுதிதளராத உள்ளத்தில் எழுந்த இலட்சியத்தாகத்துடன், கத்துகிறான்.

மச்சான் முடிஞ்சளவு அடித்துத் தாறன் முன்னேறடா என்று சிறிதும் உடல் தளராது கூறுகிறான்.

பிரச்சினையில்லையடா நான் தனிய போறன் என்று சொல்லிவிட்டு மூர்க்கத்துடன் முன்னேறுகிறான் மாவீரன் வீரவேங்கை புலிக்குட்டி.

மாவீரன் வீரவேங்கை புலிக்குட்டி சுட்டுக்கொண்டே முன்னேறுகிறான்.

காயமடைந்து வீழ்ந்தவனோ உசார்ப்படுத்துகிறான் விடாதேயடா. அடி..... அடி என்றவாறே அவனும் தாக்கிக் கொண்டிருக்கிறான்.

இதைக் கேட்டதும் புலிக்குட்டியின் நரம்புகள் முறுக்கேறுகின்றன. அவனது இரத்தம் புதிய ஒரு பாய்ச்சுதலை உண்டாக்குவது போன்றதொரு உணர்வை உணர்கிறான்.

எதிரியை அண்மிப்பதற்கு இன்னும் 20 யார் தூரமே இருக்கிறது. நிச்சயமாக புலிக்குட்டி எதிரியைமுறியடித்து விடுவான் என்றே திடமாக உறுதிகொண்டு தாக்கிக் கொண்டே முன்னேறுகிறான்.

தனியே புலிக்குட்டி தாக்கிக் கொண்டு செல்லும் போது எதிரி திகைப்படைகிறான்.

என்னடா தனியொரு மனிதன் என்னவென்று இத்தினை பேரை எதிர்த்து முன்னேறுகிறான்

சுற்றிலும் எதிரி சூழ்ந்து தாக்கிக் கொண்டிருக்கின்ற போது, ரவைகள் மழையாக தூவத் தொடங்கியும், எறிகணைகள் அந்தக் காட்டுப்பற்றைகளையும், மரங்களையும் அரவணைத்து வெடித்துச் சிதறிய போது, விமானங்களின் பலசுற்று தாக்குதலின் போது. தனியொருவனாக சண்டையிடுவதை என்னவென்று குறிப்பிடலாம்.

"மச்சான் பிரச்சினையில்லையடா நான் தனியப்போறன்".

என்பது சாத்தியப்பாடான ஒரு விடயமா? பல எதிரிகளின் துப்பாக்கி முனைகள் சடசடத்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே என்று திகைக்கும் உணர்வு மேலீட்டால் அதிர்ந்தாலும். எதிரி தன்னை சுதாகரித்துக் கொண்டு தாக்கத் தொடங்குகிறான்.

எதிரியின் அகராதியில் ஒரு புலிவீரன் பல பேருக்கு சமம் என்பது நியதியாகிவிட்டதனால். இவன் ஒருவனை விட்டால் தனக்கு ஏற்படும் ஆபத்தினை உணர்ந்தவன் தனது தாக்குதலை துரிதப்படுத்துகிறான்.

புலிகளின் பெரியதொரு அணிக்கு எப்படி ஒரு ஆரம்பத் தாக்குதலை எதிரி செய்வானோ அதே போன்று ஒரு தாக்குதலை செய்கிறான். எதிரியின் குண்டு சாரல்களின் ஊடே புலிக்குட்டி முன்னேறுகிறான்.

எதிரியை அண்மிக்க இன்னும் 05 அல்லது 08 யார்களே இருக்கின்றன. எதிரியின் பல குண்டுகள் அவனது உடலை துளைக்கின்றன. எதிரியின் சன்னங்கள் பல துளையிட்டுவிட்ட புலிக்குட்டியின் உடல் மண்ணில் சரிகின்றது.

மச்சான் பயப்படாதே நான் தனியப்போறன் என்று உறுதிபட சொல்லிச் சென்றவன் உதிரம் கொப்பழிக்க அம்பகாமத்தின் அடர்ந்த காடொன்றில் உளப்பூர்வமாக தனது வீரமரணத்தை ஏற்றுக் கொள்கிறான்.

புலிக்குட்டியின் இறுதி நேர நினைவுகளை மீட்ட அவனுடன் இருந்த தோழன் சொல்கிறான் சண்டை உக்கிரமடைந்து விட்டது களச்சூழல் சாதகமில்லாததால் தொட்டம் தொட்டமாக நின்ற அணிகள் பின்வாங்க வேண்டியதாயிற்று. எமது முறியடிப்பு அணியில் 05 பேர் இருந்தோம் ஏனைய மூவரும் வீரச்சாவடைய எம்மையும் பின்வாங்கும் படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் எம் தோழர்களின் வீரச்சாவையும் எதிரியின் கேலித்தனமான போர்முறையும் எம்மை இறுதிவரை நின்று சண்டை செய்யவே சொன்னது. எனவே நாமிருவரும் உறுதிபூண்டவர்களாய் என்ன தான் நடந்தாலும் சண்டை செய்வதென முடிவு செய்து எதிரியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் போது நான் காயமடைந்து விட்டேன்.

புலிக்குட்டி அண்ணை தயங்கவோ, சளைக்கவோ இல்லை. நான் தனியப் போறன் என்றுசொல்லி விட்டு சுட்டுச் சுட்டுக் கொண்டே செல்ல எதிரியின் தாக்குதல் மோசமடைந்தது. நான் பார்த்துக் கொண்டிருக்கும் போது புலிக்குட்டி அண்ணனின் தாக்குதலுக்கு அஞ்சி பல எதிரிகள் சிதறி ஓடினர். அதன் பின் எதிரியின் தாக்குதல் உக்கிரமடைந்தது. பலகுண்டுகள் பல எறிகணைகள் வந்து வீழ்ந்த போதும் அவர் முன்னேறி சென்றார். அது ஒரு ஆங்கிலப்படத்தை எனக்கு ஞாபகப்படுத்தியது.

ஆனால் சில விநாடிகளே நீடித்தது. புலிக்குட்டி அண்ணை எதுவித சலனமும் இன்றி எதிரியின் குண்டடிபட்டு கீழே வீழ்ந்தார். அதுவரை அவர் தளர்ந்திடாத இலட்சிய உணர்வுடன் சண்டைபிடித்தார். அவரது உணர்வான போர்க்குணத்தை எதிரி நிச்சயமாக போற்றியிருக்கவே வேண்டும்.

மாவீரன் வீரவேங்கை புலிக்குட்டியின் வீரத்தில் என்றுமே எமக்கு ஐயம் இருக்கவில்லை. ஓயாத அலைகள் 02 நடைபெறுவதற்கு முன் அவன் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டான். கிளிநொச்சி சமர் முடிவடைந்தும் பயிற்சியை முடித்து வந்த அவன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியில் இணைந்து கொண்டான். அந்தக் காலத்தில் தான் இடர்நிறைந்த ஊரியான், சுட்டதீவு எல்லைக்காவலரண் வாழ்வும் ஆரம்பமானது.

அந்த களவாழ்க்கையில் போராளிகள் பட்ட துன்பத்தில் பங்கேற்றுக் கொண்டான் என்பதை விட, பெரும்பாலான சுமைகளை அவனே சுமந்தான் என்றால் மிகையாகாது. அங்கு உணவிற்குமட்டுமல்ல தாகம் தீர்க்க தண்ணீரிற்கே ஒரு போராட்டமாக இருந்தது. பல மைல்கள் நடந்து சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டும். அதன் போதெல்லாம் புலிக்குட்டி உடனே செல்வான் எப்படியான எதிரியின் எறிகணை தாக்குதல் என்றாலும் அதனூடே 35 லீற்றர் தண்ணீர் கொள்கலனை சுமந்து கொண்டு வருவான். போராளிகளுக்கான உணவை கொண்டு சென்று கொடுப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்படும் அவன் எமது காவலரணுக்கு முன் செல்லும் வேவு அணிகளுடனும், முன் அவதானிப்பு அணிகளுடனும் திரையிடும் அணிகளுடனும், சென்று தனதுகடமையை செய்வதில் மிகவும் விருப்பார்வம் உடையவன்.

பிறவியிலேயே ஒரு கால் சற்று ஊனமுற்று மடிந்து காணப்பட்டதனால் நடக்க சிறிதளவு சிரமப்படும் அவன் எந்த வேலையை எப்போது சொன்னாலும் எதுவித மாற்றுக்கருத்தும் சொல்லாது செய்து முடிப்பான்.

ஊரியான் களநிலையில் மட்டுமல்ல எப்போதும் அவன் தனது சுடுகருவியுடன் தயாராய் இருந்ததும் அவனது இலட்சிய உறுதியான செயற்பாடுமே! எதிரியே அவன் செயல் கண்டு பிரமிக்கும் அளவிற்குக் கொண்டு சென்றது.

— க. மிரேசு —








# நத்தொலி

## கருணைரவி

சுகிர் வந்தான். சுகிர் கைகளை பின்னுக்கு மறைச்சுக் கொண்டு வந்தான். சுகிர் அப்பிடி வந்தானெண்டால் அம்மாவுக்குத் தெரியும் சுகிர் எதோ புதிருடன் வருகிறானெண்டு.

சுகிர் அப்பிடித்தான். சின்ன வயதிலை பழகிய பழக்கமது. சுகிர் ஒளித்துக்கொண்டு வரும் பொருளை அம்மா சொல்லவேணும். அம்மா சரியாகச் சொன்னாவெண்டால் சுகிர் ஓடிப்போய் அம்மாவின்ரை கன்னத்திலை ஒரு "ஆய்" கொடுப்பான். சொல்லவில்லையெண்டால் அம்மா ஓடிப்போய் ஒரு "ஆய்" கொடுப்பா.

சுகிரை அம்மா முன்சுவர் பூக்கல்லுகளின்ரை ஓட்டைகளுக்குள்ளால் தான் கண்டா. ஓட்டைகள் அடைத்த கல்லுகளை சுகிர் நேற்றுத் தான் எடுத்தெறிந்தான்.

சூரியக்கதிர் நடவடிக்கையில் ஒரு இரவு மட்டும் ஐயாயிரம் ஷெல்லுகள் அடிச்சவங்களாம். சனங்கள் இடம்பெயரவில்லையெண்டால் எவ்வளவு சனங்கள் செத்திருக்கும்? அன்றிரவுதான் எங்கட ஊருக்கும் ஐநூறு போட்டவங்கள். அதிலை ஒண்டுதான் நவிண்டிலில் விழுந்தது. அதுதான் சுகிருக்கு முடி வெட்டுகிற ஐயாவையும் மகளையும் படுத்தபடுக்கையிலை எடுத்தது. அதைப் பார்த்திட்டு வந்துதான் சுகிர் களிமண்ணைக்குழைச்சு பூக்கல்லு ஓட்டைகளை அடைச்சவன்.

அம்மா தும்புத்தடியை சுவரோடு சாத்திப்போட்டு முற்றத்துக்கு ஓடினா. சுகிர் அம்மாவைப்பார்த்துச் சிரிச்சான். நல்ல முத்து முத்து வெள்ளைப்பல்லுகள். ஒரு பல்லுமட்டும் மஞ்சள். சுகிர் ஐஞ்சாமாண்டு படிக்கேக்கை கல்லுத்தடக்கி விழுந்தவன். முன்பல்லு நிலத்திலை அடிபட்டது. நரம்பறுந்து கொஞ்சம் நீண்ட அந்த மஞ்சள் பல்லைப்பார்த்த பெடியள், சுகிருடன் சண்டை பிடிக்கேக்கை.

"பல்லன்"....

எண்டு கேலி செய்வார்கள். அந்த வெக்கத்திலை தான் சுகிர் கம்மாலைக்காரப் பரஞ்சோதியிட்டை முறிஞ்ச வாள்ப்பிளேட்டு வாங்கி வந்து நீண்ட பல்லை உராவி நேராக்கினவன்.

சுகிரின் சிரிப்பையே அம்மா கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டு நிண்டா. அம்மாவின்ரை மனதிலை அப்பா பூத்துக்கொண்டுவந்தார்.

அது அந்தப் பாடசாலையின் முன் வயல்வெளி எங்கும் பச்சை பரவியிருந்தது. அந்த வரம்புகளாலை அம்மா தண்ணியள்ளிக் கொண்டு வந்தா. சந்திலை குடமிருந்தது. மறுகையிலை வாளி தூங்கியது. அப்பா முதல் முதல் அம்மாவுக்கு எழுதிய கடிதத்தை கையிலை வைச்சுக்கொண்டு சுகிரை மாதிரித் தான் அப்பா சிரித்தார். அம்மா அப்பாவின்ரை நினைவை இன்னும் அறுக்கவில்லை.

"உரிச்சுப் படைச்சு இந்தக் குத்தியன் தேப்பன்தான்டி. உனக்கும் கண்ணுக்குக்கீழை கறுப்புப் பிடிக்குது. சனியனுக்குச் செய்து போட்டு பொடியை வித்துவாங்கு"

சொன்ன பொன்னிக்கிழவியும் இப்ப உயிரோடையில்லை. லிபரேசன் ஒப்பிரேசனுக்கை ஆரோ யூனியனை உடைச்சு எடுக்கிறதெல்லாத்தையும் எடுத்துப்போட்டு கதவுகளைத் திறந்துவிட்டவங்கள். ஐஞ்சாறு நாட்களா ஊரடங்குச்சட்டம் போட்டதாலை பட்டினி கிடந்த சனங்கள் மிச்சச்சாமான்களை எடுத்துக்கொண்டு நிண்டதுகள். அப்ப ஹெலி வந்தது. சனங்கள் எல்லாம் கெடுதிப்பட்டு ஓடினதுகள். அப்ப பொன்னிக்கிழவி விழுந்துபோனா. சனங்கள் எல்லாம் கிழவிக்கு மேலை ஏறி உழக்கிப்போட்டுதுகள் கிழவி செத்தும் ஒருதரும் தூக்கேலை. பாவம் கிழவி.

அப்பா நல்ல உழைப்பாளி. நல்ல லொறிக்கிளீனர். தனித்து நிண்டு அட்டிகள் போடுவார். கொழும்பு லொறிக்காரர் தான் அப்பாவை கிளினரா வைச்சிருக்கிறவங்கள். அளவெட்டி முந்திரிகைப் பழங்களையும் தம்பாலை வெங்காயங்களையும் ஏற்றிக்கொண்டு வி.எஸ்.பி லொறியிலை போனால் பண்டி வத்தலோடும், மாசிக்கருவாடோடும் தான் அப்பா வருவார்.

ஒருநாள் அப்பா வருவார்... வருவார்.... எண்டு அம்மா காத்துக் கொண்டிருக்கத்தான் அந்தச்செய்தி வந்தது.

வி.எஸ்.பி லொறியை எரிச்சுப்போட்டாங்கள். அப்பா மதவாச்சிக் காட்டுக்கை கருகிக்கிடக்கிறார்" எண்டு.

அம்மா தலையிலை அடிச்சுக்கதறினா மண்ணுக்கை கிடந்து புரண்டா. அப்ப பொன்னையாண்ணை வந்து சொன்னார்.

"அழுது இனி என்னத்தைக் காணப்போறாய் பொடிச்சி கண்ணுக்கு முன்னாலை அவன் தானே(அப்பா) நிக்கிறான்."

சொல்லிப்போட்டு பொன்னையாண்ணை சுகிரைத் தூக்கினார்.

அம்மாவின்ரை கண்கள் குளங்கள் கட்டின. அம்மா ஓடிப்போய் சுகிரை அணைத்தா.

சுகிர் மறைச்சு வைச்சிருந்த மல்லிகைக்கண்டை அம்மாவுக்குக் காட்டினான். சுகிருக்கு பூக்கள் எண்டால் நல்ல விருப்பம். பழைய கடதாசிகளிலை சின்னச் சின்ன பூக்கள் செய்வான். செய்த பூக்கள் எல்லாத்துக்கும் கலர் தீட்டி மேசையிலை அடுக்கி வைச்சிருப்பான்.

"அம்மா...."

"ம்...."

"இது மல்லிகைக்கண்டு கொத்துமல்லிகை இதுவின்ரை பூக்கள் நல்ல வாசம். இந்த மல்லிகையை படலேக்கை வைச்சமெண்டால் இதுவின்ரை பூவாசம் வீட்டுக்கையும் நிறைஞ்சிடும்.

அம்மா..."

"ம்...."

என்னோடை படிக்கிற பொடியள் சென்ற் அடிச்சுக்கொண்டு வாறாங்கள். என்னோட ஒருதரும் கூடுறேலை.

"அம்மா...."

"ம்...."

"இந்த மல்லிகை பூத்தால் நான் பூக்களை ஆய்ஞ்சு பொக்கற்றுக்கை வைச்சுக்கொண்டு போனால் என்னிலையும் வாசமடிக்கும். பந்தடிச்சு விளையாட என்னையும் தங்களோடை சேர்ப்பாங்கள்."

சுகிர் சின்னப்பிள்ளையள் மாதிரிச்சொன்னான். மீசையும் அரும்பிவிட்டுது சுகிருக்கு. சுகிரின் கதையள் மட்டும் இன்னும் பக்குவப்படவில்லையெண்டு அம்மா சுகிருக்கு சொல்லிச் சிரிப்பா அப்ப அம்மா சிரிக்கேல்லை.

சுகிரின் ஆதங்கம் அம்மாவுக்கு அந்தரத்தை ஏற்படுத்தியது. கண்களிலை நீர் வளையங்களிட அம்மா அப்பிடியே மல்லிகைக் கண்டை வாங்கினா.

அம்மா மண்வெட்டியை எடுத்துக்கொண்டு வந்தா. படலையிலை கிடங்கை வெட்டிவிட்டு மல்லிகைக்கன்றை நட்டா. அம்மாவுக்கு மல்லிக்கைக்கன்றை நடும்போது நெஞ்சு கனத்துக்கொண்டு வந்தது.

மல்லிகைக்கு ஏதும் நடந்தால் அதை சுகிர் தாங்கமாட்டான். சுகிர் அப்பிடித்தான். பாசம் வைச்ச எதுக்கும் தீங்கு நடந்தால் தீயாய் மாறுவான்.

சுகிருக்கு மூன்று வயதிருக்கும். ஊமைப்பொடியனிட்டை ஐம்பது சதம் குடுத்திட்டு ஒரு பட்டம் வாங்கி வந்தவன். பட்டத்தோடு முற்றத்திலை நிண்டு விளையாடினவன். அப்ப காற்று வீசியடிச்சது. பட்டம் காற்றிலை அள்ளுப்பட்டுப் போய் மறதிக்கந்தையற்றை வேலியிலை குத்திக்கிழிஞ்சு போட்டுது. சுகிர் பட்டத்தைப் பார்த்துக் கத்தினான்.

"காற்றுக்கொண்டு போய்க் கிழிச்சதுக்கு நான் என்ன செய்யிறது?"

அம்மா சுகிரை சமாதானப் படுத்தினாள். முற்றத்திலிருந்த சுகிர் ஓடிப்போய் ஒரு தடியைத்தூக்கி வந்து

"காற்றெங்கை... காற்றெங்கையம்மா..."

சுகிர் கத்தினான்.

சுகிருக்கு நாய்க்குட்டியெண்டால் நல்ல விருப்பம் அம்மா ஊத்தைச்சண்முகத்திட்டை சொல்லி வைச்சு ஒரு கடுவன் குட்டி பிடிச்சுக் கொண்டுவந்தவா. குட்டி நல்ல மொத்தம். மலட்டுச்சோறு திண்டு தாய்நாய்க்கு நல்ல பால்.

"மாலையன்... மாலையன்.."

எண்டு சுகிர் தூக்கித் திரிவான். எப்பவும் சுகிரின் விரல்கள் அந்தச் சுருண்ட வாலை நிமிர்த்துவதிலேயே துடித்துக்கொண்டிருக்கும்.

ஒருநாள் மாலையனைக் காணேலை சுகிர் துடிச்சுப்போனான்.

அம்மா நாலு படலைகள் தாண்டி இரணைப்பெடியளின்ரை வீட்டுக்குப் போனா. இரணையள் தான் சுகிரோடை வந்து விளையாடுறதுகள். விளையாடிவிட்டுப்போகேக்கை சுகிரின்ரை விளையாட்டுச் சாமான்களை தூக்கிக்கொண்டு பறந்திடுங்கள்.

இரணையள் வீட்டிலையும் மாலையனைக் காணேலை சுகிர் இடுப்பிலை அழுதபடியே இருந்தான். சளி வழிஞ்சு வாய்க்கை போவதையும் அம்மா கவனிக்கேலை.

அம்மா சுகிரை இறக்கிவிட்டு கிணத்தடிக்குத் தண்ணியள்ளப் போனா. மாலையன் கிணத்துக்கை செத்துக்கிடந்தது.

"ஐயோ, சுகிர்.... இஞ்சை ஓடிவா.."

அம்மா கலவரத்துடன் சுகிருக்குச் சொன்னா. சுகிர் அழவில்லை. அடுப்படிக்குள் ஓடிப்போனான். எரிஞ்சு கொண்டிருந்த ரண்டு கமுகம் சிராய்களை எடுத்து வந்து கிணத்துக்குள் போட்டான். மாலையனை கொன்ற கிணத்தை எரிக்கத்தான் சுகிர் அப்பிடிச் செய்தான்.

அம்மா மல்லிகையை நட்டுப் போட்டு எழும்பேக்கை கண்மணிவீட்டு ஆடுகளையும் சிற்றம்பலத்தார் வீட்டு மாடுகளையும் நினைச்சுத்தான் பயந்தா.

கண்மணி வீட்டைதான் அம்மா நல்லதண்ணி அள்ளப் போ்றவா. கண்மணி ஒற்றைறோட்காறி - கிடக்கிறதுகளாலை எடுத்து முழாசிப்போட்டு தண்ணிக்குப் போற கடப்பையும் அடைச்சுப்போடுவாள். ஏதும் காசுக்கஷ்டங்கள் வந்தால் அம்மா சிற்றம்பலத்தாற்றை படலையைத்தான் ஓடிப்போய்த் திறக்கிறவா.

அம்மா மல்லிகையைப் பாதுகாக்க ஐஞ்சாறு காரைத்தடிகளை வெட்டி வந்தா - முள்ளுகளோடை வைச்சு அப்பிடியே மல்லிகையைச் சுத்தி அடைச்சா.

02.

மல்லிகை பெருத்து விட்டது. இலையள் தெரியாமல் நிறையப் பூக்கள். கொத்துக்கொத்துப் பூக்கள்... நல்லவடிவு. உறியில் தூக்கிற அடுக்குச் சட்டியள் மாதிரி எண்டு, சுகிர் பூக்களை கையிலை வைச்சுக்கொண்டு சொல்லுவான்.

மல்லிகையிலை பூக்கள் ஆயவாறசனங்கள் நாளுக்கு நாள் கூடிவிட்டது. மாலைகட்டித் தங்கவேலும் சாணக்கிவீட்டு மனோகரியும் வந்து ஆய்ந்தாப் பிறகுதான் சுகிர் வேறையாக்களை ஆயவிடுவான்.

மாலைகட்டித் தங்க வேலுவையும் மனோகரியையும் நினைச்சுச் சுகிர் கவலைப்படுவான். மாலைகட்டித்தங்கவேலு மூத்தமோள் அம்பிகையையும் ஐஞ்சு பிள்ளைகளையும் மாலை கட்டித்தான் கொண்டிழுக்குது. மருமோன் தாமரைக் குளத்தடிப் பெடியன். அம்புலன்ஸ் றைவர். மயிலியதனைக் காம் அடிச்சாப்பிறகு காயப்பட்டதுகளை மந்திகையிலை தான் போட்டது. அடுத்த நாள் விடிய சீரியசானதுகளை ஏத்திக் கொண்டு பெடியன் பெரியாஸ் பத்திரிக்குப் போனது. அம்புலன்ஸ் வல்லை முனியப்பர் கோவிலடியிலை போக மேலாலை ஹெலி வந்து எரிகுண்டு போட்டது. காயப்பட்டதுகளோடை மாலைகட்டித் தங்கவேலுவின்ரை மருமோனும் எரிஞ்சு சாம்பலாக்கிடந்தான்.

மனோகரிக்கு முப்பத்தைஞ்சு வயசுக்கு மேலை வரும். நூறிடத்திலை கலியாணம் பேசியாச்சுது. ஒண்டும் சரிவரேலை. ஆண் மூச்சுக்காறியாம். கெண்டைக்கால் பெரிசாம் கொண்டவனைவிட மாட்டாளாம். ஊரிலை சனங்கள் சொல்லுதுகள்.

மனோகரி ஒவருநாளும் ஒவரு மாலையா அண்ணமாருக்குப் போட்டுக்கொண்டு வாறாள். வாழ்வு கிடைக்குமெண்ட நம்பிக்கை அவளுக்கு.

மாலைகட்டித்தங்கவேலும் மனோகரியும் பூக்கள் ஆயவரப்பிந்தினால் சுகிர் பூக்களை ஆய்ஞ்சு கொடுத்திட்டு வருவான்.

03.

"டும்...டும்டும்...டும்"

ஐஞ்சாறு ஷெல்லுகள் கிட்டவா வந்து வெடிக்கின்றன. எட்டமாய் துவக்கு வெடிச்சத்தங்களும் கேக்கின்றன. அம்மா பயந்துபோனா -மனோகரிக்கும் மாலைகட்டித்தங்கவேலுவுக்கும் ஆய்ந்த பூக்களை ஷெல்லின் அதிர்வுகளாலை அப்பிடியே போட்டுவிட்டு வீட்டுக்குள் ஓடி வந்தா. "விர்" எண்ட சத்தம் திடீரென வீட்டைக்குலுக்கிக்கொண்டிருந்தது.

"கிபிர் குறிவைச்சிட்டுது. என்ரை சிவபெருமானே...."

அம்மா கிபிரை நினைத்து கோயிலுகளுக்குப் பல நேத்தியள் வைத்தா. இரவு மரங்களிலை இருந்து நத்துக்கள் கத்தினது அம்மா சிரட்டைகளிலை தட்டியும் எழும்பியோடேலை. கெடுதிக்குத்தான் கத்தியிருக்கவேணும். அம்மா ஐஞ்சூருபாக் குத்தியை எடுத்து முருகன் படத் தட்டுக்குமேலை வைச்சா. ➥

சுகிரைக் காணேலை....

அம்மா பதறிக்கொண்டிருந்தா. "விர்" எண்ட சத்தம் இன்னும் குறையேலை.

"டும்...டும்டும்...டு...மீ...ர்ர்ர்.. டும்டும்டும்..." ரைக்ரரிலை இருந்து கல்லுகள் கொட்டுறமாதிரி இருந்தது. அம்மாவுக்கு வெளியிலை என்ன நடக்குதெண்டு ஒண்டும் தெரியாது. வீட்டுச்சுவர்களிலை "உவிக்... உவீக்..." எண்டு ஏதோ வந்தடிக்கின்றன. சில ஓடுகள் நொருங்கிவிழுகின்றன.

வள்ளைகளிலை தூக்கிவிடப்பட்ட கடதாசிகளில் செய்த பூக்களிலை மொய்த்திருந்த கொசுக்கள் எல்லாம் அம்மாவின்ரை தலையிலை கொட்டுப்படுகுதுகள். அம்மாவுக்கு தலையிலை "விர் எண்டுது."

சுகிரைக் காணேலை...

சத்தங்கள் ஓய்ஞ்சாப் பிறகு அம்மா மெதுவாக எழும்பி வெளியைப் பார்த்தா - வேலிகளிலை கதியால்கள் ஒண்டுமில்லை. பெரிய பெரிய கிடங்குகளா தெருக்கள் எல்லாம் புழுதிகள் அடிச்சிருந்தது. அம்மா கதியாலுகளை நினைச்சுக் கவலைப்பட்டா.

முள்ளுக்கிழுவையள் நேரில்லை. சொத்தியள் - வேலிக்கரையளுக்கு செருப்பில்லாமல் போகேலாது. போன மாதம் தான் முள்ளுக்கிழுவையளைப் பிரட்டியெறிஞ்சு போட்டு போஸ் மாஸ்டர் வீட்டிலை கல்கிழுவை வாங்கிப்போட்டது. மாலை கட்டித் தங்கவேலுதான் வேலி அடைச்சுத்தந்தது. குற்றம் தாங்குமெண்டு இடைக்கிடை முருக்கும் சேத்துப்போட்டது. கூலியொண்டும் மாலைகட்டித்தங்கவேலு வாங்கேலை. போகேக்கை கோடாப் போடாத பொயிலையும் ஒரு போத்தில் பனங்கள்ளும் அம்மா வாங்கிக் கொடுத்தவா.

அம்மா வேலியைப் பார்த்து ஓவெண்டுஅழுதா. அம்மா மட்டு மல்ல எல்லா வீடுகளிலிருந்தும் அம்மாவின்ரை குரலைப் போலை ஒப்பாரியள் கேட்டன.

04.

சுகிர் கண்மணி வீட்டுக்கு ஓடினான்....

கண்மணி வீட்டு ஒற்றைத் திருக்கல் வண்டில் தும்பெழும்பியிருந்தது. வன்னி நாம்பன் வயிறுபிளந்து கிடந்தது .ஒரேவெடுக்கு - இலையான்கள் கிணுகிணுத்துப் பறக்குதுகள். வண்டிலை நினைக்கத்தான் கவலையாயிருக்கு.

கண்மணிக்குப் புருசனில்லை வாசியசாலைத் தலைவரா இருந்தவர். மாரடைப்பிலை புருசன் செத்துப் போக வாசியசாலை நிர்வாகம் கண்மணிக்கு வண்டிலைப் பரிசளித்தது. கண்மணி அந்த வண்டிலை வைச்சுத்தான் சீவிச்சவள்.

வாசியசாலை நிர்வாகத்திலை இன்னும் நாலைஞ்சு பேர் செத்தவை - அவையளை நிர்வாகம் கவனிக்கேலை - ஒரு துண்டுப் பிரசுரமும் அடிச்சு விடேலை - கண்மணியின்ரை புருசனுக்கு அந்திரட்டிக்கும் அடிச்சுவிட்டவை.

அரப்புப் பத்தின எக்ஸிமாக் காலைப் பார்த்து இது மாலைகட்டித் தங்கவேலுவின்ரை எண்டு மேளும் பேரப்பிள்ளையளும் கத்திக்கொண்டிருந்திதுகள்.

மனோகரிக்கு ரண்டு கைகளுமில்லையாம் - சிற்றம்பலத்தார் கவலைப்பட்டுப்போட்டு பேந்து மனோகரியைப் பேசினவர்.

"அவள் துடக்குகள் ஒண்டும் பார்க்கிறேலை உவடமெல்லாந்திரியிறவள்" எண்டு.

சுகிர் கடைசியாக வீட்டுக்கு ஓடிவந்தான். மல்லிகையின்ரை நிற மெதுவுமில்லை. அம்மா சுகிரையே பார்த்துக்கொண்டு நிண்டா. சுகிரின்ரை கண்கள் சிவந்திருந்தன. சுகிரின்ரை கண்ணுகளிலை தீ முளாசியது. அம்மாவால் அந்தத்தீயை எப்பிடிக் காண முடியும்? சுகிரின் கண்களின்ரை அந்த ரத்த நிறம் அம்மாவின்ரை உணர்வு நரம்புகளிலை தட்டி, அண்டிச்சுண்டி வலியை எழுப்பிக்கொண்டிருந்தது.

05.

அம்மா கடைசியாகப் பார்த்த சுகிரின் அந்த ரத்தநிறக் கண்கள் அம்மாவின்ர நெஞ்சிலை அடிக்கடி வருகிறது. அம்மா சுகிரை எப்பிடி மறப்பா? சுகிரின் ஞாபகமாக அம்மா ஒரு மல்லிகையை படலேக்கை வைத்தா - அதுவும் சுகிருக்கு விருப்பமான கொத்து மல்லிகை.

இப்ப கொத்து மல்லிகை நல்லாப்பெருத்துவிட்டது. இலை கொள்ளாப் பூக்கள். அம்மா ஒவ்வரு நாளும் மல்லிகைக்குக்கிட்டைப் போய் நிப்பா - மல்லிகையிலை எந்த வாசமுமில்லை. பூக்களை ஆய்ஞ்சு கைகளிலை கசக்கி மணப்பா - அப்பவும் வாசமிருக்காது.

வாசம் எல்லாம் சுகிரோடையே போய்விட்டது எண்டு அம்மா கவலைப்படுவா.

06.

சூட்டி ஒரு ஹீரோக் கொண்டாவில் காற்றைக் கிழித்துக்கொண்டு வருகிறான்... காற்று கண்ணுகளிலை உதைக்க உதைக்க சூட்டிக்கு கண் எரிஞ்சு சிவக்குது. கண் எரிஞ்சால் சூட்டிக்கு கண்ணிலை பூளையள் தள்ளும். ஒரு கையால் பூளையை துடைத்தபடி வருகிறான்.

சூட்டி இந்தத் தெருவுக்கு மூண்டு தடவைகள் வந்திருக்கிறான். அப்ப தெருக்கள் எல்லாம் கடுமையான சோதனையள். சந்திக்குச் சந்தி ஆமியளைத்தான் காணலாம். ஆரிலும் சந்தேகங்கள் எண்டால் உடனையே பிடிச்சுக்கொண்டு போடுவாங்கள் - பிடிபட்டதுகள் தேடினாலும் கிடைக்காது.

சூட்டி முதல் முதல் ஒரு மாடுமேய்ப்பவனாகத்தான் இந்தத் தெருவிலை காலடிகளை எடுத்து வைச்சான் செல்லப்பற்றை ரண்டு பட்டிமாடுகள் எல்லாமாக நாப்பது வரும். செல்லப்பர் மாடுகளை மேய விட்டிட்டு புல்லுகள் செருக்கிக் கொண்டிருந்தார்.

செல்லப்பர் ஒரு நல்ல மனிசன் முதல் முதல் அவர் சூட்டியைக்கண்டது பறவையள் கூடுகளுக்குத் திரும்புகிற நேரம்தான். சூட்டியை துவக்குடன் கண்டவுடனை திகைச்சுப் போனார். புல்லுச் சாக்குக்கை துவக்கை வாங்கி வைச்சிட்டு மாடுகளோடைசூட்டியை வரச்சொல்லிப்போட்டு, தான் துவக்கை சாக்குக்கை வைச்சுக்கொண்டு வந்து கொடுத்தவர்.

அதுக்குப்பிறகு சூட்டி ரண்டு தடவைகள் அந்தத் தெருவுக்கு வந்தான். செல்லப்பரை றெக்கிக்கு வைச்சுக் கொண்டுதான் அந்த ரண்டு தடவையும் நுழைஞ்சவன்.

இப்ப சூட்டிக்கு எந்தப் பயமுமில்லை - எவரின் உதவியும் தேவையில்லை சூட்டி இடுப்பிலை வோக்கியுடன் எத்தினை ஆமியளைக் கடந்து கொண்டுவருகிறான். இப்ப சமாதானம்தானே...

07.

மல்லிகை வாசம் திடீரென அம்மாவுக்கு மூக்கிலை அடிச்சது. அம்மா திகைச்சுப்போனா சுகிர் நிக்கேக்கை வீசின அதேவாசம். அம்மாவின்ரை கண்ணிலை நீர் கோர்த்தது.

"என்ரை சுகிர்க்குஞ்சு..."

அம்மா கத்தினா அம்மாவின்ரை கத்தல் சத்தத்திலை வளையிலை தூங்கின சின்ன மாம்பழ வவ்வால் கீச்சிட்டுக்கொண்டு ஓடியது. அம்மாவின்ரை அந்தச் சின்னச் சொல்லுகளுக்குள்ளை இவளவு காலமும் அடக்கி வைச்சிருந்த கவலையள் எல்லாம் வெடித்துச் சிதறியது.

"அம்மா..."

"இது சுகிர்தான். இது சுகிரின்ரை குரல்தான் என்ரை சுகிர் குஞ்சைக் கண்டிட்டுத்தான் மல்லிகையும் வாசமடிக்குது. என்ரை சுகிர்..."

அம்மா கத்திக்கொண்டு மல்லிகைப் பந்தலடிக்கு ஓடினா.

மல்லிகைப் பந்தலுக்குக் கீழை சூட்டி நின்றான். சூட்டி மல்லிகைப்பூக்களை கைகளிலை வைச்சிருந்தான். அம்மா சூட்டியையே கொஞ்சநேரம் பார்த்துக்கொண்டு நிண்டா. அம்மா சூட்டியைக் கண்டதும் திகைச்சுப்போனா.

சூட்டி அம்மாவைப் பாத்துச் சிரிச்சான்.

சூட்டிக்கு சுகிரைப்போலை பெரியதலை சுகிரைப் போலை உச்சியருகிலை மயிர் அள்ளுப்பட்டிருந்தது. சுகிரைப் போலை மூக்கினடி பதிஞ்சிருந்தது.

"என்ரை குஞ்சுவுக்கு பிறந்தவுடனை நாசெடுக்கேலை. மூக்கு சப்பையாப் போச்சு"

எண்டு எத்தனை நாள் அம்மா கவலைப்பட்டிருப்பா. ஒவ்வரு நாளும் ஏணேக்காலை தூக்கி சுகிரை காலிலை கிடத்திப் போட்டு அம்மா மூக்கைப் பிடிப்பா. அழவும்விடமாட்டா. ஆம்பிளைப்பிள்ளைக்கு சின்னத் தலைதான் வடிவு எண்டு தலையையும் அமத்தியமத்திப் புடிப்பா. அம்மா எல்லாத்தையும் நினைத்துருகினா.

"அம்மா...."

"ம்....."

"இதே சுகிரின்ரை வீடு?"

"ஓம்"

"நான் சுகிரோடைதான் நிண்டனான். சுகிர் என்னோடதான் றெயினிங் எடுத்தவன். சுகிர் வீரச்சாவடையேக்கை நான் பக்கத்திலை நிண்டனான்"

அம்மா ஓவெண்டு அழத் தொடங்கிவிட்டா. அம்மா சூட்டியின்ரை கையை தனது கைகளாலை பிசைந்து பிசைந்து சூட்டியின்ரை கன்னங்களை இரு கைகளாலும் தடவித்தடவி....

"குஞ்சு.... உன்னைக் கண்டவுடனை பெரிய சந்தோசமாக் கிடக்கு நீ பக்கத்திலை நிக்க என்ரை சுகிர் பக்கத்திலை நிக்கிறமாதிரியிருக்கு வா குஞ்சு... நீயும் எனக்கொரு குஞ்சுதான்.

அம்மா சூட்டியை வீட்டுக்குள் கூட்டிச் சென்றா. சுகிர் செய்து வைத்திருந்த பூக்கள் எல்லாத்தையும் காட்டினா. சுகிருக்கு இஞ்சி எண்டால் நல்லாப் பிடிக்கும். சுகிர் இஞ்சி போட்டு தேத்தண்ணிதான் குடிக்கிறவன். அம்மா ஓடிப்போய் இஞ்சி போட்ட தேத்தண்ணி ஆத்திக் கொண்டு வந்து சூட்டிக்குக் கொடுத்தா.

"குஞ்சு இனி நீ இந்த வீட்டுக்கு ஒவ்வொரு நாளும் வரோணும். இந்த வீட்டிலை மல்லிகை வாசம் ஒவ்வொருநாளும் வீசோணும் உன்னைக் காணாமல் இனி நான் இருக்கமாட்டன்"

எண்ட அம்மா வீட்டுக்குள் ஓடிப்போய் சுகிரின்ரை பிறந்த நாளுக்கு எடுத்து வைச்சிருந்த ஜீன்சையும் சேட்டையும் எடுத்துக் கொண்டு வந்து சூட்டிக்குக் கொடுத்தா.

சூட்டி அதை வாங்கினான்.

அம்மா..."

"ம்..."

"எனக்கு சுகிரின்ரை இரு போட்டோ வேணும். சுகிரின்ரை ஞாபகமா நான் வைச்சிருக்கோணும் அதுக்குத்தானிஞ்சை வந்தனான்."

அம்மா ஓடிப்போய் சுகிரின்ரை ஒரு போட்டோவை எடுத்துக் கொடுத்தா.

சூட்டி அம்மாவுக்கு நன்றி சொல்லி விட்டுப்போனான் சூட்டி போகேக்கை அம்மா சூட்டியின் நடையையே பார்த்துக்கொண்டு நிண்டா.

சூட்டியைப் போலைதான் சுகிரும் நடப்பான் சூட்டியைப் போலைதான் காலுகளை துவைச்சுச் துவைச்சு தூக்கிவைப்பான். சூட்டியைப் போலைதான் சுகிரும் சேட்டுக் கொலரை பின்னுக்கு இழுத்து விட்டு லேஞ்சியாலை கழுத்தைத் துடைக்கிறவன். சுகிர் களைத்து வந்தால் இளஞ்சூடான தண்ணியிலை தான் முகம் குழுவிப்போட்டு ஓடிக்கொலோனை மூக்குக்குப் பூசுறவன் இனி சூட்டி வரேக்கை தண்ணி சுடவைக்கோணும் எண்டு அம்மா நினைத்தா.

அம்மாவின்ரை மூக்கில இப்ப மல்லிகையின்ர வாசமடிக்கேலை. அம்மா அடிக்கடி காற்றை உவிந்து பார்த்தா. மல்லிகை ஏன் வாசத்தை வீசேலை? அம்மா திகைச்சுப் போனா மல்லிகையிலை வாசம் இல்லாமப் போனப் பிறகுதான் சுகிரின்ரை "சாவுச் செய்தி" வந்தது.

நெஞ்சடைக்க அம்மா சீலையை முழங்கால் வரைக்கும் சிரைச்சிக்கொண்டு சூட்டியை கூப்பிட ஓடினா சூட்டி ஹீரோ கொண்டாவிலை போய்க்கொண்டிருந்தான்.

கவிதைகள்

## எனதும் என் நினைவுகளினதும் இருப்பிடம்

எனது பிஞ்சுக் கரங்களில்
நெரிஞ்சி முட்கள் குத்தும்
தொட்டாவாடி கீறும்
முனைக் கட்டைகள் கிழிக்கும்
காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து
மண்ணுடன் சேரும்
ஆனாலும் நான் ஓய்ந்ததில்லை.
நானும்; என் அப்பாவும்
அம்மாவும் சேர்ந்து
வியர்வை சிந்தினோம்.
நீண்ட வருடங்கள்; எங்கள்
உழைப்பும் வாழ்வும்
அந்த மண்ணில் தான்
அமைதியாய்க் கழிந்தது.
வாழைகள்,
மா, பலா தென்னை,
கமுகு என;
பூத்துக்குலுங்கி
காய்த்துக் கனிந்து
சிரிக்கும் காலங்களில்
எங்கள் கைகளும்
கனக்கும்.
அந்தோ!
எங்கள் குடிலின் மீது
குண்டுகள்
மாரிமழையாய் பொழிந்தது.
தாயைப் பறித்து
தந்தையை ஊனமாக்கி;
எல்லாம் இழந்து
உயிர் காத்து ஓடிய
காலங்கள் கரைந்து
என் தலைமுடி வெழுத்து
மூத்தவளுக்குத் திருமண வயதில்
நிலம் தேடி அலையும்
நீங்காத துயரத்தில்
தந்தையின் ஆயுளும் முடிந்து
தலைமுறைமாறி
சொந்தக்காரன் நானாகித்
தலை நிமிர்ந்து பார்க்கிறேன்.
குண்டுக்காரர்களின்
குடியிருப்பாகிய
என் நிலம்;
என் பிள்ளைகளிடம்
கையளிக்க;
இன்னும் கொஞ்சத் தூரம் தான்
இருக்கிறது; நெருக்கமாக
இன்னும் கொஞ்ச நாட்களில்
நானே மீட்பேன் – உறுதி
எனக்குச் சொந்தமானது
அந்த நிலம்தான்
என்பயணம் தொடர்கிறது.

முருகு பாரிமகன்

## எறிகல் உடைத்த கற்கள்

வலி உணரும்
தருணங்களில்...
எங்கிருந்தோ முளைக்கிறது
எனக்கான கவிதை
காற்றழிந்த
மணல் வெளியில்
காத்திருக்கும் ~ என் காலடி
காற்றில்....
அழிவதற்காய் ~ நான்
கானலை அருந்த
தயாராகையில்....
எப்படியாவது
காப்பாற்றி விடுகிறது
மேகம்! ~ எனக்கு தெரியும்
கடித்து விடுகிற
கடைசி நொடிவரைக்குமே
புகழப்படும் எறும்புகள்.
ஆனாலும் ~ எறும்புகள்
கவலையடைவதில்லை
எது குறித்தும் ~ என்
வழியெங்கும்
நிறவிக் கிடக்கிறது
எறும்புகள் உடைத்த
கற்கள்....

த.அகிலன்

# வீடு

அண்மைக் காலமாக உலகளாவிய ரீதியில் பெண் விடுதலை பற்றிய விழிப்புணர்வு மேம்பட்டுவருகிறது. பெண் பற்றிய சிந்தனை, அவளது பிரச்சினைகள், மனவுணர்வுகள் வெகுசன ஊடகங்களில் இன்று குறிப்பிடக் கூடியளவு வெளிப்படுத்தப் படுகின்றன.

பெண்கள் பற்றிய ஆக்கங்களைப் பெண்கள் மாத்திரமின்றி பெண்ணியச் சிந்தனைகளை ஆதரிக்கும் ஆண்களும் கூட விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் படைத்து வருகின்றார்கள். எனினும் பெண்கள் பற்றிய சிக்கல்களையும், புறஉலகத் தாக்கங்களையும் பெண் எழுத்தாளர்களினால்தான் யதார்த்த



## மலினப்படுத்தப்படும் பெண்விடுதலை உணர்வுகள்

மாகச் சிந்தித்து உயிர்த் துடிப்புடன் வரைய முடிகிறது.

மலினப்படும் மகளிரின் விடுதலை உணர்வும், உரிமைக் குரலும் கலைப்படைப்புகளில் அண்மைக் காலமாக ஆழமாக வெளிப்படுத்தப்பட்டுவரும் அதேவேளையில் பெண்மையை வியாபாரப் பொருளாக்கும் கயமையும் இன்னொரு புறம் தொடர்கிறது.

அண்மைக் காலப் படைப்பாளிகள் நாவல் மூலம் கவிதை மூலம் பல புதிய படைப்பாளிகளும் களமிறங்கி பெண்ணியச் சிந்தனைகளைக் கூர்மையடைய வைக்கிறார்கள். இவ் விழிப்பானது சர்வதேச விழிப்புணர்வுடன் இணைந்த கோட்டில் பயணம் செய்கிறது. இவர்கள் பெண்ணியம் பற்றி பல கோணங்களில் ஆராய்கிறார்கள்.

சுயமான சிந்தனைகளும், சிறகு கட்டிப் பறக்கின்ற சுதந்திரப் போக்கும், துணிவாக முடிவெடுத்தாலும் பாரதிக்குப் பின் வந்த பெண்களைப் போலவே, படைப்பிலக்கியத்திலும் பரிணமிக்கின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இப் படைப்புகளின் ஆணாதிக்க சிந்தனைகள் தகர்த்தெறியப்பட வேண்டும் என்ற சிந்தனையும் முனைப்புடன் மேலோங்கி நிற்கின்றது. இவ்வாறான ஆரோக்கிய நிலையிலும் கூட எதிர்வினையான செயற்பாடுகளும் இல்லாமலில்லை.

பெண்ணியச் சிந்தனைகளை மழுங்கடித்து, பெண்களை போகப் பொருளாக ஆணாதிக்கப் பார்வையில் அணுகுவதும் அவர்களது நியாய பூர்வமான உணர்வுகளை மலினப்படுத்துவதும், இன்னும் ஒரு படி மேலே சென்று பெண்களின் நிர்வாணங்களை விளம்பரமாக்கி வியாபாரம் செய்வதும் தொடர்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் பெண்களும் இதற்குத் துணை போவது தான். பெண்களை அகமும் புறமும் துகிலுரிகின்ற துச்சாதனர்களாக மின்னியல் வெகுசன ஊடகங்கள் பங்காற்றுகின்றன.

மேலும் இலட்சியப் பெண்களின் குண இயல்புகள் என்ற போர்வைக்குள் அச்சம், மடம், ஞானம் என்ற போலி முகம் காட்டி, அடக்கம், பொறுமை, கற்பு, தியாகம், விட்டுக் கொடுப்பு என்பன பெண்களுக்கே மட்டுமுரிய குணங்களாக்க ஆணாதிக்கத்திற்கு மறைமுக ஆதரவு வழங்கப்படுகிறது.

இன்றைய பெண்கள் விழிப்புணர்வு பெற்று வருகின்றார்கள். கல்வியும், போரும், வேலைவாய்ப்பும் ஞானக் கண்களைத் திறந்து அவர்களை வீட்டுக்கு வெளியே கொண்டு வந்து உண்மை நிலையை உணரவைத்தது வரவேற்கத்தக்கது. விழிப்புணர்வு பற்றியும், மறுக்கப்படும் பெண்ணுரிமை பற்றியும் சிந்திக்கவேண்டிய விடுதலையை நோக்கிப் பயணிக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த முன்னேற்றகரமான காலத்தில் மரவுச் சிந்தனைகளில் போலிக் கலாசார பண்பாட்டுத் திரைகளும், அவற்றின் ஒரு பக்கப் பார்வையும் உடைத்தெறியப்பட வேண்டியவை. வீட்டு நிர்வாகத்திலும் சமூக மேம்பாட்டிலும் பெண்களின் பங்கு சுதந்திரமாகவும், சமப் பெறுமானம் உள்ளதாகவும் மாற்றம் காணவேண்டும்.

போரியல் பெண்களைப் போல் குடும்பப் பெண்களும் துணிவோடு சிந்தித்துச் செயற்படவேண்டும். விடுதலை என்பது கேட்டுப் பெறுவதல்ல, போராடிப்பெறவேண்டியது என்பது பெண் விடுதலைக்கும் பொருத்தமானதே!

எனவே விழித்தெழுவோம். துணிந்து செயற்படுவோம். விடுதலை நிச்சயம் எங்கள் வசமாகும்.

சந்திரகாந்தா

# அசைவ உணவு




இறால்-சைனீஸ் ஸ்டைல்

**தேவையான பொருட்கள்:-**

உரித்த இறால்-500கிராம்
தக்காளி சாஸ்-2 மேசைக்கரண்டி
மிளகாய்வற்றல் விழுது -1 மேசைக் கரண்டி
சைனீஸ் உப்பு-1சிட்டிகை
மோனோ சோடியம் குளுடோமேட் கார்ன் ஃபிளோர் -4 மேசைக் கரண்டி
இஞ்சி, பூண்டு விழுது-2 1/2 மேசைக்கரண்டி
முட்டையின் வெள்ளைப்பகுதி-1
உப்பு - 1 தேக்கரண்டி
தண்ணீர் - 4 மேசைக்கரண்டி
எண்ணெய் - 1 லீற்றர்

**செய்முறை:-**

முட்டையின் வெள்ளைக்கரு பகுதி, 3மேசைக்கரண்டி கார்ன். ஃபிளோர், 1/2 தேக்கரண்டி

உப்பு, தண்ணீர், எண்ணெய் இவற்றைச் சேர்த்து ஒரு கலவையைத் தயாரிக்கவும்.

அந்தக்கலவையில் இறாலை 20நிமிடம் ஊறவைக்கவும்.

தக்காளி, சாஸ், சைனீஸ் உப்பு, மிதமுள்ள கார்ன். ஃபிளோர், இஞ்சி, இஞ்சி விழுது, மிளகாய் வற்றல் விழுது ஆகியவற்றை ஒன்றாகக்கலக்கவும். தேவையான அளவு எண்ணெயைச் சூடாக்கி, ஊற வைத்த இறாலை பொன்னிறமாக வறுத்து எடுக்கவும். 3மேசைக் கரண்டி எண்ணெயை சூடாக்கி தக்காளி சாஸ் கலவையை 1நிமிடம் பொரித்து. இதில் இறாலை கலந்து மேலும் 5நிமிடம் பொரிக்கவும்.

இறால்- சைனீஸ் ஸ்டைல்ரெடி!

# குழந்தைகளுக்கு எப்போது எதைக்கொடுக்க வேண்டும்?

எல்லோருமே தன்னுடைய குழந்தை ஆரோக்கியமாகவும் அறிவாளியாகவும் இருக்கவேண்டும் என நினைக்கின்றனர். அதற்காக ஆத்திரப்பட்டால், ஆசைப்பட் டால் மட்டும் போதாது ஆரோக்கியமான உணவு வேண்டாமா? "அது என்ன ஆரோக்கியமான உணவு?" என்று நீங்கள் கேட்கலாம். எப்போதும் எதையாவது கொடுத்தால் மட்டும் போதாது; எப்போது எப்போது எதைக் கொடுக்கவேண்டும் என்று தெரிந்து கொடுக்கவேண்டும்.

**உங்கள் குழந்தைக்கான உணவு:~**

சாதாரணமாக குழந்தைக்கு இரண்டுவயதாகும் வரை அதன் வளர்ச்சிக்குத் தேவையான சத்தில் பாதியளவு தாய்ப்பாலில் இருந்து தான் கிடைக்கிறது. ஆகவே, கண்டிப்பாக எல்லாத்தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

குழந்தை பிறந்த 3 அல்லது 4 மாதங்களுக்குப்பிறகு பாலின் அளவு குறைந்து விடும். வளரும் குழந்தைகளுக்குத் தேவையான அளவு சத்து தாய்ப்பாலிலிருந்து மட்டும கிட்டாது. எனவே தாய்ப்பால் கொடுத்தவுடன் வேறு இணை உணவுகளும சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

**எப்போது கொடுப்பது?**

குழந்தையின் வளர்ச்சிக் காலத்தில் தாய்ப்பாலோடு சேர்த்து இணை உணவு கொடுப்பது மிக முக்கியமான கட்டம். எப்பொழுது இணை உணவு கொடுப்பது என்பதை தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு தாயினுடையது. தாயால் மட்டும்தான் இதை நிர்ணயிக்க முடியும்.

தாய்ப்பால் அளவு குறையும் பொழுது குழந்தையின் சரியானவளர்ச்சிக்கு தேவையான சத்துக்கள் கிடைக்க இணை உணவு கொடுக்கத் துவங்கவேண்டும்.

**எப்படிக் கொடுப்பது?**

இணை உணவுகளை மூன்று விகிதங்கள் கொடுக்கலாம்.

1)திரவ உணவாக.
2)நன்றாக மசிக்கப்பட்ட திட உணவாக.
3)சிறுதுண்டுகளாக நறுக்கப்பட்ட திட உணவாக.

**3~4 மாதங்கள்:~**

மசித்த வாழைப்பழம் அந்தந்தப் பருவங்களில் கிடைக்கும் பழங்களான பப்பாளி, மாபோன்றவற்றையும் இப்படிக் கொடுக்கலாம். ஆவியில் வேக வைத்து மசித்து, அப்பிள், தக்காளி, திராட்சை, எலுமிச்சைபோன்ற பழங்களின் சாறு, அரிசிக் கஞ்சி, வேக வைத்து மசித்த உருளைக்கிழங்கு சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்ற உணவுகளைக் கொடுக்கலாம்.

# இப்படிச் செய்யலாம்...

ஈக்களுக்கு நீலநிறத்தைக் கண்டால் பிடிக்காது. நீலநிறத் துணியின் மீதோ, நீலநிறப் பொருளின் மீதோ ஈக்கள் இருப்பதில்லை. ஈக்கள் அதிக தொல்லை கொடுத்தால் நீலநிறத் துணியை போட்டால் போதும் ஈக்கள் ஓடிவிடும். நம் வீட்டிலுள்ள அறைகளுக்கு நீலநிறச் சுண்ணாம்பையும் பெயிண்ட்டையும் அடித்துவிட்டால் ஈக்களின் தொல்லை இருக்காது.

* * *

அரிசி வைத்திருக்கும் பாத்தரத்தில் பூச்சிகளும் வண்டுகளும் வராமல் இருக்க, அந்தப் பாத்திரத்தின் அடியில் உலர்ந்த வேப்பிலையைப் போட்டு வையுங்கள்.

* * *

தேங்காயை உடைத்து அப்படியே வைத்திருந்தால் அது பழுதடைந்து போகும். தேங்காயைத் துண்டு துண்டாக நறுக்கி அதை எடுத்து வெயிலில் உலர்த்தி உள்ளே வையுங்கள். எத்தனை நாள் ஆனாலும் தேங்காய் கெட்டுப் போகாது.

* * *

கடைகளில் வாங்கும் அரிசியை சமைக்க முடிய வில்லை என்கிறார்கள் சிலர். இந்த அரிசியைச் சிறிது நேரம் தண்ணீரில் ஊற வைத்துவிட்டுப் பிறகு சமைத்தால் நன்றாக வெந்து விடும்.

* * *

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—13

பெயர்:..............................................

முகவரி:............................................

..............................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 02**

**பகுதி -13**

''முடியும்'' என்றான் அவன். எனது கையை விட்டுவிட்டு தனியாகவே நடந்து அவனது வகுப்பறைக்கு சென்றுவிட்டான்.

படிப்படியாக, டிப்ஸ், சுயதேவை பூர்த்தியுள்ளவனாகவும், பொறுப்புள்ளவனாகவும் ஆகவேண்டும் என்ற நோக்கத்திலேயே இப்படிச் செய்தேன்.



## முடுபனிக்குள் ஒரு தேடல்

**மொழியாக்கம் :- வி.பி.யோசப்**

அவனது இயலுமைகள் பற்றிய எனது நம்பிக்கைகள், எனது எதிர்பார்ப்புக்களை எட்டுவதாக இருக்கவேண்டும். என்பதை அவனுக்கு உணர்த்த முயன்றேன். அப்படிச் செல்ல முடியும் என்று நான் நம்பினேன் அதனால் அவன் தடுமாறியிருந்தால், முதல் நாளான அன்று அது தனது சக்திக்கு மீறியது என்பதற்கான அறி குறிகளைக் காட்டியிருந்தால் அரைவாசித் துரத்துக்காவது அவனோடு சென்றிருப்பேன்.



அல்லது உதவி கட்டாயம் தேவை என்று தோன்றியிருந்தால் முழுத்துரத்திற்கும் அவனோடு சென்றிருப்பேன். ஆனால் அவன் தானாகவே சென்று விட்டான். ''குட்பை டிப்ஸ்'' என்றேன் நான்.

“ஓம்...போய் வாருங்கள்” என்ற அவனது குரலில் ஒரு வித மென்மையும் இனிமையும் கலந்திருந்தது. மண்டபம் நெடுக நடந்து சென்றவன் தனது அறையின் கதவைத் திறந்துவிட்டு திரும்பிப் பார்த்தான். நான் கையை அசைத்துக் காட்டினேன். அந்த வேளையில் அவனது முகத்தில் தெறித்த உணர்வலைகள். ஆர்வமூட்டுபவையாக இருந்தன.அவனது முகத்தில் வியப்பு... கிட்டத்தட்ட மகிழ்வான உணர்வுகள்...

அறைக்குள் நடந்து சென்ற அவன் கதவை உறுதியான முறையில் சாத்திவிட்டான். டிப்ஸ் தனியாக எங்காவது போனது அதுதான் முதல் முறை.

டிப்ஸோடு இந்த உறவை வளர்த்தெடுப்பதற்கான இலக்குகளில் ஒன்றாக உணர்வுகள் ரீதியான விடுதலையை அவன் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதாக இருந்தது. அவனது பிரச்சினைகளை, ஆதரவாக இருக்கும் உறவுமுறையை வளர்ப்பதன் மூலம் சிக்கலாக்க நான் விரும்பவில்லை. என்மீது எதற்காவது தங்கியிருக்கச் செய்வதன் மூலம் அவனது ஆழ்மன பாதுகாப்புணர்வுகளை முழுமையாக வளர்த்துக்கொள்வதைத் தாமதப்படுத்த நான் தயாராக இருக்கவில்லை. உணர்வு ரீதியான விருப்பங்கள் மறுக்கப்பட்ட சிறுவனாக டிப்ஸ் இருந்தால்... அறிகுறிகள் அப்படித்தான் சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தன. இந்தக் கட்டத்திலே உணர்வு ரீதியான பிணைப்பை வளர்த்துக் கொள்வது, அந்தக் குழந்தையின் ஆழமான தேவை யொன்றை நிறைவு செய்வது போல் தோன்றினாலும் இறுதியிலே அவனே தீர்த்துக் கொள்ளவேண்டி ஏற்படக் கூடிய பிரச்சினை ஒன்றை உருவாக்கிவிடலாம்.

டிப்சுடனான அந்த முதலாவது விளையாட்டு வழி சிகிச்சை அமர்விலிருந்து நான் திரும்பிக்கொண்டிருந்தபொழுது உருப்படமுடியாத ஆள் என்று அவனைக் கழித்து விடமுடியாமல் ஆசிரியைகளும் ஏனைய பணியாளரும் தவிப்பது ஏன் என்று என்னால் புரிந்து கொள்ள முடிந்திருந்தது. அவனது உள்ளார்ந்த வலு மற்றும் இயலுமை குறித்து எனக்குள் மரியாதை உணர்வே அரும்பியிருந்தது. பெரும்மனத்துணிவு கொண்ட பிள்ளையாக அவன் இருந்தான்.

(தொடரும்....)

*கடந்த 30.05.2004 திகதி வெள்ளிநாதம் இதழில் “பதிவுகள்” நூலிற்கு மகிழ் அவர்கள் எழுதிய நூல் விமர்சனத்தை பிரசுரித்திருந்தோம்.*

*இந்த விமர்சனத்துக்கு எஸ். அன்ரன் அவர்கள் “பதச்சோறா? துளிநஞ்சா?” என்ற தலைப்பில் 13-08-2004 அன்றைய வெள்ளிநாத இதழில் விசனம் ஒன்றை எழுதியிருந்தார். அதனையும் நாம் பிரசுரித்திருந்தோம்.*

*தொடர்ந்து பதிவுகள் நூலின் ஆசிரியர் அ.யேசுராசா அவர்கள் எஸ். அன்ரனின் விசனத்துக்கு “ஒரு விசனம் பற்றிய பதிவுகள்” என்ற தலைப்பில் எமக்கு அனுப்பியுள்ள அவரின் பதிவுகளையும் இங்கு பிரசுரிக்கிறோம்.*

*“பதிவுகள்” நூல் தொடர்பான விமர்சனத்துக்கு எஸ். அன்ரனால் எழுதப்பட்ட விசனத்தில் இந்த விடயத்துக்கு அப்பால் எழுதப்பட்ட சில விடயங்களை நீக்கியிருந்தோம்.*

*அதே போன்று விமர்சனத்துக்கு எழுதப்பட்டுள்ள பதிவுகளிலும் இந்த விடயத்துக்கு அப்பால் உள்ள சில விடயங்களையும், ஊகங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட சில விடயங்களையும் நீக்கியுள்ளோம்.*

*நாம் கருத்து ரீதியிலான விடயங்களுக்குத் தான் தளத்தைக் கொடுக்குறோமேயொழிய தனிமனித மோதல்களுக்கல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*“நன்றி”*

*ஆசிரியர்,*
*வெள்ளிநாதம்.*

# “பதிவுகள்” நூல் தொடர்பான ஒரு விசனம் பற்றிய பதிவுகள்!

பதச்சோறா? துளிநஞ்சா? விமர்சனத்திற்கு ஒரு விசனம் என்ற தலைப்பில், எஸ்.அன்ரன் என்ற பெயரில் எழுதப்பட்டு, 13-19.08.2004 ‘வெள்ளிநாதத்தில்’ வெளிவந்த கட்டுரை தொடர்பான எனது கருத்துக்களைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

இக்கட்டுரையை எழுதியவரின் அடிப்படை நோக்கம் சரி - பிழைகளைப் பரிசீலனைசெய்வது என்பதை விட எனக்கு ‘அடி கொடுப்பதே’ என்பது, கட்டுரையில் வெளிப்படும் ஆக்ரோஷத்திலிருந்தும் கிண்டல்களிலிருந்தும் தெரிகிறது. எஸ்.அன்ரன் என்பது ஒரு புனை பெயராக இருக்கலாம். 13.08.2004 ஆம் திகதியிட்டு ஓர் அஞ்சலட்டை எனக்கு வந்தது, அதில்

இந்த ‘அடி’ போதுமா?

- கிமன்

என்று ஒரு வரிமட்டுமே எழுதப்பட்டுள்ளது.

01. “இவ்வளவையும் ஏன எழுத வேண்டி வந்ததென்றால், கடந்த மாதம் 23-29 திகதியில் வெள்ளிநாதத்தில் பிரசுரமான மகிழ் என்பவர் எழுதிய ‘பதிவுகள்’ என்ற நூலின் மதிப்புரை(?) யைப் படித்துவிட்டுப் பிரமித்துப்போனேன்” என்று எஸ்.அன்ரன் எழுதியிருப்பது தவறானது. ஏதோ ஜுலை மாதம் (கடந்த மாதம்) வந்த ஒரு கட்டுரைக்குப் பதிலளிப்பது போன்ற தோற்றத்தைத் தர முயல்கிறார்; ஆனால், உண்மையில் ‘மகிழ்’ எழுதிய கட்டுரை மூன்றரை மாதங்களின் முன், 30-06-05-2004 இல் வெளியாகியது.

02. டானியல் அன்ரனி ‘மாவ்கோஸ்கி’ எனப்பிழையாக உச்சரித்ததைச் ‘சோழன்’ குறிப்பிடுவதைத்தான் நான் சுவாரஸ்யமானதெனக் குறிப்பிடுகிறேன் என்பது சரியல்ல. தற்கொலை செய்து இறந்த மாயாகோவ்ஷ்கியை இயற்கை மரணமடைந்ததாக அவர் சொன்னதைப் பதிவு செய்வதே எனது நோக்கம். எஸ். அன்ரன் மேற்கோளாகத் தந்துள்ள “....ஆயினும் டானியல் அன்ரனி கருத்துரைக்கையில்” என்பதன் மேலுள்ள வரிகளையும் சேர்த்துப் பார்த்தால் இதனைப்புரியலாம். அவை வருமாறு!

“மாயாகோவ்ஸ்கியின் தற்கொலை பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுவதை, ரஷ்ய இலக்கியத்தில் ஈடுபாடுள்ளோர் அறிந்திருப்பர். காதல் தோல்வியினால் தற்கொலை செய்தார் என்ற ஒரு கருத்தும், தமது காலத்தில் நிலவிய இலக்கிய சர்வாதிகாரப் போக்குகளில் அடைந்திருந்த கசப்பினாலேயே தற்கொலை செய்தார் என்ற பிறிதொரு கருத்துமே அவையாகும். அவர் தற்கொலை செய்தார் என்பதில் கருத்துவேறுபாடே இல்லை”

இறுதிப்பகுதியில், டானியல் அன்ரனி வெளியிட்ட ‘சமர்’ இதழில் வெளிவந்த, வ.ஐ.ச. ஜெயபாலனின் ‘மாயாகோஸ்கியும் நானும்’ என்ற கவிதையிற் கூட அவர் தற்கொலை செய்தார் என்ற குறிப்பு வருவதையும் சுட்டிக் காட்டியுள்ளேன். அந்த வரிகள் வருமாறு:-

“எனினும் அந்தக் கவிஞனைப்போல
காதல் இழப்பைச் சகிக்க ஒண்ணாது
வாழ்வை மாய்த்திட நினைப்பது மில்லோம்”

‘மாவ்கோஸ்கி’ எனச் சொன்னதைக் குறிப்பிட்டதற்காக “எப்படியிருக்கிறது பதிவு செய்தவரின் பண்பாட்டு ரசனை மட்டம்?” என எஸ்.அன்ரன் கிண்டலாகக் கேட்கிறார்; ஆனால், நான் எழுத்தாளர் இருவரின் பெயர்களைப் பிழையாகக் குறிப்பிட்டுள்ளதாகச் சொல்லிக் கிண்டல் செய்துள்ளார்! “எப்படியிருக்கிறது அவரின் பண்பாட்டு, ரசனை மட்டம்?” என நானும் கேட்கலாமா?

இறந்து போய்விட்ட டானியல் அன்ரனியை [illegible]ப்போது நான் ‘கிண்டல்’ செய்து[illegible] தோற்றத்தைப் புதிய வாசகனிடம் பதித்து வெறுப்பூட்டவும் முயன்றுள்ளார். ஆனால், அந்தப் பதிவு ‘அலை’ இதழில் (1988)- டானியல் அன்ரனி உயிருடன் இருந்தவேளையில் பிரசுரமானது.

சரி இவ்வாறான தோற்றத்தைக் காட்ட முயல்பவர், பிறரின் ஓவியங்களைத் திருடியவரென- இறந்து போய்விட்ட ஓவியர் மாற்குவைப் பற்றிக் குறிப்பிடுவதை என்னவென்பது?

03. பிறமொழிப் பெயர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் வழியாகவே அறியப்படுகின்றன. ''Tolstoy'' என ஆங்கிலத்தில் எழுதப்படும் ரஷ்ய எழுத்தாளரின் பெயர் தமிழில்- றொல்ஸ்ரோய், ரோல்ஸ்ரோய், டால்ஸ்டாய் என எழுதப்படுவது பரவலாக வழக்கிலுள்ளது. நான் ‘ரோல்ஸ்ரோய்’ என எழுதியுள்ளேன் (பக்.51)

ஆனால், என்னை ‘அடிக்கவேண்டும்’ என்ற ஆக்ரோஷம் அவரது கண்களை மறைத்துவிட்டதால், “றோல்ஸ்ரோய்” எனநான் எழுதியுள்ளதாகப் பிழையாகக் குறிப்பிட்டுவிட்டு, “றோல்ஸ்ரோய் என்றால் என்ன, ‘றோல்ஸ் ரோய்ஸ்’ என்கிற காரா?” எனக் கிண்டலடிக்கிறார்!

“.... ‘குல்சாரி’ போன்ற நவீனங்களை எழுதிய அவரின் பெயர் ஐத்மாத்தவ் என்றுதான் குறிப்பிடப்படுகிறது.” என்கிறார். ஆனால், வேறு மாதிரியும் அப்பெயர் குறிப்பிடப்படுகிறது. உதாரணமாக, சோவியத் செய்திப்பிரிவிலிருந்து பெற்று ‘மல்லிகை’ இதழ் வெளியிட்டுள்ள இரண்டு கட்டுரைகளில் அப் பெயர் 'அய்த்மதோவ்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (மல்லிகை, செப்ரெம்பர் 1973, ஏப்ரல்-1977)

04. என்னைத் தாக்க வேண்டும் என்பதற்காக, நான் மதிப்புடன் பாராட்டி எழுதியுள்ள ஓவியர் மாற்கு அவர்களும் இழிவுபடுத்தப்பட்டிருப்பது, கவலையைத் தருகிறது. ஈழத் தமிழரிடையே நவீன ஓவியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில்- குறிப்பாக எண்பதுகள், தொண்ணூறுகளில் அவர் தீவிரமாகச் செயற்பட்டவர் இளைய தலைமுறையினரிற்கு ஓவியப்பயிற்சி அளித்ததோடு, ஓவியக்கண்காட்சிகள் பலவற்றை ஒழுங்கு செய்வதிலும் உழைத்தவர். ரமணி, கே.கிருஷ்ணராஜா, அருந்ததி, வாசுகி, ஜக்குலின், சுகுணா, நிர்மலா போன்றவர்கள் அவரிடம் பயின்றவர்கள்தான். இளந்திரையன், செம்மலையான், ஈழப்பிரியா முதலிய போராளி ஓவியர்களையும் உருவாக்கியவர்.

இராசரத்தினம், மு.கனகசபை, கனக சபாபதி.அ.இராசையா, ஆசை இராசையா

(23ஆம் பக்கம் பார்க்க)

**அ.யேசுராசா**




## எங்கும் உள்ள இறைவன்

நாமிருப்போம் வீட்டிலே
வீடிருக்கும் தெருவிலே
தெருவிருக்கும் ஊரிலே
ஊரிருக்கும் நாட்டிலே
நாடிருக்குல் கண்டத்தில்
கண்ட முண்டாம் பூமியில்
பூமி உண்டாம் அண்டத்தில்
அண்டங் கோடி அண்டமாம்
அங்கு மெங்கும் இறைவனாம்
அனைத்துமே அவன் ஒருவனாம்!

## பகைமை பாராட்டாதீர்கள்



கீதாவும் சுரபியும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். ஒரு நாள் இருவரும் விளையாடிக் கொண்டிருக்கும்போது ஏற்பட்ட சிறு முரண்பாட்டால் இருவரும் ஒருவரை ஒருவர் கோபித்துக்கொண்டனர். இவர்கள் ஒருவரை ஒருவர் கோபித்துக்கொண்டு இருக்கும் போது வகுப்பறை மாணவர்கள் எல்லோரும் கடற்கரைக்கு போக விரும்பி ஆசிரியரிடம் அனுமதி கேட்கும்படி கீதாவை வற்புறுத்தினார்கள். கீதாவோ தான் வரவில்லை. ஆனால் அனுமதி கேட்டுத் தருகிறேன் என்றாள். சகமாணவர்களோ ஒத்துக் கொள்ளவில்லை. இல்லை... இல்லை நீ வராமல் ஏன் நாம்போக வேண்டும். நாம் ஒருவரும் போகவில்லை. என்று மறுத்தனர். அப்போது சுரபி கிண்டலாக எங்களுடன் கோபம் என்றால் கடலோடையும் கோபமோ என்றாள். கீதாவுக்கு கோபம் வந்ததும். ஆசிரியரிடம் சென்று கடலுக்கு போவதற்கு அனுமதி பெற்றாள். ஆசிரியரும் அனுமதி கொடுத்து கீதாவையே எல்லோரையும் கூட்டிச் செல்லும்படி சொன்னார்.

எல்லோரும் தயாரானார்கள். கடற்கரைக்கு சென்றதும். சோபா பயந்தவள் கரையிலே நின்று விளையாடிக்கொண்டு நின்றாள். எல்லோரும் நீந்தி நீண்டதூரம் சென்றுவிட்டார்கள். கீதாவோ நன்றாக நீந்துவாள் என்ற துணிவில் எல்லோரையும் தாண்டிச் சென்றுகொண்டிருந்தாள். இதை சோபா பார்த்துக் கொண்டு நின்றாள். திடீரென கீதாவை அலைஇழுப் பதைக் கண்டு கத்தினாள். கீதாவோ அலையில் சிக்கி தத்தளித்துக்கொண்டிருந்தாள். சோபாவின் கத்திய சத்தத்தைக்கேட்ட சுரபி கீதாவை அலை இழுப் பதைக்கண்டு வேகமாக நீந்திச் சென்று கீதாவை எட்டிப் பிடித்தாள். கீதாவை காப்பாற்றிக்கொண்டு கரைக்கு வந்தாள். அப்போது சக மாணவர்கள் எல்லோரும கீதாவை ஏசினார்கள். கீதா தான் தனியே சென்றது பிழை என்று ஒத்துக் கொண்டதோடு தன்னுடன் கோபமாயிருந்தாலும் சுரபி தன்னைக் காப்பாற்றிவிட்டதை எண்ணி அவளைப் புரிந்துகொண்டாள். அன்று சுரபி தன்னுடன் பகைமை பாராட்டியிருந்தால் தான் உயிர் பிழைத்திருக்கமுடியாது என்பதை உணர்ந்து எந்தச் சிறு ஆபத்து என்றாலும் பகைமை காட்டக்கூடாது என்று எண்ணி சுரபிக்கு தனது நன்றியைத் தெரிவித்தாள். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஆசிரியரிடம் நடந்ததைக்கூறினார்கள்.

ஈழவிழி

## சொற்சிலம்பம் - 52

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பு | ர் | ஜ | ள | ற | ஏ | டு |
| ரு | கா | றி | ர் | கௌ | சி | த் |
| அ | ங் | ல் | ஆ | பி | எ | ட் |
| த | றீ | சீ | சு | உ | மூ | யி |
| ண | ஆ | ம் | த் | ம | சு | த |
| ம் | கை | டி | இ | ப் | ஈ | தே |
| வு | பூ | வ | ஓ | ச | வி | ளை |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 50 இன் விடைகள்

01. அ,ஆ,இ,ஈ,உ.

02. கார்த்திகைப் பூ.

### சொற்சிலம்பம் - 50 இன் பரிசுக்குரியவர்

வை.கோகுலதரன்,
தரம் -6D,
ஹாட்லிக் கல்லூரி.

### சொற்சிலம்பம் - 50 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. த.தினேஷ், கற்சிலைமடு, ஓட்டுசுட்டான்.
02. சு.நளினி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
03. எஸ்.ஜறினா, மன்னார், பெரியகமம்.
04. யோ. கோபிகா, தரம்-01, யா/வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.
05. அ.குந்தவை, மு/மல்லாவி மத்திய கல்லூரி, மல்லாவி.
06. ந.ஜெகதீஸ்வரி, 54 D8 உருத்திரபுரம், கிளிநொச்சி.
07. மா.விஜயகுமார், மு/பாரதி வித்தியாலயம் விசுவமடு,
08. க.தனுஜிகா, தரம் - 03, இ/ம.வி.

01. இலங்கையில் காணப்படும் உப்பளங்கள் இரண்டு?

01) ........................................

02) ........................................

02. சிறிய இதயம் உள்ள மிருகம்?

01) ........................................

பெயர் :- ........................................

முகவரி :- ........................................

சொற்சிலம்பம்-52
ஈழநாதம்.
யாழ் சாலை.
கிளிநொச்சி.

## நகைச்சுவை



"எதுக்கு தூங்கிற போது ரெயின் கோட்டை மாட்டிக்கொண்டு தூங்கிறீங்க?"

"தினமும் மழையில் நனைகிற மாதிரி கனவு வருதே!"

## ஒரே மாதிரியான இரண்டு பந்துகள் எவை?




## எலியாரின் வண்டில்

### பகுதி-02



# மன்னார், இலுப்பக்கடவை மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**பயணம்-02**

**மன்னார்** மாவட்டத்தின் அடம்பன் பிரதேசத்திற்குட்பட்ட இலுப்பக்கடவை கிராமசேவையாளர் பிரிவிலும் அதன் அயல்கிராமங்களிலும் பல்வேறு குறைபாடுகள் நிலவுவதாக கேள்வியுற்று இப்பகுதி மக்களை சந்திக்கும் நோக்குடன் இப்பிரதேசத்திற்குச் சென்றோம். அங்கே முக்கியமாக குடிநீர், கல்வி, மருத்துவம் என்பன இம்மக்களின் வாழ்க்கையில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துவதாக இப்பகுதிமக்கள் கூறுகின்றனர். அதில் சில மக்களின் கருத்துக்களை இங்கே தருகின்றோம்.

இலுப்பக்கடவையைச் சேர்ந்த நாகேந்திரன் அருநந்தி “நாங்கள் விடத்தல்தீவில் இருந்து இடம்பெயர்ந்து இஞ்ச வந்திருக்கிறம். எங்களுக்கு விடத்தல்தீவில காணி இல்ல. எங்களுக்கு இஞ்ச காணி தந்திருக்கினம். அதில போய் இருக்கிறதுக்கு வசதியில்லாம இருக்கு. வீடு கட்டித்தாறன் எண்டு சொன்னவையள் இன்னும் கட்டித்தரேல்ல. எங்களுக்கு வீடு மேய கிடுகு தாறவை இந்த வரியம் தரேல்ல.

மற்றது இஞ்ச தண்ணிப் பிரச்சினைதான் பெரிய பிரச்சினையாக இருக்கு. எங்களுக்கு பௌசில தண்ணி கொண்டுவந்து ஒரு குடம் தண்ணி இரண்டு ரூபாப்படி தாறவையள் இரண்டு, மூண்டு நாளைக்கொருக்காத்தான் பௌசர் தண்ணி வரும். இருந்தாலும் எங்கட தேவையை முழுமையா பூர்த்திசெய்ய இந்தத் தண்ணி கானாது. அதோட தண்ணி எடுத்து வைக்க பாத்திரங்களும் பற்றாக்குறையாத்தான் இருக்கு. சில நேரம் எடுத்து வைக்கிறதண்ணி முடிஞ்சுபோனா இதில இருக்கிற சவர் தண்ணியத்தான் குடிக்கிறநாங்க இதால வருத்தங்களும் வருது. குடிக்கிறதுக்கும், பாத்திரங்கள் கழுவுவதற்கும் எல்லாம் அந்தச் சந்தியில இருக்கிற குழாய்க்கிணறுக்குத்தான் போகோணும். அதிலயும் காலையில சரியான சனம். கியூவில நிண்டுதான் தண்ணி எடுக்கோணும்.”

என்கிறார் இலுப்பக்கடவை முருகன் கோவிலடியை சேர்ந்த நாகேந்திரன் அருநந்தி. அவருடைய வீடு வேயப்படாமல் ஒரு கிழிந்த கூரை விரிப்பால் பாதுகாக்கப்பட்டிருந்தது. வீட்டின் முற்றத்தில் பல நீர் கொள்கலன்கள் வெறுமையாய் காணப்பட்டன. இவரின் வீட்டின் அண்மையாக கட்டடம்ஒன்று கட்டப்பட்டிருந்தது. என்ன தேவையின் நிமிர்த்தம் கட்டப்பட்டுள்ளது எனக் கேட்டோம்.


திறக்கப்படாத ஆரம்ப சுகாதார நிலையம்

“இது ஆசுப்பத்திரி கட்டியிருக்கினம் இன்னும் திறப்பு விழா செய்யேல்ல. நாங்க ஏன் திறக்கேல்ல எண்டு கட்டினவையளிட்ட கேட்டம். அவையள் தளபாடம் இல்லையெண்டு சொன்னவை. இஞ்ச மருந்து குடுக்கிறபிள்ளையள் ஒருக்கா வந்து பால் காச்சினவை. ஆனா இன்னும் இதில மருந்து குடுக்கேல்ல. நாங்க வருத்தம் துன்பமெண்டா முழங்காவிலுக்கோ இல்லாட்டி பள்ளமடுவுக்கோதான் போறநாங்க. எங்களுக்கு இதை திறந்து மருந்து குடுக்கத் தொடங்கிட்டினமெண்டா பெரியவசதியாயிருக்கும்.

இஞ்ச கிளினிக்கும், கிழமை கிழமை மருந்து குடுக்கிற ஆக்களும் வந்து சந்தியில உள்ள ஒரு கட்டடத்தில வைச்சுத்தான் குடுக்கிறவை” என்றார் அவர்.



தொடர்ந்து நாம் இதே இடத்தை சேர்ந்த நாகேந்திரம் கலா(சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு செயலாளர்) அவர்களை சந்தித்து கேட்டோம்.

“இஞ்ச தண்ணிதான் முக்கியபிரச்சினை நாங்களும் அதுக்கு நிரந்தரமா ஒரு தீர்வுகண்டுதாங்கோ என எல்லோரிட்டையும் கேட்டும் எந்தப்பதிலுமில்ல. எல்லோரும் செய்துதரலாம் எண்டுதான் சொல்லுகினம். ஒண்டும் சரிவரேல்ல.

பௌசரில தண்ணி கொண்டு வந்து தருகினம். ஒருகுடம் தண்ணி ரெண்டு ரூபாப் படிதான் வாங்கி வைக்கிறனாங்க. அது பற்றாக்குறையாத்தான் இருக்குது. இந்த ரெண்டு ரூபா ரைக்ரருக்கு டீசல் செலவா வாங்கினம். சிலநேரம் றைவருக்கு வருத்தம் இல்லாட்டி பௌசர் பழுதாப் போனா தண்ணி வராம இருக்கும். இப்படி பௌசர்வராட்டி சனம் இந்த சவர்த்தண்ணியத்தான் குடிக்கிங்கள் இதால இஞ்ச கொலரா எல்லாம் வந்திருக்கிது.

கொஞ்சக்காலத்துக்கு முதல் கொலரா வருத்தம் வந்து ஆறுபேர் வரை இஞ்ச செத்துப்போட்டினம், இப்பவும் பிள்ளையளுக்கு வயித்துவலி எல்லாம் வரும். குடிக்கிறதுக்கும் பாத்திரங்கள் கழுவுறதுக்கும் இஞ்ச பொதுக்கிணறுகள் இருக்கு. இந்த கிணறுகள் எல்லாம் சவர் தண்ணி தான்” என்றார்.

“இஞ்ச கட்டின ஆசுப்பத்திரியே இன்னும் திறக்கேல்ல கட்டு வேலையெல்லாம் முடிஞ்சு ஆறு மாதமா போட்டுது. நாங்கள் ஏன்திறக்கேல்ல எண்டு கேட்டனாங்க. தளபாட பிரச்சினை எண்டு ஒரு சிலர் சொல்லினம். சிலர் சொல்லினம் ஒதுக்குப்புறமா பொருத்தமில்லாத இடத்தில கட்டியிருக்கெண்டினம். அதாலதான் திறக்கேல்ல எண்டு சொல்லினம். உண்மையான பிரச்சினை என்னெண்டு தெரி

**அருள்**

யேல. இந்த ஆசுப்பத்திரி திறந்து இஞ்ச எந்தநாளும் மருந்து எடுக்கக் கூடியமாதிரி இருந்தா சனத்துக்கெல்லாம் நல்ல உதவியாயிருக்கும்.

அதோட எங்கட பள்ளிக்கூடத்தில பாருங்கோ... ஆங்கில பாடம் நடக்கிறேல்ல ஏனெண்டு கேட்டா ஆங்கில ஆசிரியர் இல்லையெண்டு சொல்லினம். இப்பவொரு 7-8 வருசமா ஆங்கில பாடம் நடக்கிறேல்ல நாங்க கல்விப்பணிப்பாளரிட்ட கேட்டம். அவர் சொன்னார், உங்கட கிராமத்தில “ஓ.எல்” பாடத்தில “சீ” எடுத்த யாரும் இருந்தா சொல் லுங்கோ அவையளக் கொண்டு



ஒழுங்கு செய்யிறம் எங்களிட்ட ஆசிரியர் இல்லையெண்டு இதாலயே இந்த பிள்ளையிண்ட படிப்பு பாழாப் போகுது.

அதோட இஞ்ச மேலதிக வகுப்பொண்டும் வைக்கிறேல்ல ரியூசன்கள் இல்ல, ஆசிரியர் பற்றாக்குறையால பாடங்கள் ஒழுங்கில்ல. இப்படிப் படிச்சா எப்பிடி பிள்ளையளிண்ட படிப்பு வளரும்! இந்தப் பள்ளிக்கூடத்தில நாணூறுக்கு மேல பிள்ளையள் படிக்கினம் ஆசிரியர்களுள் 14 பேர்தான் இருக்கினம். இதிலயும் நாலு பேரிட்ட தொண்டராத்தான் படிச்சு குடுக்கினம்.

நாங்க அதிபரிட்ட கேட்டம். பின்நேரத்தில வகுப்பு வையுங்கோ எண்டு இன்னும் வகுப்பு வைக்க தொடங்கேல்ல. இதைக் கொஞ்சம் வேகமா தொடங்கினா எங்கட பிள்ளையள் படிக்கப் பெரிய உதவியாயிருக்கும். அதோட ஆங்கில பாடத்திற்கு ஒரு ஆசிரியரை எங்கட பள்ளிக்கூடத்துக்கு நியமிச்சு இந்தப் பிள்ளையளிண்ட கல்விக்கு உதவவேண்டுமெண்டு கல்விப்பணிப்பாளரிட்ட கேட்டுக்கொள்ளுறம். என்றார்.

இவர்களிடம் இருந்து விடை பெற்று இலுப்பக்கடவை படகு துறைக்கு சென்றோம். அங்கே இடம் பெயர்ந்த மீனவக்குடும்பங்கள் சிறிய குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் நவாலியை சொந்தஇடமாகக் கொண்டவர்கள். ஒரு வயோதிப பெண்மணி ஒருவரிடம் கேட்டோம். நீங்கள் உங்களின் இடத்திற்குப் போகவில்லையா என அதற்கு அவர்

“நாங்கள் நவாலி கோவில்ல ஆமி குண்டுபோட்டநேரம் வெளிக்கிட்டு வந்து இஞ்ச இருக்கிறம். இனி நாங்க அங்க போகமாட்டம்” என்றார்.



இம்மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் நிலை தொடர்பாகவும், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் மீனவர் சங்கத்தலைவர் கார்த்திகேசு செல்வகுமார் அவர்களிடம் கேட்டோம்.



“நாங்கள் இப் பகுதியில காணிகள் இல்லாது இருக்கும் மீனவர்களுக்குக் காணிகள் வழங்க கிராமசேவையாளர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளோம். என்றும் இவர்கள் திட்டமிட்டு குடியமர்த்தப்பட நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் படகு துறைப்பகுதியிலுள்ள ஒரு சிலர் தங்களின் தொழில்வசதியை கவனத்தில் கொண்டு காணிவழங்கப்படுகின்ற இடத்திற்கு செல்லமறுப்புத் தெரிவிப்பதாகவும். தாம் இவ்விடயம் தொடர்பாக பல்வேறு தரப்பினருடனும் ஆலோசித்துவருவதாகவும் கூறினார். அதன்பின்னர் இப்பிரதேச நலன்விரும்பியும் கமக்கார அமைப்பின் தலைவரும் சமாதான நீதவானுமாகிய சோ. பாலசிங்கம் அவர்களை சந்தித்தோம். அவரிடம் இப்பிரதேச நிலவரங்கள் தொடர்பாகக் கேட்டோம்.

“இப்பகுதியில உள்ள குறைபாடுகள் பலவற்றை சம்பந்தப்பட்டோரின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று கூறியதுடன்; மன்னார் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் நடைபெறும் புனரமைப்புப் பணிகள் இப்பகுதியில நடைபெறுவது குறைவாகவே உள்ளது. என்றும் மன்னார் - பூநகரி A-36 வீதி புனரமைப்புத் தொடர்பாக அரச அதிபர் உட்பட பல்வேறு தரப்பினருடன் கதைத்ததுடன் பல கூட்டங்களிலும் இதனை வலிறுத்தியபோதும் இவ்வேலைகள் நடைபெறாதது மிகவும் கவலைதரும் விடயமென்றும் கூறினார்.

அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சில B தரத்தையுடைய வீதி தாரினால் செப்பனிடப்பட்டுள்ளபோதும் A தரம் கொண்ட மன்னார் - பூநகரி வீதி கிரவல் மாத்திரம் போடப்பட்டு கைவிடப்பட்டுள்ளதாகக் கூறினார். அத்துடன் அரசாங்க அதிபரிடம் இவ் வீதியினால் பயணிகள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றி கூறப்பட்டும் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் இதையிட்டு தான் கவலையடைவதாகவும் தயவு கூர்ந்து இவ்வீதிக்கு தார் கொண்டு செப்பனிட அரசாங்க அதிபர் ஆவண செய்யவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த இலுப்பக்கடவை கிராம சேவையாளர் பிரிவில் சுமார் 600க்கு மேற்பட்ட நிரந்தர குடும்பங்களுக்கும் பல நூற்றுக்கணக்கான இடம் பெயர்ந்த குடும்பங்களும் வசித்து வருகின்றனர்.

இதில் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் மக்களின் வீடுகள் வேயப்படாமல் காணப்படுகின்றது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

# வீரன் கூறும் வேதம்

போராடும் பூமியொன்றிலிருந்து பிரகாசிக்கத்துடிக்கிறார் உடல் ஊனமுற்ற ஒரு விளையாட்டு வீரர்.

அவர்தான் ஹசம் அசாம். இஸ்ரேல் பலஸ்தீன மோதல் தணியாத ஒரு நெருப்பாக தொடரும் நிலையில் அங்கே ஒரு அகதி முகாமிலிருக்கும் இந்த இருபத்து ஒன்பது வயதுக்காரரான ஹசம் அசாம் தனது மூன்று வயதில் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர்.

இப்போது அவரின் நகர்வுகள் எல்லாம் சக்கரநாற்காலியில் தான். இந்த வீரர் எதென்ஸில் நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டி களை தொடர்ந்து ஊனமுற்றோருக் காக எதென்சில் நடை பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்காகத் தயாராகி வருகிறார்.

இந்தப் போட்டியில் உலகம் முழுவதுமிருந்தும் நூற்று நாற்பத்தைந்து நாடுகளைச் சேர்ந்த நாலாயிரம் வீர வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.


கடந்த 2002ல் சிட்னியில் நடந்த பாராலிம்பிக் போட்டியில் குண்டு எறிதல் பிரிவில் வென்ற வெண்கலத்துடன் ஹசாம் அசம்.

இந்தப் போட்டியில் தான் ஹசம் அசாம் குண்டு எறிதல் போட்டியில் தங்கம் வெல்ல வேண்டுமென தீவிர பயிற்சியிலிறங்கியுள்ளார்.

இவர் 2000ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற போட்டியில் ஏற்கெனவே வெங்கலம் வென்றுள்ளார். இந்த வீரரின் மனவுறுதியைப் பாருங்களேன் பல தடைகளை தகர்த்து எப்படி உங்களால் சாதிக்க முடிகிறது என கேட்டதற்கு அவர் அளிக்கும்பதில்.

"பலஸ்தீனம் பதக்கம் வெல்ல முடியும் என்பதை உலகிற்கு நிரூபித்து விட்டேன். எனது உடலில் ஊனமே தவிர மூளையில் இல்லை. எனது குறையை காட்டிலும் மனம் வலிமை மிக்கது. இதுதான் எனது பலம்" என்கிறார்.

ஹசம் அசாம் கூறும் வேதம் எங்கள் மண்ணிற்கும் எங்கள் வீரர்களுக்கும் பொருந்தும் அல்லவா?


ஒலிம்பிக் தொழிற்சாலை?

# ஐம்பதில் வளைக்காமல் ஐந்தில் வளைக்கிறது சீனா

என்ன படத்தைப் பார்க்க வேறு ஏதாவது நினைவுக்கு வருகிறதா?

இவர்கள் எந்தத் தப்புத் தண்டாவிலும் ஈடுபட்டு தண்டனை அனுபவிக்கவும் இல்லை.

குட்டிப்பயல்களின் சுட்டித்தனங்களில் ஒன்றாய் இப்படி தொங்கவும் இல்லை.

இவர்கள் செய்யும் தப்பு தங்கள் நாட்டில் அடுத்த ஒலிம்பிக் போட்டியை நடாத்த தயாரானது தான்.

அதன் விளைவு 2008 இல் பீஜிங்கில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல வேண்டும் என்பதற்காக நான்கு வயது முதல் பத்து வயதுள்ள சின்ன வீரர்களை தேடிப்பிடித்து இப்படி பயிற்சி கொடுக்கிறது சீனா.

சீனா ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்ற பழமொழியை கெட்டியாய் பிடித்துக் கொண்டது போலுள்ளது.

# மினி உலகக்கிண்ணம் யாருக்கு சவால் நிறைந்தது?

உலகில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 11 நாடுகளுடன் டெஸ்ட் அந்தஸ்து பெறாத அமெரிக்கா உட்பட 12 நாடுகள் பங்கேற்கும் 1.C.C மினி உலகக் கிண்ணத்துக்கான ஒரு நாள் போட்டிகள் இங்கிலாந்தின் ஓவல், எடிக் பஸ்ரன், நோங்பவல் ஆகிய மைதானங்களில் ஆரம்பமாகவுள்ளன.

போட்டிகளில் பங்கேற்கும் அணிகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகளில் ஈடுபடும். குழுநிலையில் அதிக புள்ளிகளைப் பெறும் அணி அரையிறுதிக்குத் தகுதி பெறும். அரையிறுதியில் தகுதி பெறும் இருஅணிகள் இறுதிப் போட்டியில் சந்திக்கும். இப்போட்டித் தொடரில் எந்த அணி வென்றாலும், தோற்றாலும் அது அரிய செயல் என்றே கொள்ளலாம். ஆயினும் ஒரே ஒரு அணிக்கு மட்டும் இது சவால் நிறைந்த போட்டி என்பது மறுக்க முடியாதது. அவ்வணி இருமுறை உலகக் கிண்ணத்தை தொடர்ந்து கைப்பற்றியுள்ள அவுஸ்திரேலிய அணியாகும்.

தற்போது அவ்வணி 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியபின் வலுவான நிலையிலிருப்பதுடன் தர வரிசையில் டெஸ்ட் போட்டிகளிலும் ஒருநாள் போட்டிகளிலும் முதலாம் இடத்[illegible] பெற்றிருக்கி[illegible]

எனினும் 2000 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற மேற்படி மினிஉலகக் கிண்ண அரையிறுதி யில் சிறிலங்கா விடம் தோல்விய டைந்து வெளியேறியது. இது வரை நடைபெற்ற மூன்று போட்டிகளில் அது கிண்ணத்தைத் தவற விட்டுள்ளது.

அந்தச் சந்தர்ப்பங்கள் அதற்கு ஒருபாரிய தாக்கத்தை ஏற்படுத்தா விட்டாலும் இன்று ஆரம்பமாகும் தொடரை அது கைப்பற்றவேண்டிய கட்டாய நிலைக்கே தள்ளப்பட்டுள்ளது.

1998,2000ஆம் ஆண்டில் நடைபெற்றவை நொக் அவுட் முறையிலான போட்டி என்பதால் முதலாவது போட்டியிலேயே இந்தியா விடம் தோல்வியடைந்து நாடு திரும் நேரிட்டது.

ஆயினும் 2002 அரையிறுதிவரை முன்னேறினாலும் அரையிறுதியில் சிறிலங்கா அணியிடம் தோல்வியைத்தழுவியது. அதைக்கூட சாதாரண நிகழ்வாக அன்று அவுஸ்திரேலியா கருதியிருப்பினும் இன்று அவ்வணி போட்டிகளில் தோல்வியைத் தழுவுவது சகிக்க முடியாத ஒன்றாகும்.

காரணம் அவுஸ்திரேலியா அண்மைக்காலமாக மிகவும் சிறப்பாக விளையாடிவருகின்றது. 50 ஓவர்களைக்கொண்ட ஒருநாள் போட்டி ஒன்றில் 50 ஓட்டங்களை அவ்வணி எடுக்க நேர்ந்தாலும் 49 ஓட்டங்களிலாவது எதிரணியை வீழ்த்தி வெற்றிபெறும் நுட்பத்தை அவ்வணி கொண்டுள்ளது.

எனவே உலகச் சாம்பியனான அவுஸ்திரேலிய அணிக்கு இத்தொடர் மிகுந்த சவால் நிறைந்ததாகும் என்பது தவறாகாது. அத்துடன் "பெரிய" அளவிலான உலகக் கிண்ணப்போட்டிகளை வென்று நாடு திரும்பிய அணிக்கு இந்த மினி உலகக் கிண்ணம் சவாலாக இருக்குமா?


அத்தபத்து


பொண்டிங்


வோகன்


கங்குலி

# சச்சினைத் தாக்கும் டெனிஸ் எல்போ

இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர் மினி உலகக் கோப்பையில் விளையாடுவாரா? விளையாடமாட்டாரா? என எங்கும் அவரின் இந்திய இரசிகர்கள் மட்டுமல்லாது உலகின் எல்லாப் பாகங்களிலும் பரந்து வாழும் சச்சினின் இரசிகர்களையும் எல்போ வியாதியால் சச்சின்டெண்டுல்கர் ஆசியக்கோப்பை தொடருக்குப்பின்னர் ஹொலண்ட் முத்தரப்புத் தொடர், இங்கிலாந்தில் நடைபெறும் நட்வெஸ்ட் தொடர் ஆகிய இரண்டு தொடரிலும் பங்கேற்கவில்லை.

முதுகுவலி, பாதத்தில் எலும்புமுறிவு, கைவிரலில் எலும்புமுறிவு,





இடுப்புப்பகுதியில்வலி என தொடர்ந்து இப்போது முழங்கையை பாதிக்கும் டெனிஸ் எல்போவில் நிற்கிறது.

ஏமாற்றுவதுபோல அவர் இங்கிலாந்தில் நடைபெறும் மினி உலக கோப்பை போட்டியில் விளையாட மாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் நடைபெற்ற இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளை கொண்ட ஒருநாள் தொடரில் இங்கிலாந்து அணி இந்திய அணியை படாதபாடு படுத்திவிட்டது.

இந்த நிலையில் இந்திய அணியின் தலைவர் சௌரவ்கங்குலி அணியில் சச்சின் டெண்டுல்கர் இல்லாதது குறித்து கவலையை தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் சாதனைகள் என்றவுடன் ஞாபகத்துக்கு வரும் சச்சின் டெண்டுல்கர் சாதனைகளை சந்தித்த அளவுக்கு வேதனைகளையும் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறார்.

இப்போது சச்சின் டெண்டுல்கரை அதிகம் வேதனைக்குள்ளாக்குவது 'டெனிஸ் எல்போ' என்கிறவியாதியாகும்.

இந்த டெனிஸ் எல்போவில் நிற்கிறது.

சச்சின் டெண்டுல்கருக்கு இந்த பாதிப்பு வருவதற்குக்காரணம் அவர் கிரிக்கெட் போட்டிகளில் ஏனைய வீரர்களை போலன்றி கணமான துடுப்பு மட்டைகளை பாவிப்பதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சச்சின் டெண்டுல்கரிற்கு கணமான துடுப்புமட்டைகளை பாவிக்கும் வழக்கம் சிறுவயது முதலே இருந்து வருகிறது.

கொஞ்சக் காலம் கணம் குறைந்த துடுப்பு மட்டைகளைப் பாவித்த சச்சின் பிரகாசிக்க முடியாதிருப்பதாகக்கருதி கணமான துடுப்பு மட்டையாக மாற்றிக்கொண்டார்.

பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக விளையாடிவரும் மூத்த வீரர் என்ற வகையிலும் சச்சின்சில நேரம் அவதியுறக் கூடும்.

எது எப்படியோ சச்சின் இல்லாத வெற்றிடத்தை கங்குலி குறிப்பிட்டுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

கடந்த காலங்களை விட இந்த வருடம் வன்னியில் மலேரியாவால் பாதிக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை ஆச்சரியம் தரும் வகையில் மிகவும் குறைந்துள்ளது. முன்பு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மட்டும் கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகையானோர் மலேரியாவால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் இம்முறை, கடந்த எட்டுமாதகாலத்தில் இருபத்தேழு பேருக்கே மலேரியா வந்துள்ளது.

அவ்வளவுக்கு மலேரியா துரிதமாக கட்டுப்பாட்டுக்குவந்துள்ளது.

யுத்தநாட்களில் ஒரு பக்கம் பொருளாதாரத்தடைகள், மறுபக்கம் இராணுவத்தாக்குதல்கள், குண்டு வீச்சு, ஷெல்லடிகள். இன்னொரு பக்கத்தில் இடப்பெயர்வுகளும் அகதிவாழ்க்கையும். அடுத்தபக்கத்தில் நோய் களும் மருந்துத்தட்டுப்பாடும். இவையெல்லாவற்றோடும் மருத்துவர் பற்றாக குறையும்.

எல்லாம் சூழ்ந்திருக்க வதைபட்ட நாட்களில் வெந்தவர் நாங்கள். தினந்தோறும் தீக்குளிப்புத்தான். (இப்போது மட்டும் அந்த நெருக்கடிகள் எல்லாம் தீர்ந்துவிட்டன என்று

நீரும் மலசலகூடமும் இதில் முக்கியமானவை.

மறுபக்கத்தில், சனங்கள் போசாக்கின்மையால் இன்னும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இது மலேரியா அவர்களைத்தாக்குவதற்கு இன்னுமின்னும் வசதியாக இருந்தது.

ஒருவருக்கு எட்டு, ஒன்பது தடவைகள் என்று மலேரியா திரும்பத்திரும்ப வந்து தாக்கியது. இது பலருக்குமான பொதுவான ஒரு விதி போல அன்று இருந்தது.

உடல் மெலிந்து, முகமொடுங்கி, உள்ளம் நடுங்கி ஆட்கள் கோலம் மாறியிருந்தார்கள். திரும்பத்திரும்ப மலேரியா வரும்போது அதைத்தாங்கும் வலிமை குறைந்து வருவது ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியது.

மறுபடியும் மறுபடியும் மலேரியா வருவதற்கு போசாக்கின்மை ஒரு காரணம் மலேரியா நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கைக்கு மருந்துகள் வராதிருந்தது இன்னொரு காரணம். அடுத்தது குளக்கரை, ஆற்றோரம், காட்டோரக் குடியிருப்புகளும் சுகாதார வசதியீனங்களும் தண்ணீர்ப் பிரச்சி

ஏற்படுத்தியிருந்தது மலேரியாவே.

மலேரியாவுக்குரிய மருந்துகளும் சிகிச்சைமுறையும் ஓரளவுக்கு நடந்தாலும் இதைத்தடுப்பதற்கு, அல்லது இதிலிருந்து தப்புவதற்கு பலரும் நாட்டுவைத்தியத்தை நாடியதையும் மறக்கமுடியாது. வேப்பம் பாணியிலிருந்து குடிநீர்வகைகள் வரையில் தமக்கு வசதியான, பொருத்தமான, அறிந்த வழிமுறைகளை ஒவ்வொருவரும் பின்பற்றினார்கள்.

எல்லோருடைய நோக்கமும் மலேரியாவின்பிடியிலிருந்து தப்புவது தான். அவ்வளவுக்கு ஆட்டிப்படைத்தது.

ஆனால், இன்றைய நாட்களில் மலேரியா கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதை இன்றும் நேர்த்தியாக்கி முழுக்கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவது அவசியம். அதாவது முற்றாக ஒழிக்கவேணும்.

இதில் மருத்துவத்துறையினருக்கு இருக்கின்ற பொறுப்பினளவு சனங்களுக்கும் உண்டு. அப்படி இருநதால் தான் மலேரியாவை முற்றாக ஒழித்துவிடமுடியும். இந்த அறிவை சமூகமட்டத்தில் சகலரும் உணரவேணும்; உணரவைக்கவும் வேணும்.

யுத்த நாட்களில் மருந்துத் தட்டுப்பாடும் மருத்துவர் பற்றாக்குறை

நடவடிக்கைகள் இதில் முக்கியம். அடுத்தது சரியான திட்டமிடுதலும் உரிய மருத்துவமும்- ஒழுங்கு படுத்தப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளும் அவதானிப்புச் செயற்பாடுகளும் கொலராவிலிருந்து மக்களைக் காப்பாற்றின. கொலராவையும் தடுத்தன. வன்னியில் கொலரா தடுக்கப்பட்டதையும் மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படாதிருந்ததையும் தென்னிலங்கை மருத்துவத்துறையினர் வியப்புடன் பேசியிருக்கிறார்கள்.

தார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி சுஜந்தன் மலேரியா தீவிரமாக வன்னியைத் தாக்கிய வேளையில் வன்னிப் பெரும்பகுதிகளில் பொறுப்பாகப் பணியாற்றியவர். மலேரியாத்தடைக்காக, மலேரியா ஒழிப்புக்காக தன்னுடைய ஊழியர்களோடு அவர் அந்நாட்களில் பல வசதியீனங்களோடு செய்தகாரியங்கள் ஏராளம். அவையே இன்று பலனாகியிருக்கின்றன.

'போதுமடா வன்னி வாழ்க்கை'

| ஆண்டு | பரிசோதனை செய்யப்பட்டோர் | நோய் பீடிக்கப்பட்டோர் | இறப்பு |
|---|---|---|---|
| 1997 | 85,231 | - 40811 | - 123 |
| 1998 | 88,561 | - 44575 | - 47 |
| 1999 | 1,34108 | - 60692 | - 32 |
| 2000 | 125,164 | - 47,326 | - 24 |
| 2001 | 78,997 | - 21,989 | - 12 |
| 2002 | 64,711 | - 11447 | - 04 |
| 2003 | 43,395 | - 1404 | - |
| 2004 | 23,466 | - 27 | - |

# மலேரியாவின் ஞாபகங்கள்

சொல்வதற்கில்லை. ஏதோ, சமாதானம் என்ற பெயரில் சில சமாளிப்புகள் மட்டும் நிகழ்கின்றன. அவ்வளவுதான். உண்மையில் எல்லாம் அப்படியே தீககுளிப்பு நிலையில்தானிருக்கின்றன)

மலேரியாவின் தாக்கம் வன்னியில் வழமையாகவே கூடுதல்தான்.

வன்னி அரசுகளின் வீழ்ச்சிக்கு பல சந்தர்ப்பங்களில் மலேரியாவும் காரணம் என்று வரலாற்றுக்குறிப்புகள் சொல்கின்றன. அநுராதபுரம் அரசின் வீழ்ச்சிக்குக்கூட மலேரியா காரணமாக இருந்திருக்கிறது.

ஒரு படைக்கு நிகரான தாக்கத்தைத் தரக்கூடிய அளவுக்கு மலேரியா இந்தப்பகுதிகளில் தொடர்ச்சியாக பலமுடனிருந்துள்ளது.

தொண்ணூறுகளில் - இடப்பெயர்வு மற்றும் யுத்தநெருக்கடி தீவிரமாகியிருந்த சூரியக்கதிர், சத்ஜெய, ஜெயசிக்குறு நாட்களில்தான் மலேரியா கூடுதல்வலுவோடு பலரைத் தாக்கியிருந்தது.

கடந்த நூற்றாண்டில் வன்னிப் பகுதியில் மலேரியாவால் தொகையானோர் தாக்கப்பட்டது அப்பொழுது தான்.

இடப்பெயர்வால் நிறைந்திருந்த சனத்தொகை அதிகம். போதிய வசதிகளில்லாமல் சனங்கள் வாழ்ந்த காலம் அது. பல குடும்பங்கள் காட்டோரங்களில், ஆற்றோரங்களில், குளக்கரைகளில் வாழவேண்டிய நிலை, இடப்பிரச்சினை, தண்ணீர்ப் பிரச்சினை எல்லாம் நெருக்கடியாக இருந்தது அப்போது. போதிய சுகாதார வசதிகளும் இருக்கவில்லை. குடி



னையுமே.

நோயாளிகளால் நிரம்பி வழிகிற வன்னியின் மருத்துவமனைகளில் மலேரியா அனுபவங்கள் ஒவ்வொன்றும் பெருங்கதைகள்தான்.

வன்னியிலிருந்து படிப்படியாக வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் சென்றவர்கள் அங்கிருந்து திகிலுடன் நினைவுகூர்வது மலேரியா நாட்களைத்தான்.

போர் நெருக்கடிகளை விடவும் அன்று சூழ்ந்திருந்த இடப்பெயர்வு அவலங்களை விடவும் அவர்களிடையே பெருந்தாக்கத்தை

யும் இருந்த போதும் பல தொற்று நோய்களிலிருந்தும் தப்பியிருந்த மனிதர்கள் நாங்கள். தமிழீழ சுகாதார சேவையினரும் மருத்துவப் பிரிவினரும் அன்று ஏற்பட்ட பல நோய் நெருக்கடிகளிலிருந்து சனங்களை காப்பாற்றியிருந்தார்கள்.

இலங்கை முழுவதையும் கொலரா பீதிபயமுறுத்திக் கொண்டிருக்கையில் வன்னி அதிலிருந்து வெகுசுலபமாக விடுபட்டது.

கொலராபற்றியும் அதிலிருந்து விடுபடுவது பற்றியும் மக்களிடையே ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வு

மருத்துவத்துக்கான அடிப்படை வசதிகளே இல்லாதிருந்த சூழலில் கொலரா, மலேரியா, நெருப்புக்காய்ச்சல் போன்ற வேகமாகப் பரவும் நோய்கள் தடுக்கப்பட்டதுதான் இதில் முக்கியம். இதற்கு தலைவர் பிரபாகரன் அவர்களின் அறிவுரைகளும் தமிழீழ மருத்துவத்துறையினரின் திட்டமிடலும், தீவிரமான செயற்பாடுகளுமே வெற்றிதரக் காரணம்.

இன்றைய மருத்துவத் தரவுகளின்படி வன்னியை விட யாழ்ப்பாணத்தில் மலேரியாவின் தாக்கம் கூடியுள்ளது. பாதிக்கப்படுவோரின் தொகையும் அதிகம். அதுபோல நிமோனியா, தைபோயிட் எல்லாம் ஒப்பீட்டளவில் யாழ்ப்பாணத்திலேயே கூடுதலாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னியில் காடு, நீர்த் தேக்கங்கள், புல்வெளிகள், குளங்கள், ஆறுகள் எல்லாம் கூடுதலாக

**வெளிவாசல்பாலன்**

உண்டு. நுளம்பு பெருகுவதற்கும், வாழ்வதற்கும் இது சாதகம். ஆனாலும் இங்கே மலேரியா கட்டுப் பாட்டில் வந்ததென்றால் அதற்காகப்பாடுபட்ட மலேரியா ஊழியர்களையும் மருத்துவர்களையும் மருத்துவத் துறையினரையும் பாராட்ட வேண்டும்.

போர்க்காலத்தில் இன்னொரு படையெடுப்பாக இருந்த மலேரியாவை முறியடித்த இந்தச் சாதனையை இன்று பாராட்டவே வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட சுகா

என்று வன்னிக்கு வெளியேயிருந்து வந்த பலரை விரட்ட மலேரியாவின் ஞாபகங்கள் எளிதில் மறந்து போகக் கூடியவையல்ல. நடுக்கம், குளிர், வாய்க்கசப்பு, வாந்தி, பயங்கரக் கனவுகள், களைப்பு- உடற்சோர்வு எல்லாவற்றையும் தருகிற வியாதியின் நினைவை எப்படித்தான் மறப்பது?

இன்று மலேரியா நன்றாகக் குறைந்து விட்டது என்பது ஒரு பெரும் ஆறுதலான விடயம். ஆனால், நினைவுப்பரப்பில் மீண்டும் நிதம் முளைப்பதுபோல மலேரியா திரும்பவரும் சாத்தியங்கள் அதிகரித் துவருவதாக வைத்தியசாலை தரப்பு அறிவுறுத்துகின்றது.

சீரற்ற வடிகால்கள், ஒழுங்கற்ற நீர்ப்பாசனமுறை கைவிடப்பட்ட வயல்களும் காணிகளும், கண்டபடி வீசப்படும் கழிவுப்பொருட்கள் எல்லாமே நுளம்பு வளர்வதற்கான ஊக்கிகள். இந்த ஊக்கிகளைப்பற்றிய கவனிப்பும் எச்சரிக்கையும் சாதாரணமாக சனங்களிடம் அருகி வருகிறது. இது கவலையைத் தருகிறது.

முன்னர் இடப்பெயர்வின் போதான சனநெருக்கடியும் அகதிக் குடியிருப்புக் கழிவுகளும் நுளம்பு பெருகுவதற்கு பெருங்காரணமாயிருந்தது. இப்போது புதிய கட்டுமானங்கள், புதியகுடியிருப்புகள் அமைக்கும் போதான கழிவுகள், சீரற்ற நிலைமைகளால் சூழல் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாகிறது. தவிர இன்னும் முற்றாக சீர்படுத்தப் படாத இராணுவ மண் அரண்கள் நீர் தேங்குவதற்கு வழியாகின்றன. எல்லாமே மறுபடியும் மலேரியாவை பெருக்கிவிடுமோ என்ற அச்சத்தை உண்டாக்குகிறது.

பொதுவாக ஒரு சூழலின் சீமைக்கும் நலனுக்கும் ஒருங்கிணைந்த வேலைகள் தேவை. இங்கேயும் அது தான் அவசியம்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அற்புதராசா சிங்களப் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டிருந்தார்.

ஒரு நாள் இராணுவப் புலனாய்வு அதிகாரியான கருணாரட்ணா அற்புதராசாவுடன் கலந்துரையாடலைச் செய்தார். இக்கலந்துரையாடலின் முக்கிய கருதமக்கான புலனாய்வுவேலைகளை செய்து தரும்படி அல்லது தராவிட்டால் கொல்லப்படுவா என்பதாகவே இருந்தது. அக்கருத்தினை வலுவூட்டத் தக்கவகையில் மறுநாள் கருணாரட்ணா அற்புதராசாவை ஒரு இடத்திற்கு அழைத்துச்சென்றார். அவ்விடத்தில், டயர்கள் போடப்பட்ட நிலையிலும் அதன் மீது கண்கள் கட்டப்பட்ட இரு தமிழர்கள் படுக்க வைக்கப்பட்ட நிலையிலும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. அக்காட்சியைப் பார்த்ததும் என்ன அடுத்து நடக்கப் போகின்றதோ என்கின்ற மரண பயத்தில் அற்புதராசா மூழ்கியிருந்தார்.

மரண பயத்தின்மத்தியில் தான் கோரமான காட்சி அற்புதராசாவின் கண்முன்னே நடந்தது. டயர் நெருப்பில் இரு தமிழர்கள் உயிருடன் எரியும் காட்சியாக அது இருந்தது. இக்கொடூரமான காட்சியால் உளப்பாதிப்பிற்குள்ளாகிய அற்புதராசாவை கருணாரட்ணா தன் புலனாய்வுப் பணிகளுக்கு ஈடுபடுத்தும் முயற்சியில் வெற்றி பெற்றார். ஆனால் அந்த வெற்றியை சில மாதங்கள் மட்டுமே கருணாரட்ணாவினால் அனுபவிக்க முடிந்தது. அற்புதராசா புலிகளிடம் வந்து சேர்ந்து தனக்கு நேர்ந்த அனைத்தினையும் விபரித்து தன் உளரீதியான களைப்பை நீக்கினார்.

ஏழாவதாக மட்டக்களப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த கமலராஜன் புலிகளுக்கு உதவியதாக குற்றம் சாட்டப்பட்டு சிங்கள இராணுவ முகாமில் 2000ஆம் ஆண்டளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

கமலராஜனின் மனைவியான சந்திராதேவி தன் கணவனைத் தேடி அலைந்து சென்றபோதெல்லாம் இராணுவத்தினரால் பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாகினார். அது மட்டும் அல்லாது கணவனை காணமுடியாது ஏமாற்றத்துடன் வீடு திரும்புவார். இப்படியாக ஒரு மாதம் கடந்த பிற்பாடு ஒரு நாள் இராணுவ புலனாய்வாளரான பண்டார சந்திரா தேவியிடம் கணவனை காட்டுவதாயின் தமக்கு புலிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்துக்கொண்டு தந்தால் அந்த ஏற்பாட்டை செய்து தரமுடியும் என்கிற அழுத்தத்தை கொடுத்தான்.

மன அழுத்தத்திற்குள்ளாகிய சந்திராதேவி தன் சகோதரரான போராளி வண்ணனிடம் விடயங்களை கண்களில் நீர்வழிந்தோடியபடி சொல்லி முடித்தார். அதன் பின் அவர் இராணுவ முகாம் பக்கம் செல்வதும் இல்லை. அவரின் கணவன் வீடு வந்து சேரவும் இல்லை. விதவையான சந்திராதேவி இப்போது வன்னியில் வாழ்ந்து வருகின்றார்.

இதுவரையில் அலசிப் பார்க்கப்பட்ட ஏழு உண்மை நிகழ்வுகளில், வெவ்வேறான விளக்கங்களை, அனுபவங்களைப்பெற்றுகொள்ளக் கூடியதாகவே இருக்கின்றது.

தமிழர்களை மனச்சான்று மீறி நடக்கின்ற, தமிழர்தாயகத்திற்கு நம்பிக்கைக்கேடு செய்கின்ற, தமிழர்களாக மாற்றும் முயற்சியில் சிங்களப் புலனாய்வாளர்கள் தமிழர்களிடம் ஏமாந்த நிகழ்வுகளை மட்டும் எடுத்துரைப்பவைகளாக இருக்கின்றன. அப்படியாயின் தமிழர்களின் மனச்சான்று மீறி, நம்பிக்கைக்கேடு செய்கின்றவர்கள் இல்லையா? என்கின்ற கேள்வி எழக்கூடும். அதற்குப் பதில் கண்ணுக்கு புலப்படாத உளவாளிகளாக தமிழர்களில் சிலர் இயங்கி வருகின்றார்கள்.

அழுத்தங்கள் யாவும் கடந்து சிங்களப்புலனாய்வாளர்கள் தமக்கான புலனாய்வுக் குறிக்கோளை எட்டுவதற்கு தமிழர்களுக்கு கொடுக்கும் மன அழுத்தங்கள் பற்றியும், சந்தர்பங்களை பயன்படுத்தி புலனாய்வுப்பணிக்காக அணுகுவது பற்றியும் நிகழ்வுகள் தெளிவாக இடித்துரைத்துள்ளன. அத்தோடு சிங்களப் புலனாய்வாளர்களின் உள நேர்மையற்ற உளவியல் அழுத்தங்களால் தமிழர்கள் உள நெருக்கீடுகளுக்குள்ளாகியபோதிலும் பிடிவாதமாக இனப்பற்றுக்கொண்ட தமிழர்களாக இருந்து சிங்களப் புலனாய்வாளர்களை முட்டாளாக்கியுள்ளார்கள்.

சிங்களப் புலனாய்வாளர்கள் தமிழர்களுக்கு கொடுக்கப் படும் மன அழுத்தங்களால் நாணங்கெட்ட தமிழர்களாக தாழ்ந்துபோகாது தன் மானமுள்ள தமிழர்களாக இருக்க வேண்டும். சிங்களப் புலனாய்வாளர்களின் எந்தவொரு புலனாய்வு உத்திகளுக்கும், அழுத்தங்களுக்கும் வளைந்து கொடுக்காத தமிழர்களாக இருக்கும் போதுதான் சிங்களப் புலனாய் வாளர்களுக்கு புலனாய்வுப் போர்க்களைப்பை ஏற்படுத்த முடியும்.

வணக்கம் எல்லாருக்கும்! எப்பிடிச் சுகமா இருக்கிறீயளோ? 'உந்த வெக்கேக்கிள்ளை என்ன பெரிசாசுகம் வேண்டிக்கிடக்கிது!' எண்டு எரிஞ்சு விழுறியள் போல! வெக்கையாக்கிடக்கிறதுக்கு நான் என்னசெய்ய! ஏதோ உந்த மரங்களை அழிக்காமல், மரங்களை இன்னும் கொஞ்சம் கூடவா நட்டு வந்தால், ஓரளவுக்கெண்டாலும் கட்டுப் படுத்தலாம்.ஒரேயடியா உடனே செய்யேலாட்டியும், கொஞ்சம் கொஞ்சமா ஒரு பசுமைப்புரட்சியை நிகழ்த்திக் காட்டலாம் பாருங்கோ! இல்லாட்டிப் போன மாசம் நேபாளத்தில நடந்த மாதிரி ஏதாவது நடந்திடும். கடந்த 40 வருசத்தில அந்த நாட்டின்ரை 60% ஆன காடுகள் அழிக்கப்பட்டு விட்டிதாம். இதால மண்ணிறுக்கம் தளர்ந்து, இயற்கையின்ரை ஒழுங்கெல்லாம் பாதிக்கப்பட்டு, எதிர்பார்க்காத நேரத்தில பெரிசா ஒரு வெள்ளப் பெருக்கு வந்து 255கி.மீ. நீளமான வீதி, 76 பாலங்கள், 61 பள்ளிக் கூடங்கள், 230 மனிச உயிர் எண்டு பெருத்தநாசம் விளைவிச்சிப் போட்டிதாம். அதுதான் மரங்களிலை கைவைக்கேக்கிள்ளை நாங்களும் நாலு தரம் யோசிக்கோணும்.

நாங்கள் இந்த வெய்யில் கொதிப்பில ஒராள் மேல மற்றாளெண்டு எரிஞ்சு விழுகிறது பத்தாதெண்டு, இந்த மாசம் பார்த்து என்ரை சொந்தக்காரர் ஒருத்தர் குடும்பத்தோட வெளிநாட்டிலை இருந்து வந்து நிற்கிறார். அந்த மனிசன் விடியக் காலத்தாலை எழும்பிச்சாப்பிட்டது தான் மிச்சம், எங்கேயாவது பஞ்சி, கிஞ்சி பார்க்காமல் வெளிக்கிட்டிடும். நான் தான் அவருக்குப்பாதை காட்டி, கண்ணுக்கு ஒரு கறுப்புக் கண்ணாடியும் அடிச்சுக்கொண்டு உள்ள பற்றை, கிற்றை, வடலி, பள்ளம், திட்டி எண்டு எல்லாத்தையும் சுற்றிச் சுற்றிப்படம் எடுக்கும். அருமந்த பிலிம்ரோல் எண்டு நினைச்சுப்போட்டு நானும் 'ஏ9' வீதியில புதுசாக்கட்டின 4,5 கட்டடங்களைக்காட்டி எடுக்கச் சொன்னன். மனுசன் சிரிச்சுப்போட்டுத் தன்ரை பாடு. ஆனாலும் சும்மா சொல்லக்கூடாது பனைமரத்துப் போட்டோ ஒண்டு கொம்பியூட்டரால பெரிசாக்கி பிறிண்ற் பண்ணித் தந்தவர். நானும் ஃபிறேம் போட்டு சுவரில மாட்டிவைச்சிருக்கிறன். நல்ல சோக்கான காட்சி அது. ஆனா வீட்டை வந்த பக்கத்துவீட்டுக்காரர் கிட்டப் போய் நல்லா உற்றுப்பார்த்துப் போட்டுச் சொன்னார், "என்ன இருந்தாலும் கலிபோர்னியாப் பனைமரத்தின்ரை வடிவு வராது!" எண்டு. அந்த மனுசனுக்கு ஜோர்ஜ் புஷ்ஷைத் தவிர அமெரிக்காவில ஒருத்தரையும் தெரியாது. அதுக்குள்ளை பனைமரத்தின்ரை அழகைப் பற்றிப் பேச வெளிக்கிட்டிட்டார். ஆ....! பனையைப் பற்றிக் கதைக்கத்தான் ஞாபகம் வருது. என்ரை விருந்தாளி வெய்யிலுக்குத் தொப்பி ஒண்டு கேட்டவர். எங்கட கடையளிலை இல்லாத தொப்பி வகையளோ எண்டிட்டு நானும் காட்டினன். ஆனா வெய்யிலுக்கு பிரயோசனப்படக்கூடிய பனையோலைத்தொப்பி தான் தனக்கு வேணும் எண்டார். கடைவழியில விசாரிக்க சனம் ஒருமாதிரிப்பார்க்கிறது. ஏதோ எங்கேயோ எல்லாம் சொல்லினம். இல்லாட்டிக் கண்காட்சியள் நடக்கிறநேரம் பார்க்கட்டாம்! எட: கண்காட்சியளில வைச்சா மட்டும் காணுமே! கடைத் தெருவிலையும் காட்சிக்கு வைக்க வேணுமெல்லே!" எண்டு நான் கேட்கேல்லை அவர் கேட்கிறார். நான் என்னத்தைச் சொல்ல!!

உப்பிடித்தான் பாருங்கோ, அண்டைக்கு நாங்கள் போய்க்கொண்டிருந்தநேரத்தில ஒரு சூடான விவாதம், எங்கட தமிழ்ப்பெற்றோர் பிள்ளையளை வளர்க்கிற முறையில கன திருத்தங்கள் வேணுமாம்! வெள்ளைக்காரப்பெற்றோரிட்டை இருந்து நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விசயங்கள் கனக்க இருக்கிதாம்! எனக்கு அவற்றை கதையைக் கேட்க விசர்தான் வந்திச்சு. வெள்ளைக்காரருக்குக் குடும்பத்தைப் பற்றி என்ன தெரியும்? ஏதோ நாலஞ்சு கண்டு பிடிப்புக்களைச் செய்து முன்னேறியிருக்கிறார்கள் எண்டிறதுக்காக, எல்லாத்துக்கும் அவங்கள் செய்யிறது தான் சரி எண்டு சொல்லேலுமே! எங்கட அம்மா, அப்பா எங்களை வளர்க்கத் தெரியாமல், வளர்த்துத்தானே நாங்கள் இண்டைக்கு ஒரு நல்ல நிலையிலே இருக்கிறம்! 'தந்தை மகற்காற்றும் உதவி' பற்றி வெள்ளைக்காரனே சொன்னவன்! எங்கட வள்ளுவரெல்லே 2000 வருசங்களுக்கு முன்னாலேயே சொன்னவர்! "தம்பி என்னெண்டாலும் சொல்லும் நான் ஏற்றுக்கொள்ளிறன். ஆனால், பிள்ளைவளர்ப்பு விசயத்திலை மட்டும் நான் நீர் சொல்லிறதை ஏற்றுக்கொள்ளமாட்டன்!"

"அப்பு! நான் சொல்லிறதை நீங்கள் பிழையா விளங்கிக் கொண்டிட்டியள். நாங்கள் குறைவு, அவையள் தான் திறம் எண்டு நான் சொல்லேல்லை. எங்கட பெற்றோரின்ரை ஒரு சில அணுகுமுறை சிரிக்கேல்லை. அதாலை இரண்டு சைக்கிளிலை வீட்டை போய் கொண்டிருந்த பள்ளிக்கூடப் பொம்பிளையளைப் பார்த்துத்தான் அந்த 'ஈ.....' எட அதுகள் பள்ளிக்கூடத்தாலை வருகுதுகள் எண்டால், இவனையும் பார்க்கச் சின்னவயசாத் தான் தெரியுது. உவனுக்குப் படிப்பு கிடிப்பு ஒண்டும் இல்லையோ? எட இளம் வயசெண்டால் கொஞ்சம் உப்பிடிப்பம்பலுகள் இருக்கும்தான்! படிப்புகளையும் கவனிச்சுக் கொண்டு பின்னேரங்களிலை, ஒருதரின்ரை பேருக்கும் களங்கம் வராத மாதிரி, ஒரு பரஸ்பர புரிந்துணர்வோட உப்பிடித் தெருத் தெருவா அலையலாம். நான் பிளையெண்டு சொல்லேல்லை ஆனால் படிப்பையும் எல்லே கொஞ்சம் கவனிக்கோணும் உங்களுக்குத்தானே தெரியும், எனக்கு உப்பிடியேதுமெண்டால் மனம் கேட்காதெண்டு. "தம்பி! நீர் பார்க்கச் சின்னப் பொடியன் மாதிரித்தெரியிறீர் ஆனால் ing இதில் உவன் இரண்டாவது வகைக்குள்ளேயும் வரமாட்டான் தமையன் மாரும், தகப்பனும் கஷ்டப்பட்டு உழைச்சதைக் கரைச்சுக்கொண்டி ருக்கிற அவர், தன்ர தகுதிக்கேற்ற சீதனம் வேற எதிர்பார்க்கிறார் எண்டு நான் மனசுக்குள்ள யோசிச்சுக் கொண்டிருக்கேக்கையே, பளபள எண்டு மினுங்குற Hero Honda ஒண்டில அவன் வேகமாகப் பறந்து கொண்டிருந்தான். ஏதோ தான் பெரிய சுள்ளியோ, கொள்ளியோ எண்ட நினைப்பாக்கும். அதுதான் பாருங்கோ! உப்பிடியேதோ பேரெல்லை கிட்டடியில வந்த படத்துக்கு! "தம்பி ஏன் உப்பிடி உவன் உருப்படாமல்போறான்? படிப்புகளில கொஞ்சமாவது அக்கறை வேண்டாமே! அவன் அந்தப்பிள்ளையளுக்கு றேடியோவில போட்ட பாட்டைக் கவனிச்சனீங்களே? 'இறைவனிடம் கையை ஏந்துங்கள்! அவன் இல்லையென்று சொல்வதுமில்லை...'



# ஏ9-ஏரம்பு

## எங்கட... வருங்கால தூண் ஒண்டு தலையைச்சுத்தி அரிஞ்சுபோட்டு நிக்கிறான்

யள் சரியோ எண்டு நாங்கள் பார்க்கோணும். இந்த விசயத்திலை வெள்ளைக்காரங்கள் பிள்ளையளோட அணுகிற விதத்தை எங்களுக்கேற்றவாறு நாங்கள் உள்வாங்கிக் கொள்ளோணும், எண்டுதான் நான் சொல்லிறன். படிக்கிற வயசிலேயே பிள்ளையளின்ரை ஈடுபாடு, ஆர்வங்களுக்கு மதிப்பளிக்காமல், டொக்டரும், இஞ்சினியரும் தான் வாழ்க்கை எண்டு திணிக்கிறது. அது மட்டுமே அயலுகளிலை இருக்கிற ஒரேவகுப்புக்காரர் ஓய்வுநேரத்தில சேர்ந்து படிச்சா அங்கே ஒரு Team -Work இருக்கும். ஆனா எங்கடை ஆக்கள் "அங்கை பார். அவன் அந்தமாதிரிப் படிக்கிறான். நீ என்ன செய்கிறாய் மொக்கு வாற தவணைச் சோதனையில அவனை விடக்கூட எடுக் காட்டித் துலைச்சுப்போடுவன்", எண்டு பொறாமையோடு சேர்ந்த போட்டியை வளர்க்கிறது. படிக்கிற காலத்திலேயே ஒற்றுமையா Team -Work பண்பு இருந்தால் தான், நாளைக்கு பெரிய ஆளான பிறகும் சமூகத்தைப்பற்றிச் சிந்திப்பினம்," எண்டு சொல்லிக் கொண்டு வந்தார். ஏற்கனவே இருக்கிற வெக்கைக்கு, இது வேற, எண்டு நினைச்ச நான் ஒண்டும் பதிலுக்குச் சொல்லேல்லை.

உப்பிடித்தான் சொந்தக்கார வீடு ஒண்டுக்குப் போகேக்கிள்ளை தான் எங்கட வருங்காலத்தூண் ஒண்டைக் கண்டன். தலையைச் சுத்தி ஏதோ வட்டமா அரிஞ்சு வைச்சிருந்தான். சரி! தலைதானே! ஆசைக்கு வெட்டியிருக்கிறான். நாளைக்கு வளரும் தானே! வீட்டுப்படலைக்கு முன்னால 'ரிப்றொப்'பாக வெளிக்கிட்டு வந்து, கையிலை ஒரு றேடியோவோட மூஞ்சை முழுக்கப்பல்லோட 'ஈ....ஈ...'யெண்டு சிரிச்சுக்கொண்டு நிண்டான். ஆரன் எனக்குத்தெரிஞ்ச ஆக்களோ எண்டு நினைச்சுப்பார்த்ததிலையும் பிடிபடேல்லை. ஆனா அந்தப்பெடியனும் என்னைப்பார்த்துச் பள்ளிக்கூட நேரத்தில வீட்டை நிற்கிறீர். பள்ளிக்கூடம் போறேல்லையோ? எண்டு கேட்டன். தூரத்தில போய்க்கொண்டிருந்த அந்த சைக்கிள் களையே பார்த்துக்கொண்டே எனக்குப் பதில் சொன்னான், "போறனான் பள்ளிக்கூடங்கள் தொடங்கிற நேரமும், முடியிற நேரமும் தவறாமல் போறனான்!" [illegible] அவன் சொன்னது விளங் [illegible] இருந்தாலும் "இல்லைத் தம்பி! நாளைக்குப் பெரியாளா வந்து குடும்பம் எண்டு ஆனாப்பிறகு, ஏதாவது படிச்சிருந்தாத்தானே நாலுகாசு சம்பாதிக்கலாம்!" எண்டு கேட்டன். "உழைச்சுத்தான் வாழோணும் எண்ட தலைவிதி எனக்கில்லை. அண்ணா2 பேர் வெளியிலை இருக்கினம். அப்பாவின்ர இந்தச்சொத்தெல்லாம் எனக்குத்தான். எனக்கென்ன குறை! நாளைக்கு வாற ஆளும் என்ர தகுதிக்கேற்ற மாதிரி நல்ல சீதனத்தோட தானே வரும். அப்பு! நான் BUSY ஆக இருக்கிற இந்த நேரத்தில, உந்தப்பேட்டி எடுத்துக் கொண்டிருக்கிறதை கொஞ்சம் நிப்பாட்டுவியளோ? என்ர ஏரியாவை (Area) நான் தான் கவர் பண்ண வேணும்!" எண்டான்.

'எட! வீட்டுக்கும் உதவாமல், நாட்டுக்கும் உதவாமல், பொறுப்பு ஒரு மருந்துக்கும் இல்லாமல் குட்டிச் சுவராப்போறானே!' அதிலையும் பாருங்கோ! பொம்பிளைப்பிள்ளையளைக் கலைச்சுக் கொண்டு உப்பிடி 'லோ...லோ' எண்டு வீதிவலம் வர்றதை விஞ்ஞான ரீதியாப் பிரிக்கலாம். ஒண்டு Individual - sighting மற்றது Collective - sighting அதாவது குறிப்பிட்ட, தனக்குப்பிடிச்ச பிள்ளைக்குப்பின்னால திரியிறது தான் Individual - sighting மற்றது வஞ்சகம் இல்லாமல் சகட்டு மேனிக்கு எல்லாருக்குப் பின்னாலையும் 'லோ...லோ...' எண்டு வீதிவலம் வாறது Collective - sighting

எட ரசனை கெட்டது! காசியில பிச்சைக்காரர்' பாடுற மாதிரியெல்லே உது கிடக்கிது! 'ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ' எண்டு ஏதாவது போட்டிருந்தால், அதுகள் தான் நிற்காட்டியும், நானாவது நிண்டு கேட்டிருப்பனெல்லே! எண்டு என்னோட கூட வந்த, எங்கட விருந்தாளிக்குச் சொன்னன். "வெள்ளிக்கிழமை [illegible] இந்த நேரத்துக்கு தேசியசேவையில பக்திப்பாட்டெல்லே போடுவாங்கள்," எண்டார் அவர் நக்கலாக "ஏன் எங்கட 'ஒட்டி ஓரா மீன் பிடிக்க' எண்ட மச்சி - மச்சான் பாட்டுக்கு என்ன குறை! உந்த ரசனை கெட்டு, அறிவும் கெட்டு உதவாமல் போறதைப் பற்றிக் கதைச்சுத்தான் ஏன் கவலைப்படவேணும்! நீங்க வாங்கோ தம்பி! போவம்!" எண்டு அவருக்குச் சொன்னன்.

"அப்பு! நான் உங்களோட சண்டைபிடிக்கோணும் எண்டு சொல்லேல்லை. எங்கட நாடு நல்லா வரோணும் எண்ட விருப்பத்தால தான் சொல்லிறன். இண்டைக்கு நாங்கள் யோசிக்காமல் மரங்களை வெட்டினால், எதிர்காலத்தில எவ்வளவு பெரிய அழிவுகள் வருமெண்டு நீங்கள் தானே எனக்கு நேபாளத்தை உதாரணம் காட்டிக் கதைச்சனீங்கள். அதை மாதிரித்தான் இதுவும்! எங்கட தாய், தகப்பன் வாயைக்கட்டி, வயித்தைக்கட்டி தின்னாம குடியாமல் சொத்துச் சேர்க்குங்கள். ஆனால் அந்த உழைப்பின்ர பெறுமதி தெரியாமல், பெத்ததுகளிலை ஒண்டு கொழுப்பு மிஞ்சிப்போய் எல்லாத்தையும் அழிக்கும். வெளிநாட்டில தான் எல்லாம் திறம், இஞ்சை மோசம். எண்டு நான் சொல்லேல்ல எங்களிட்டை கன நல்ல விசயங்கள் இருக்கு ஆனா தனிய அதுகளைப் பற்றியே சும்மா பெருமை பேசிக்கொண்டு காலத்தை வீணடிக்கக்கூடாது. எங்கட குறையளை, வேறநாடுகளில நாங்கள் காணக்கூடிய நிறைகளால நிவர்த்தி செய்யலாமெல்லே! ஏன் நாங்கள் இப்பை பார்த்த விசயத்தையே எடுங்கோ!அங்கையெண்டால் என்னதான் தாய்தகப்பன் காசுக்காறர் எண்டாலும், பிள்ளையளின்ரை கைச்செலவுக்ெண்டு அரசாங்கம் முன்மொழியிற ஒரு சின்னத் தொகையைத்தான் எல்லாரும் கொடுப்பினம். 6 வயசுப் பிள்ளைக்கு மாதம் நாலு யூரோ / டொலர் எண்டால், பதினாறு வயசுப் பெடியளுக்கு மாதத்துக்கு 30 40 யூரோ /டொலர் கிடைக்கும். கிடைக்கிற காசை வைச்சு மாசம் முழுக்க சமாளிக்கிறதுக்கு அவையளும் பழகிக்கொள்ளுவினம். ஏதாவது புதுச்சைக்கிள், கொம்பியூட்டர் தேவையெண்டு சொன்னால், தாய்-தகப்பன் சொல்லிப்போடுவினம், சோதனையளிலை இவ்வளவு மாக்ஸ் எடுத்தால் கால்வாசி அல்லது அரைவாசிக்காசு தருவினம் எண்டு அப்ப பிள்ளையளும் கூட ஊக்கத்தோட படிச்சு முன்னுக்கு வருவினம். சனி, ஞாயிறு மற்றப் பள்ளிக்கூட விடுமுறையளுக்கு தாங்களும் வேலை செய்து உழைப்பினம். அது பெரிய முதலாளியின்ர பிள்ளையா இருக்கலாம், ஆனால் 14 வயசு. ஆனால் சரி.. பேப்பர் போடும், தோட்டத்தில கொத்தும், ஹொட்டலில கோப்பை கழுவும். தொழில் பேதம் பார்க்கிற தன்மை இல்லை. மற்றது தாய் - தகப்பன் தரவேணுமெண்டு கட்டாயமா எதிர்பார்க்கிற வழக்கமும் இருக்கிறேல்லை. சேர்க்கிற சொத்தையும், வாழ்க்கையையும் அனுபவிக்கினம் அவையள். நாங்கள் பட்டினி கிடந்து கஷ்டப்பட்டுச் சேர்த்து அழியக்குடுக்கிறம். மீசையெல்லாம் வைச்சு பெரிய ஆம்பிளையள் மாதிரிக் காட்சி தருவாங்கள் ஆனால் , TVS வாங்கித்தரச்சொல்லி தாய்மாருக்கு உண்ணாவிரதம் இருந்து காட்டுவாங்கள். இதைவிட வெட்கக்கேடு கலியாணம் கட்டித்தரச் சொல்லி ஆழம் குறைஞ்ச கிணத்துக்குள்ள குதிப்பாங்கள்! அதுதான் சொல்லிறன். தவறு விடுறது பிழையில்லை, விட்ட தவறில இருந்து ஒண்டையும் கற்றுக்கொள்ளாமல் இருக்கிறது தான் பெரிய தவறு. அதுக்கு முதல்படியாக எங்கட தவறுகளை உணர்ந்து, ஒத்துக்கொள்பவர்களாக நாங்கள் ஒவ்வொருதரும் இருக்கவேணும்' என்டார் அவர்.

நீங்கள் சிலநேரம் நினைப்பியள், ஏரம்பர் சும்மா தன்ரைபேர் பேப்பரில வர்றதுக்காக உருட்டு, புரட்டெல்லாம் எழுதித்தள்ளிறார் எண்டு. என்ர குந்துமேல சத்தியமா, உந்தச் சம்பவம் போனகிழமை விசுவமடுவில நடந்தது. எனக்கும் பாருங்கோ வயசுபோகுது. வீடு போ! போ! எண்டிது. காடு வா! வா! எண்டு சொல்லி நானும் நல்லாக் கிட்டப் போட்டன். இயமன்ரை எருமை கத்திறது கேட்கிது எட அந்த எருமை தான் அலுப்பில விட்டிட்டு இருந்தாலும், உந்த ஏ9 எருமையள் கிளப்பிக்கொண்டு போடும்போல கிடக்கு. ஆனாப்பாருங்கோ! வயசும் 75 ஆகப் போகுது. இந்த வயசிலசாகிறதுக்குப் பயப்பிடக்கூடாது. ஆனால், எனக்கு உங்களைப்பற்றி கன கனவுகள் இருக்கு. எங்கட நாடு எப்பிடி எப்பிடியெல்லாம் வரோணும் எண்ட விருப்பங்கள் இருக்கு. இப்படியான கனவுகளுக்காகவும், இலட்சியங்களுக்காகவுமே சின்ன வயசில உயிரைக் கொடுத்த எங்கட மாவீரர்கள் எல்லாரையும் நினைச்சுப் பார்க்கிறன். அவையளின்ரை கனவுகளை நாங்கள் நனவாக்கவேணும். ஏதோ என்ர வயசுக்கு, என்ர மனசுக்கு சரி எண்டு படிற நாலு விசயத்தை உங்களோட கதைக்கிறன். இதில இருக்கிற நியாயத்தை எடுத்து நாலு பேரோட கதையுங்கோ! எங்கட முன்னேற்றத் துக்கான வழிவகையளைப் பற்றி ஆராயுங்கோ! அப்பிடி நீங்கள் மினைக் கெடும் ஒவ்வொரு நேரமும், என்ர எழுத்தால ஏதோ ஒரு துயிலும் இல் லத்தில ஒரு பூவை வைக்க முடிஞ் சுதே எண்டு நானும் சந்தோசப்படுவன்.



# பொருண்மிய வாசல்

எங்கள் மண் வளமானது தான் எனினும் தொடர்ச்சியான பயிர்ச் செய்கையினால் மண்வளம் குன்றுவது தவிர்க்க முடியாதுதான்.

பயிர்ச் செய்கையில் உச்சவிளைச்சலை பெற நாங்கள் பல்வேறு வகை உரங்களையும் இரசாயன பதார்த்தங்களையும் மண்ணுக்குள் செலுத்தி வருகின்றோம். இதனால் பயிர்ச்செய்கையில் உச்ச விளைச்சல்களைப் பெறு

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

கின்றோமோ இல்லையோ மண்ணை நஞ்சாக்கி வருகின்றோம் என்பதை நாங்கள் உணர்ந்தும் உணராமலும் இருக்கிறோம்.

நஞ்சாகும் மண் நீண்டகாலத்துக்கு எமக்கு உதவப் போவதில்லை ஏற்கனவே காடழிப்பாலும், முறையற்ற நீர்ப்பாவனையாலும் எமது மண் வளமிழந்து வருவது உண்மையானது. இந்தப் பின்னணியிலேயே எமது மண்ணைப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு உண்டு.

செயற்கையான இரசாயன உரங்களைப் பாவிப்பதனை இயலுமானவரை குறைத்து இயற்கைப் பசளைகளான பசுந்தாள் பசளை, கோழிஎரு, மாட்டெரு போன்றவற்றை மண்ணுக்கு இடுவது இந்த ஆபத்துகளில் இருந்து மண்ணைப் பாதுகாக்க உதவக் கூடியது.

பசுந்தாள் பயிர்கள் ஆகாயத்தில் உள்ள நைதரசனை வேர் முடிச்சுக்களில் உள்வாங்கி நிலைப்படுத்தி நிலத்தை வளமுடையதாகச் செய்கின்றது. பசுந்தாள் பசளையை நிலத்திற்கு இடுவதால் நிலத்தில் நுண்ணுயிர்களின் அளவு அதிகரிக்கின்றது.

பசுந்தாள் பசளைகள் சேரும் அளவுக்கு நில அமைப்பு செம்மையாகின்றது. நீரைக் காக்கும் சக்தியையும் அதிகமாக்குகின்றது.

மண்ணை வளமாக்க பசுந்தாள் பாவனை அவசியமானது.

# வருமுன் காப்போம்

# தொண்டை அடைப்பான் நோய்

இந்நோய் பாய்சுரல்லா மல் டோசிடா என்ற கிருமியால் ஏற்படும் தொற்று நோயாகும். உடலில் உள்ள உள்ளுறுப்புகளில் இரத்தக்கசிவு ஏற்படுதல் அதிக காய்ச்சல், நெஞ்சு வலி, தொண்டைப் புறத்தில் வீக்கம் தோன்றுதல் போன்றவை இந்நோயினால் ஏற்படும் கேடுகளாகும்.

**நோயின் அறிகுறிகள்:-**

திடீரென அதிக காய்ச்சல் ஏற்படும். உடல் வெப்பம் 106°c வரை இருக்கும். வாயிலிருந்து வீணி வடியும், மாடு மிகவும் சோர்ந்திருக்கும். தொண்டை கழுத்தின் கீழ்ப்புறம் நெஞ்சு முதலிய இடங்களில் வலி ஏற்படும் சூடான வீக்கம் ஏற்படும் மூச்சுத்திணறும். இந் நோய் பரவும் காலம் 2-5 நாட்களாகும். சில மாடுகளில் கழிச்சல் காணப்படும். அத்தோடு இரத்தம் கலந்தும் காணப்படும் மூக்கில் இருந்து சளி வடியும்.

இந்நோய் ஒரு கிராமத்தில் ஏற்படுமானால் ஒரே நாளில் பல மாடுகள் இறக்கும். நோய் கண்ட மாடுகள் எழுந்திருக்க முடியாமல் கஷ்டப்படும். காதுகள் தொங்கியிருக்கும். கண்கள் சிவந்திருக்கும். கண்களில் இருந்து கண்ணீரும் பீளையும் காணப்படும். நாடித்துடிப்பு அதிகரிக்கும். தீவனம் உண்ணாது. பால் வற்றிவிடும். இருமலும் செருமலும் காணப்படும். நாக்கு மிகவும் பெருத்திருக்கும். மூச்சு விட முடியாமல் நாக்கை சிறிது வெளியே நீட்டி வாயைத் திறந்திருக்கும்.

(சி-10044)

நோய் கண்ட மாட்டின் மூக்குச்சளிமூலம் பிறமாட்டிற்கு நோய்க் கிருமிகள் பரவும். நோய்க் கிருமிகள் அதிகமுள்ள மேய்ச்சல் தரையில் மாடுகளுக்கு இந்நோய் வேகமாகப் பரவும். சதுப்பு நிலத்தில் இந்நோய் அதிகம் பரவும். பொதுவாக மழை காலங்களிலேயே இந்நோய் அதிகளவில் பரவும்.

இந்நோயின் தாக்கத்தால் இறந்த மாட்டின் தொண்டை கழுத்து மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் வீக்கம் தென்படும். சில மாடுகளில் நுரையீரல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும். நெஞ்சுக் குழியில் நிறைய நீர் இருக்கும். நுரையீரலில் காய்ச்சலின் பின் விளைவுகள் தெரியும். நுரை போன்ற மென்மையான தன்மை கொண்ட நுரையீரல் கடினப்பட்டிருக்கும்.

இந்நோயால் ஆடு, மாடு, எருமை, முயல், பன்றி ஆகியவைகளைத் தாக்கும் இந்நோய் காணுமிடத்து ஆரம்பத்திலேயே கால் நடை வைத்தியரை சந்தித்து அதற்கான பரிகாரம் தேடுதல் அவசியமாகும். நோய் கண்ட மாட்டைத் தனிமைப் படுத்துதல் அவசியம்.

மழை காலத்தில் 1 மாதத்திற்கு முன்பே மாடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும். நோய் கண்டவுடன் பிற மாடுகளுக்கும் உடனேயே தடுப்பூசி போடுதல் வேண்டும்.5முதல்10 மில்லி லீற்றர் தடுப்பு மருந்தினை ஊசி மூலம் கழுத்து தோலுக்கடியில் அல்லது பின்னந் தொடையில் செலுத்த வேண்டும்.

மாடுகள் வளர்க்கின்ற பண்ணையில் முன்னைய ஆண்டுகளில் இந் நோய் ஏற்பட்டிருந்தால் கட்டாயம் தடுப்பூசி ஏற்றுதல் அவசியம்.

நோய் கண்ட மாட்டை தனிமைப்படுத்துதல் வேண்டும். அதன் படுக்கைக்கு பயன்படுத்திய பொருட்கள் தீவனக்கழிவுகள் மாட்டின் உடற்கழிவுகள் ஆகியவற்றை அவ்வப்போது அகற்றி எரித்து விட வேண்டும்.

நோய் வாய்ப்பட்ட மாட்டிற்கு தண்ணீர்த் தீவனம் வைக்கப் பயன்படுத்திய வாளி, தொட்டி போன்றவற்றை பிற மாடுகளுக்கு பயன்படுத்துதல் கூடாது.

தடுப்பூசி மருந்தின் வீரியம் 6 மாத காலத்திற்கும் இந்நோய் தடுப்பூசி மருந்தை கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் தயாரித்து வழங்குவதால் அவ்வப்பகுதி அரச கால்நடை வைத்தியரை நாடி உங்கள் பண்ணைகளில் உள்ள மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பூசிகளை போட்டு நோய் வர முன் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**சிவகமலா**

(17 பக்கத் தொடர்ச்சி)

போன்ற எமது மூத்த ஓவியர்களையும் இளையதலைமுறையினர் மாற்கு மூலமே அறிந்து கொண்டனர். இவர்களின் வீடுகளிற்கு ஏராளமான இளைய தலைமுறையினரையும், வேறு ஓவிய ஆர்வலர்களையும் அவரே கூட்டிச்சென்று அறிமுகப்படுத்திவைத்தார்.

நம்மிடையே, "சிறுகதை என்றால் என்னைவிட்டு வேறு யார்?" எனச் சொல்கிற 'ஹீரோ' எழுத்தாளனைப்போல "தான்தான் ஆகச் சிறந்த ஓவியன்; தனக்குத் தானேகூடிய புகழ்கிடைக்கவேண்டும்!'' எனக் கருதும் ஓவியனும் இருக்கின் றான் தான்.

பல் நூற்றுக்கணக்கான ஓவியங்களை மாற்குவரைந்திருக்கிறார்; இறக்கும்வரை பல்வேறு கலைஞர்களின் ஓவியப் படைப்புக்களுடன் நூல்கள், சஞ்சிகைகள் வாயிலாக அவர் தொடர்புற்றிருந்தார். சில படைப்புக்களில் வேறுசிலரின் தாக்கத்தை அவரிடமும் காணச்சாத்தியமுண்டு. இது வேறு கலைஞர்களிடமும் எழுத்தாளர், கவிஞர்களிடமும் பொதுவில் காணப்படுவதே. அதற்காக பலவற்றை அப்படியே பிரதிபண்ணினார். திருடினார்- எனக்குற்றஞ்சாட்டல் பொருத்தமானதா? தன்னளவிலான திறமையைப் பெரும் எண்ணிக்கையில் வெளிப்படுத்திய ஒருவருக்கு 'திருடும் தேவை' இல்லை. ஆனால், மனதில் ஆழப்பதிந்த ஒன்று அவரையறியாமலே ஒத்ததன்மைகள் சிலவற்றுடன் வெளிப்பாடடையக்கூடும். உதாரணமாக பிரெஞ்சு எழுத்தாளரான 'மாப்பசான்' எழுதிய 'ஜீனும் பியறியும்' என்ற நாவலுக்கும், தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலுக்கும் சில சம்பவ ஒற்றுமைகள் (மாறிய வடிவத்தில்) அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதிலும், 'அம்மா வந்தாள்' சிறப்பான நாவலாகத்தான் இன்றுவரை விமர்சகர்களால் கருதப்படுகிறது. ஜானகிராமன் தமிழிலுள்ள சிறந்த நாவலாசிரியருள் ஒருவராகத் தனது ஏனைய படைப்புக்கள் மூலமும் உறுதிப்படுத்தியுள்ளார்.

'சாளரம்' கட்டுரையில் (சனவரி 1995) மாற்குவின் ஐந்து ஓவியங்களைப் பிறரின் ஓவியங்களின் மறுபிரதியே என இராசரத்தினம் குறிப்பிட்டாலும், 'எமில் நோல்டே'யின் ''தீர்க்க தரிசி' என்ற ஓவியத்தை மட்டுமே மாற்குவின் 'திருமுகம்' ஓவியத்துடன் இணைத்து வெளியிட்டுள்ளார். அதனைப்பார்ப்போம்...

அந்த ஓவியத்தின் வெளிப்பாட்டுமுறையும், வரைவும் வேறுவேறானவை; இரண்டையும் ஒன்றெனக் கொள்ளமுடியாது. இரண்டு ஓவியங்களிலும் இயேசுவின் முகம் அண்மைக்காட்சியாக(Close-UP) வரையப்பட்டுள்ளதை வைத்து, பிரதிபண்ணப்பட்டதென்று கூறமுடியாது. சிலுவை சுமந்து சென்ற இயேசுவின் முகத்தை 'வெரோணிக்கா' சிறிய துண்டினால் துடைக்கிறாள். அப்போது அவரது முகம் அந்தத் துண்டில் பதிந்ததாகக் கிறிஸ்தவர்கள் நம்பி வருகிறார்கள். அந்த 'முகத்தோற்றம்' பல்வேறு விதங்களில், பல்வேறு நாடுகளில் வரையப்பட்டுள்ளது. இந்தக் கிறிஸ்தவப் பின்னணியை ஓர் இந்துவான இராசரத்தினம் புரிந்துகொள்ளாமையினால் குற்றஞ்சாட்டுகிறார், 'எஸ்.அன்ரன்'க்கும் இது பொருந்தி வரும்!

05. ''ஆனால் இராசரத்தினத்தின் குற்றச்சாட்டுகளுக்கு இதுவரையில் யாரும் மறுப்பு எழுதியதாகத் தெரியவில்லை. பூனை கண்ணை மூடினால் பூலோகம் இருண்டு போகுமா?'' எனக் கேட்கிறார். அதற்குரிய பதிலொன்றை அப்போதே ( 1995 இல்) எழுதி, 'சாளரம்' ஆசிரியராக கடமையாற்றிய கவிஞர் 'விவேக்' கிடம் கொடுத்தேன்; பத்திரிகா தர்மத்திற்கு மாறாக, அவர் அதனை வெளி யிடவில்லை!

மாற்கு பற்றிய 11ஆம் 14 ஆம் பதிவுகளை நான் எழுதியது 1985 இலும் 1986 இலும். எனவே, 1995 இல் இராசரத்தினம் எழுதியதை வைத்து, "அ.யேசுராசா குறிப்பிடுகிற 'சத்தியமே அதனுடைய தளம்' என்பது இதுதானோ?" எனக் கிண்டலடிப்பதில் அர்த்தமில்லை, அது கால முரண்.

'சத்தியமே அதனுடைய தளம்' என, 'அலை' இதழைப் பற்றி 1975 இல் குறிப்பிட்டேன், 'அலை'யிலிருந்து என்னைப் பிரிக்க முடியாது. இன்றுவரையுமான எனது கலை-இலக்கிய வாழ்வு அவ்வாறுதான் அமைந்துள்ளது. எனது நம்பிக்கைகளிற்காக வெளிப்படையாகச் செயற்படுகின்றேன் 'அலை, திசை, கவிதை, தெரிதல் என்பவற்றின் ஊடாக அந்த செயலியக்கம் தொடர்கிறது.

மாறும் சூழலுக்கேற்ப- மேலாண்மை சக்திகளுக்கு இயைபாக -எனது நிறத்தை மாற்றிக் கொண்டதில்லை, தெரிந்தவர் தெரியாதவர் என்பதற்காக 'சமநிலையற்ற' விமர்சனக் கருத்துக்களை முன் வைப்பதுமில்லை.

தேசிய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிரான செயற்பாட்டை கலை-இலக்கியத் தளத்தில் வலுவாக முன் நிறுத்தியதில் 'அலை' இதழிற்கு ஒரு முக்கியவரலாற்று பாத்திரம் இருக்கிறது.

அது எமது நம்பிக்கைகளின் தளம், "சத்தியமே அதனுடைய தளம்!''


# மொழிபெயர்ப்பாளர் தேவை

**ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்யத் தகுதியுடையோர் தேவை. அவர்தம் தகைமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் காணும் முகவரிக்கு தமது தகைமைகளை அனுப்பிவைக்கவும்.**

ஈழநாதம் (விளம்பர இல 5025)
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-5025)



# ஐந்தாமாண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 16 - 06 - 1972



தாயக மண்ணில் 10 - 09 - 1999

**லெப் கேணல் செந்தமிழ்ச்செல்வன்**
(சிவபாக்கியநாதன் பிரபாகரன்)

வார்த்தைகளால்
எல்லையிட முடியாததுன் வீரம்,ஈகம்
நேற்றென இன்றென
காலம் கைகாட்டி நகர்கிறது.
எங்கள் வாழ்வின் முடிவின் பின்னும்...
வரும் நாட்களிலும்
தேசமெங்கும்
ஒளியென நீண்டிருக்கும்
உன் நினைவுகளுடன்

உடையார்கட்டு வடக்கு,
உடையார்கட்டு.

சித்தப்பா
குடும்பத்தினர்.

(சி-4688)

(9ஆம்பக்கத்தொடர்ச்சி...)
இந்தியா ஏற்படுத்தும் சமாதானத்தின் ஆதரவுக்கு பதிலாக பாகிஸ்தான் தரப்பு காட்டும் சிரத்தை அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க விரும்பினாலும் காஷ்மீரை மையப்படுத்தி தீர்க்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறது.

பாகிஸ்தானுக்குள் ஏற்பட்டுவரும் தலிபான், அல்கொய்டா விரோதப்போக்குகள் பாகிஸ்தானை நெருக்கடிக்குள் அமுக்கியுள்ளது. அவற்றின் நெருக்கடியை கையாளவேண்டிய பொறுப்பு முஷாரப்புக்கே ஏற்பட்டுவிட்டது. அவரது பாதுகாப்பையே தக்கவைக்க முடியாதுள்ள போது பாகிஸ்தானின் பாதுகாப்பு எப்படியானதாக அமையும் என்பதை இலகுவாக புரிந்து கொள்ளலாம். அவ்வாறு காணப்படும் நிலையோடு இந்தியாப்பக்கமான முறுகலை தொடரமுடியாதது என்பதுடன் அதனை சரி செய்ய அமைதிப் பேச்சுக்களே சரியான வழிமுறையாக பாகிஸ்தான் கருதியது. இதனால் இந்தியத்தரப்பின் இசைவுப் போக்கை இறுகப் பிடித்த பாகிஸ்தான் தரப்பு அநேக விடயங்கள்ளை சாதிக்கலாமென கருதி தமது அரசியலை நகர்த்திவருகிறது.

மறுபக்கத்தில் இந்தியாவின் புதிய அரசு ஒரு பொருளாதார இலக்குடைய அரசு என்பதனால் அரசியலைவிட இந்தியாவின் பொருளாதாரத்தை போர் பாதிக்கின்றதென்ற வகையில் செயற்படுகிறது. ஆனால் இந்தியா முன்வைத்துள்ள காஷ்மீர் அரசியல் அதிகமான நெருக்கீட்டையும் ஆபத்தையும் ஏற்படுத்தக்கூடியது. பாகிஸ்தானின் காஷ்மீர் தரப்பிலான அரசியலை இலகுவில் பாதுகாக்கும் நிலைக்குள் இந்தியா செயற்படமுடியாது. அவ்வாறான நெருக்கடி சுதந்திர அரசுகளாக ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றது. எனவே இந்தியாவின் அணுகுமுறை பாகிஸ்தானின் போக்குநிலையில் சாத்தியமான தீர்வை நோக்கி நகருமா என்பது சந்தேகமானதே. அவ்வாறு சாத்தியமாகுமாயின் முஷாரப்பின் அரசியலில் பாரிய அஸ்த்தமன நெருக்கடி ஏற்படவேண்டும். அதற்காகவும் காஷ்மீரை விட்டுக்கொடுக்குமா என்பது சந்தேகமானதே. எனவே இருதரப்பு அரசியல் முறியும் நிலையை அதிககாலம் பிந்தியதொன்றாக எண்ண வேண்டியதில்லை.

எனவே தேசிய இனவிடுதலைகளுக்குள் ஊடுருவிவரும் அரசியலும் அதன் தந்திரங்களும் யதார்த்தமான போக்கிலிருந்து போராட்டத்தை திசை திருப்பி வருகின்றன. இது போராட்ட உணர்வையும் அதற்கு ஆதரவான போக்கையும் முறியடிப்பதுடன் நீண்ட கால போராட்டத்திற்கு எதிரான உபாயமாகவும் வளர்ந்து வருகின்றது. இது சிறுபான்மை தேசிய இனங்களின் தணித்துவத்துக்கே அதிக பாதிப்பானதொன்றாக மாறும் என்பதாகும்.


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் தினசரி

எமது ஈழநாதம் நாளிதழ் மற்றும் வாரஇதழான வெள்ளிநாதம் பத்திரிகைகளின் விளம்பரக்கட்டண விபரத்தை எமது விளம்பரதாரர்கள் வாசகர்களின் கவனத்திற்கு தருகின்றோம்.

| விபரம் | நாளிதழ் | வெள்ளிநாதம் கறுப்பு வெள்ளை | வெள்ளிநாதம் கலர் |
|---|---|---|---|
| 1 கொலம் 1 Cm கட்டணம் | 60/= | 75/= | 130/= |
| 2 கொலம் 1 Cm கட்டணம் | 120/= | 150/= | 260/= |
| 3 கொலம் 1 Cm கட்டணம் | 180/= | 225/= | 390/= |
| 4 கொலம் 1 Cm கட்டணம் | 240/= | 300/= | 520/= |
| 1/4 பக்கம் கட்டணம் | 3000/= | 3750/= | 6500/= |
| 1/2 பக்கம் கட்டணம் | 6000/= | 7500/= | 13000/= |
| 1 பக்கம் கட்டணம் | 12000/= | 15000/= | 26000/= |

வரி விளம்பரக் கட்டணம் (20 சொற்கள்) 75/=
இதற்கு மேல் வரும் சொற்கள் ஒவ்வொன்றிற்கும் 5/= வீதம் அறவிடப்படும். 30 சொற்கள் வரை அமையலாம்.
வெள்ளிநாதத்திற்குரிய கறுப்பு/வெள்ளை விளம்பரங்கள் திங்கட்கிழமை நண்பகலுக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.
வெள்ளிநாதம் கலர் விளம்பரம்/விசேட தினங்களில் கலர் விளம்பரம் போடுவதாயின் ஒரு கிழமைக்கு முன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**எமது விளம்பர பணிமனை முகவரிகள்:-**

யாழ்சாலை, கிளிநொச்சி. பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு. சர்வதேசதொலைத்தொடர்புசேவை, மல்லாவி.

**தொலைபேசி**
021-2283948
060-2213244

**தொலைநகல்**
021-2283948
060-2213244

**மின் அஞ்சல்**
Daily@ eezhanatham.com
natham23ela@yahoo.com


(19ஆம் பக்கத்தொடர்ச்சி...)
அத்துடன் இவர்கள் குடிநீருக்கு பெரிதும் அல்லலுறவேண்டியுள்ளதுடன் இவர்களின் வீடுகளில் மலசலகூடவசதிகள் இன்றி காணப்படுகிறது. இப்பகுதியில் இலகுவில் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதில் இடம்பெயர்ந்து படகுதுறை பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகள் மிகவும் சிறிய குடிசைகளாகவும் அடிப்படை வசதிகளற்றதாகவும் காணப்படுகிறது.

குடிநீர்ப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக குழாய்நீர் விநியோகம் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இருப்பதாக இப்பகுதி மக்கள் நம்புகிறார்கள். அதுமாத்திரமன்றி இம்மக்கள் குடிநீருக்காக நாளாந்தம் சராசரியாக 05-10 ரூபா வரை செலவு செய்கின்றனர்.வறிய மக்கள் வாழும் இப்பகுதியில் நல்லதண்ணி பெறமுடியாதுள்ளது. அனைத்துக் கிணறுகளும் உவர்நீர்க்கிணறாகவே உள்ளது. இம்மக்கள் குடிநீருக்கு கணிசமான தொகையினை செலவு செய்கின்றனர். இது வறிய மக்களின் வாழ்க்கைச் செலவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம். அத்துடன் சுத்தமற்ற நீர்ப்பயன் பாட்டினால் ஏற்படுகின்ற நோய்களினால் மரணங்களும் சம்பவிக்கின்றன. எனவே இப்பகுதி வாழ் மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டியது அவசியமாகின்றது.

இது இவ்வாறிருக்க இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டப்பட்டு ஆறுமாதகாலமாகியும் அது நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. மருத்துவவசதி பின்தங்கிய மக்கள் தங்களது மருத்துவத் தேவையை பூர்த்திசெய்ய முழங்காவில், அல்லது பள்ளமடுவிற்கு செல்கின்றார்கள். தாய் சேய்சிகிச்சை உட்பட மருத்துவ நடவடிக்கைகள் ஒரு பிறிதொரு கட்டடத்தில் நடத்தப்படுகின்றது. இவ்வாறு நடத்தப்படும் கட்டடத்திற்கு வாடகை வழங்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இன்றைய சூழலில் கல்வியே மனிதனின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக உருவெடுத்துள்ள நிலையில் இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கல்வியில் பின்னடைவு ஏற்படுவதாகவும் கூறுகின்றனர். இப்பாடசாலைக்கு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இப்பகுதியில் உள்ள கல்விசார் சமூகத்தின் கருத்துப்படி இப்பாடசாலை உயர்தரமாக தரமுயர்த்த வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.


**ஒக்ரோபர் 10 தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்படும் பெண்களுக்கான**

## ஓவியப்போட்டி.

### போட்டிக்கான விதிமுறைகள்:

- போட்டியில் வயது வேறுபாடின்றி அனைத்துப் பெண்களும் பங்குபற்றலாம்.
- போட்டிக்காக வரையப்படும் ஓவியங்கள் அனைத்தும் சமூகப் பிரச்சினைகளையோ அன்றி பெண்களின் முன்னேற்றம் சம்பந்தமான கருத்துக்களையோ எடுத்துக் கூறவேண்டும்.
- வர்ண ஊடகமாக நீர்வர்ணத்தையோ அன்றி சோக் (பெஸ்ரல்) கெட்டிச்சாயம் எண்ணெய் வர்ணம் என்பவற்றில் ஏதாவது ஒன்றினைப் பயன்படுத்தலாம்.
- ஓவியத்தின் அளவு:- A3

போட்டியாளர்கள் பெயர், முகவரி, போட்டித் தலைப்பு என்பனவற்றை தனித்தாளில் தெளிவாக எழுதி ஆக்கத்துடன் இணைத்து 28-09-2004ஆம் திகதிக்கு முன்னர்

தமிழீழபெண்கள் ஆய்வு நிறுவனம்,
2ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு
அனுப்பி வைத்தல் வேண்டும்.

(சி-10209)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

# பாவலன் பதில்கள்



*அன்பின் பாவலரே!*

*சந்திரிகா அம்மையார் எமது பகுதிக்குள் படையினரை அனுப்பப் போவதாக மிரட்டு கிறாரே?*

**ரமேஸ்.**
**ஸ்கந்தபுரம்.**

அவர் தன் படையினரை 'பாடை'களில் மீளப் பெற விரும்புகிறார் போலும்....

*ஐயா பாவலரே!*

*கதிர்காமர் நாடுநாடாக செல்கிறாரே இதன் உண்மை நோக்கம்?*

**நிஷாந்தி.**
**பண்டாரிக்குளம்.**

எதிர் காலத்தில் அவர் நாடோடியாக அலையட் போகிறார் போலும்... தமிழீழம் கிடைத்தும் அவர் நாடோடியாவது உறுதி தானே....!

*அன்பின் பாவலரே!*

*நடிகர் பிரசாந், தமிழீழ நிலைமையினை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் படம் நடிக்கப் போவதாக கூறியுள்ளாரே நடக்குமா?*

**சசி.**
**கிளிநொச்சி.**

முதலில் அவர் தமிழ் நாட்டின் இன்றைய அவல நிலைக்கு காரணமாகும் தமிழ்ப்படங்களில் நடிப்பதை நிறுத்தட்டும்....

*பாவலரே!*

*அரசின் பத்தாயிரம் குளம் புனரமைப்புத் திட்டம் பற்றி?*

**விஜி.**
**இணுவில்.**

அதற்குள் வடபகுதிக் குளங்கள் எதுவும் அடங்கவில்லை என்பதைக் கவனித்தீர்களா?

*பாவலரே!*

*அனைத்து உலகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய ரஷ்ய சிறுவர், ஆசிரியர் படுகொலையை புரிந்தவர்கள் மனிதர்கள் தானா?*

**ரூபி.**
**செல்வபுரம்.**

உங்கள் கேள்வியில் தொனிக்கும் சந்தேகமே அதற்கான பதிலை நீங்களே தீர்மானித்து விட்டீர்கள் என்பதை உணர்கிறது. மனிதர்கள் வாழும் உலகெங்கும் மனிதம் மரணித்துக் கொண்டே வருகிறது.

*பாவலரே?*

*சேது சமுத்திர திட்டம் ஆரம்பிக்கப்படுமா.*

**சிவா.**
**உருத்திரபுரம்.**

திட்டம் ஆரம்பித்து வெகுகாலமாயிற்று நடைமுறைப் படுத்துவதில் தான் இழுபறி.

*தமிழீழப்பகுதியில் பரவலாக மீட்கப்பட்ட- மீட்கப்படுகின்ற எலும்புக்கூடுகள் சொல்லும் செய்தி என்ன?*

**ரஜி.**
**யாழ்ப்பாணம்.**

காணாமல் போனோரின் கதைகளே...!

*பாவலரே?*

*ஜே.வி.பி. மலையக அபிவிருத்தியில் அக்கறை காட்டுவதன் நோக்கம் என்ன?*

**சுதா.**
**முல்லைத்தீவு.**

இங்கு கவனிக்க வேண்டியது ஜே.வி.பி மலையகத் தமிழர்களின் அபிவிருத்தியில் அக்கறை காட்டுகின்றதா என்பதேயாகும்.!

*சந்திரிகா யுத்தம் வரவே வராது என்கிறாரே?*

*சுஜி*
*ஜெயந்திநகர்.*

'சமாதானத்திற்கான யுத்தம்' வரவே வராது என்று சொல்லவில்லையே.

*அன்பின் பாவலரே!*

*இலங்கையில் அண்மை நாட்களாக அதிகரித்து வரும் ஆயுத பயன்பாடு பற்றி.*

*கீதா,*
*வட்டக்கச்சி.*

தப்பியோடிய படையினரும், தப்பிப் பிழைப்பு நடத்தும் தமிழ்க்குழுக்களும் ஆயுத மின்றி வாழமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது... அவ்வளவுதான்.

*பாவலரே வணக்கம்!*

*நல்லூர் கந்தன் திருவடியில் சில இளைஞர்களின் செயற்பாடு வெறுப்பூட்டுவனவாக அமைந்துள்ளதே?*

**ரவி.**
**மாங்குளம்.**

ஆலய வளாகத்தில் இறைவனின் திருவிளையாடல்களை துதிப்பவர்கள் இளைஞரின் தெரு விளையாடல்களை வெறுக்கலாமா?

*பாவலரே!*

*அண்மையில் வெளிவரும் சினிமாப் படங்களைப் பார்த்து அடிதடி கும்பலாக அலையும் இளைஞர்களுக்கு தங்கள் அறிவுரை என்ன?*

**தர்மினி.**
**திருவையாறு.**

திரை நாயகர்களைப் பார்த்து தெருநாயகர்களாக அலையாதீர்கள்.!

*பாவலரே!*

*சந்திரிகா சமாதானத்தை முன்னெடுப்பாரா?*

**பிரியா.**
**கூமாங்குளம்.**

அவரின் பின்னிருப்பவர்கள் விடுவார்களா?

*பாவலரே!*

*ஜே.வி.பி சந்திரிகா உறவை நகைச்சுவையாக சொல்வதானால் எப்படிச் சொல்வீர்கள்?*

**திலகநாதன்.**
**பளை.**

ஓடும் புளியம் பழமும் போன்ற உறவு;




*என்ன இண்டைக்கும் ஹெலி வரும் போல காவல் துறைக்காறர் முழத்துக்கொருவர் நிக்கினம்.*

*அது தான் ரூட்பஸ் ஓடின மாரி நெடுக வருது தானே.*

*அது சரி நேற்று முழுக்கப் புக்காரா ஓடித்திரிஞ்சான் அவங்கள் அப்பிடி ஓடாலாமே எங்கட இடத்துக்கு மேலால.*

*அ... விடு பாதைய மறந்து போனான் போல பாத்திட்டுப் போறானாக்கும்.*

*இரத்த பாசம் சுண்டி இழுக்குதுபோல்*

* * *

எப்ப பார் நிவாரணங் குடுக்கிற தெண்டா மட்டும் இந்தச் சனம் எங்க கிடந்து கொட்டுப்படுதோ தெரியா. ஒரு நல்லது பொல்லாதது நடந்தா இப்பிடிச் சனமில்லை. டேய் ஆற்றா முன்னுக்குப் பூருறது நாங்களென்ன வாய்பாக்கவெண்டே வந்து நிக்கிறம்.

*நேய் என்னை முன்னுக்கு விடு உனக்கு கெதியா சாமான் தர.*

*நீயென்ன பெரிய இவனே, சேனாதிபதியா இருந்தாலும் எனக்குப் பயமில்லை. லைனில வா.*

*தயவு செய்து என்னை முன்னுக்கு விடுங்கோ உப்பிடி அடைச்சுக் கொண்டு நில்லாதையுங்கோ.*

*எங்களுக்குத் தெரியும் எங்கட ஒழுங்கு.... ஓ....*

*நேய்! ஒழுங்கா நீ வச்சிரு என்னைக் கடைதிறக்க விடு.*

*என்ன? கடைதிறக்கவோ?*

*பின்ன நான் ஒன்பது மணிக்கே வந்திட்டன் என்ன மனேச்சரெண்டே மதிக்கேல்ல. ச்சா ஒரு டீசன் டிசிப்பிளின்...*

*ஓமடா டீசன் டிசிப்பிளின் அஸ்பிறின் பனடோல் எல்லாந்தெரியும் நீ மனேச்சரெண்டு தெரியா.... கடையத்திற.*

* * *

# படத்திற்கு மெருகூட்டுங்கள் -85



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -85

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

பெயர் : ....................................................

முகவரி : ....................................................

....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# படத்திற்கு மெருகூட்டுங்கள் -84



**தனேஷ்**
**தமிழ்நிலா வீதி,**
**12 ஆம் கட்டை,**
**விசுவமடு.**

## பரிசுக்குரிய வரிகள்

*களமதில் நான் கண்ட காயம்! கைதனில் தானம்மா-என்*
*உளமதில் உறுதியோ உடைந்திடவில்லை*
*நிலமதில் நிமிர்ந்து நான் மீண்டுமோர் களமாட- தமிழ்க்*
*குலமதில் உன் போலத் தாயிருந்தால் போதுமம்மா.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*தேசத்தை காத்திடும் புலிவீரனைக் கண்டதும்*
*தேசத்தாயவள் ஊட்டுறாள் உணவு*
*அந்த பாசத்தின் ஊட்டலில் தானாக வளர்ந்திடும்*
*தேசத்தை காத்திடும் வீர உணர்வு.*

எஸ்.செல்வகுமார்,
யாழ்ப்பாணம்.

*பெற்ற மகனைக் கண்டு பல ஆண்டுகளாச்சு*
*பறந்து வந்து பாசமகனை கண்குளிர கண்டாச்சு*
*பார்த்து மகிழ்ந்து சோறுஊட்டும் ஈழத்தாயே இன்னும்*
*பணி கிடக்கு. உன் புலிமகனுக்கு பெருமை படுதாயே.!*

ந.கங்கா,
கிளிநொச்சி.

*யார் பெற்ற பிள்ளையோ - அல்ல*
*நான் வளர்க்கும் பிள்ளை - நீ*
*ஊர் மீட்டு வந்த உனக்கு*
*ஊட்டுகிறேன் உணவு.*

சி.சிவா,
பருத்தித்துறை.

*ஓ தேசத் தாயே*
*உன் மகனைப்போல் - நானிருக்கையில்*
*உன் கண்ணில் - எதற்கம்மா*
*கண்ணீர்.*

ம.சசிதரன்
புளியங்குளம்.

*பாட்டி! நிலாப்போல சோறு உருட்டி என் வாயை நீ*
*நிரப்புவாய். உன் கை பட்டு அமிர்தமும் தோற்றுப் போகும்.*
*அடுத்த களமும் மீண்டு வந்தால் உனைத்தேடி ஓடோடி*
*வருவான் ஒருகை இயங்காத இந்தப் புலிப்பிள்ளை.*

கா.ஓவியன்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.

புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.



3ஆம் ஆண்டு நினைவலைகள்
மாண்புமிகு மருத்துவனாய்
நற்பணிகள் செய்த
செம்மல் முகில்வண்ணா
நீ வித்தாய் வீழ்ந்தாலும்
பத்துப் பத்தாய் எழும் மருத்துவர்கள்
உன்னடி பணிந்து தம்பணி புரிவர்
கப்டன் முகில்வண்ணன்
வைரமுத்து சுதர்சன்
மட்டக்களப்பு
தாயின் மடியில்
11-06-1977
தாயகத்தின்
மடியில்
12-09-2001
மருத்துவப் பிரிவு
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்
(4912)




Tilko Holidays (Pvt) ltd
Hotels and Guest Houses
Colombo
Trinco
Jaffna
TILKO Holidays
E-mail:-tilkoholidays@yahoo.com
Web Site:- www.tilkoholidays.com
Tel: 0112-713803
026-222 3900
021-222 5969
(சி-10162)




FedEx
Express®
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
WESTERN UNION®
இப்பொழுது உலகின்
எப்பாகத்திற்கும் விரைவாக
பொதிகள், கடிதங்களை அனுப்பிட
நீங்கள் நாடவேண்டிய ஓரே
ஸ்தாபனம்
E.mail:- thirumurugan @ lycosmall.com
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
(சி-10133)
46,ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 2227310
பணம் பரிமாற்றம்
இப்பொழுது உலகின்
எப்பாகத்திலிருந்தும்
துரிதமாகப் பணத்தைப்
பெற்றுக்கொள்வதற்கு




வன்னியில் புதியதோர் உதயம்
YAMATO CUSTOM -90, Z-100
புதிய இயந்திர வடிவமைப்பில்
இலக்கத்தகடு
புத்தகம்
TAX
இன்சுரன்ஸ்
அனைத்திற்கும் 2415/=
மட்டும்
உத்தரவாதம்
3மாதம்
3000km
வரை
இலவசம்
1 ஜக்கற்
1கெல்மற்
1 சாவிசெற்
3சேவிஸ்
இரட்னாஸ் மோட்டோர்ஸ்
யாழ் கண்டி வீதி, கிளிநொச்சி- தொ.பே: 021-228 5756
செரண்டிப் மோட்டோர்ஸ் என்ரபிறைசஸ்(PVT) LTD இன்
அங்கீகாரம் பெற்ற விநியோகமுகவர்
(சி-10161)




EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்
யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு
அழையுங்கள்
021-2223891/6297, 0772348888/2349999,
0112372952/953, 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com
e-mail- reservations@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை